1206

தொழில்

INDUSTRY

ஆசிரியர்: K. பெருமாள் உடையார்

25 காசு

"LINGAM"

Energy Food Biscuits, Cakes Etc.

★

Manufactured by

Lingam Biscuit Company,

90, Adam Sahib Street,

Royapuram :: Madras-13.

★

AVAILABLE ALL OVER MADRAS

BUY, EAT AND ENJOY.

LB-3.

தொழில்

இந்த இதழில்

15—9—59

போலீஸ் நூற்றுண்டு விழா! ... 3
இந்திய அரசவையில் தமிழன் குரல்! ... 5
அரசியலின் வரலாறு ... 9
யாருக்குப் பிறந்தவர் ... 13
சுமதியின் சபதம் (தொடர் கதை) ... 17
தொழிலைத் துதிபாடிய கவிஞர் ... 33
சிதைந்த கனவு ... 37
டாக்டர் தமாஷ் ... 46
தேர்தல் பைத்தியம் ... 49
கைதி ... 57
கலைமணம் ... 67

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

போலிஸ்-படையின் நூற்றாண்டு விழா.

சென்னை மாநில போலீஸ் படையின் நூற்றாண்டு விழா வையொட்டி, போலீஸ் கான்ஸ் டபிள்களின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பள ஏற்பாடு சம் பந்தமாக, சென்னை மாநில கவர்னர் ஸ்ரீ. விஷ்ணுராம்மேதி அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளாவது:—

சென்னை போலீஸ் படை தான் இந்தியாவிலேயே மூதலாவதாக முறையாக 1859ல் அமைக்கப் பட்ட போலீஸ் படை ஆகும். 1959 ஆகஸ்ட் 23லிருந்து செப் டம்பர் 6ஆம் நாள் வரை அத னுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடினோம்.

இந்த விழா சம்பந்தமாக, எஸ். எஸ். எல். சி. மெட்ரிக் படிப்புக்கு மேல் படிக்க உத்தே சித்துள்ள கெஜட் பதிவில் லாத போலீஸ் அதிகாரிகளின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளத் திட்டம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தரக போலீஸ் அலுவலர்க ளின் வருமானம் குறைவாக இருந்தபோதிலும், தங்கள் குழந்தைகளை மேல்படிப்பு படிக்க வைத்து, அவர்களை வாழ்க்கைக்குத் தயாராக்க வேண்டும் என்ற ஆர்வம் அந் தப் பெற்றோர்களுக்கு நிறைய இருக்கிறது. தகுதியானவர்க ளுக்கு உபகாரச் சம்பளம் மூலம் உதவி அளிக்கவேண்டும் என்பது எப்போதுமே உணரப் பட்டுவந்திருக்கும் விஷயம் ஆகும். போலீஸ் அதிகாரிக ளின் நன்கொடைகள், கொ ண்டு ஏற்படுத்தப்பட்ட போ லீஸ் க்ஷேம நல உதவி நிதியி லிருந்து உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டும் வருகிறது. ஆனால் போதிய நிதி வசதி இல்லாதது காரணமாக மிகக் குறைந்த அளவு நபர்களுக்கே உபகாரச் சம்பளம் தரப்படு கிறது. எனவே இக்காரியத்துக் காக போலீஸ் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்; இந் தச் சமயத்தில் நன்கொடைகள் கோரப்படுகிறது.

தம்மிச்சையாக உபகாரச் சம்பளம் அளிக்க முன்வருப வர்கள் அரசாங்க உள்நாட்டு லாகா காரியதரிசி, சென்னை-9 என்ற முகவரிக்கு நேரிடையாக எழுதலாம். யார் பெயரால் உபகாரச் சம்பளம் என்பதை யும் குறிப்பிடலாம். குறைந்த பட்ச நன்கொடைத் தொகை ஒரு உபகாரச் சம்பளத்துக்கு ரூ. 15,000 அல்லது 16,000 ஆகும். இந்த அளவுத் தொ கையை அரசாங்கம் முதலீடு செய்தால் வருஷத்துக்கு ரூ. 500 கிடைக்கும். இந்த வட்டித் தொகைதான், மாணவர்களுக் குத் தரப்படும் உபகாரச் சம்ப ளத்தின் அளவு ஆகும். இந்த வகையில் நன்கொடை அளிக் கப்படும் பணத்துக்கு வருமான வரியிலிருந்து சிலவரம்புகளுக் குட்பட்டு, விலக்களிக்கப்படும்.

சட்டம், ஒழுங்கின் பாதுகாவ லர்களான நமது போலீஸ் படையைப் பற்றி நாம் பெரு மையடையவேண்டும். அறநிலை யங்கள், வர்த்தக ஸ்தாபனங் கள், தொழில் அதிபர்கள், மாநிலத்தில் வசதியான நிலை மையில் உள்ள குடிமக்கள் ஆகியோர் இந்த நல்ல காரியத் துக்காக தாராளமாக உதவும் படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர்; கே. பெருமாள் உடையார்.

தொழில் 2	சென்னை, 15—9—'59	இதழ் 10

போலீஸ் நூற்றாண்டு விழா!

போலீஸ் இலாகா முறையோடு செயல்படத்தொடங்கிய நூற்றாண்டு நினைவு விழா தமிழ் நாடெங்கும் மிகமிகச் சிறப்பாக நடைபெற்றது.

போலீசாரின் கடமை, பல தர்மசங்கடங்கள் அடங்கியதாகும். உண்மையில் போலீசாரின் சேவை, பல சிக்கல்களைக் கடந்து நியாய உணர்ச்சியோடு, செயல்பட்டுத் தீர வேண்டிய அவசியத்தைக் கொண்டதோடு, பற்பல சோதனைகளை அன்றாடமும் உண்மைக்கும் புரட்டுக்கும் இடையே நின்று சமாளித்தாகவேண்டிய கடமையும் போலீஸாருக்கு உண்டு.

போலீஸ் இலாக்கா, பொதுவானது; அங்கு உண்மைக்குத்தான் முதலிடம் கிடைக்கும், என்ற உணர்ச்சி மக்களிடம் பரவி இருக்கிறது. அகில இந்தியாவிலும் தமிழ்நாடு போலீசாரின் திறமைக்கும் சேவா நோக்கத்திற்கும், பொறுப்புக்கும், யோக்கியதைக்கும், கட்டுப்பாட்டிற்கும் தனி மதிப்புண்டு என்பதை எண்ணிப் பெருமையில் பூரிக்கும் நாம், நூற்றாண்டு கண்ட தமிழ்நாடு போலீஸ் இலாகாவுக்கு வாழ்த்தும், வணக்கமும் செலுத்துகிறோம்.

ஒரு சில பிற்போக்குக் கூட்டங்கள் தமிழ்நாட்டில் குழப்பத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தி மக்களை அழிவுப்

ஸ்ரீ ராதாகிருஷ்ணனின் 72-வது ஆண்டு பூர்த்தி

நமது உதவி ஜனாதிபதியும், அறிவும் திறனும் ஒருங்கே அமையப் பெற்றவருமான, ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு 72 வயது பூர்த்தியாகி விட்டது. ஜனாதிபதி, டாக்டர் ராஜேந்திர பிரசாத், பிரதமர் ஸ்ரீ நேரு ஆகிய தலைவர்களின் பாராட்டுரையை நிறையப் பெற்றவர். உதவி ஜனாதிபதியாக அவர் செய்தசேவைகள் பாராட்டத்தக்கவை. சீரும், சிறப்புடன், பல ஆண்டுகள், வாழ்ந்து, நாட்டுப் பணியை நல்ல முறையில் செய்ய அவருக்கு ஆண்டவன் அருள் புரிவாராக! தொழில் அவரை பாராட்டுகிறது.

பாதைக்கு இழுத்துச் செல்லும்போது, நமது தமிழ்நாட்டு போலீஸ் கண்காணிப்போடு தக்கநடவடிக்கை எடுத்து, தமிழ் நாட்டில் அமைதியை ஏற்படுத்தி, நமக்குப் பாதுகாப்பு கொடுத்ததை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

உடல், பொருள், ஆவி அத்தனையையும் தத்தம் செய்து 'மக்கள் பணியே, எங்கள் பணி' என்ற சொல்லளவில் இல்லாமல் செயல் முறையிலும் காட்டிக்கொண்டிருக்கிறவர்கள் யாரென்றால், அவர்கள்தான் போலீஸ் நிர்வாகஸ்தர்கள் என்பதை நாம் மறக்க முடியாது; மக்கள் தலைவரான நமது முதன் மந்திரி ஸ்ரீ. கே. காமராஜ் அவர்களின் ஆட்சியில் ஸ்ரீ. பக்தவத்சலம் அவர்கள் போலீஸ் மந்திரியாக இருக்கும் போது போலீஸ் இலாகாவின் நூறாண்டு விழா, வெற்றிகரமாக நடந்தது நமக்குப் பெருமை அல்லவா?

போலீஸ் ஐ. ஜி., டி. ஐ. ஜி., போலீஸ் உள்படப் போலீஸார் அனைவருக்கும் தொழில் பத்திரிகை தன்னுடைய வாழ்த்தையும், வணக்கத்தையும் செலுத்துகிறது.

இந்திய அரசவையில் தமிழன் குரல்!

ஒழுக்கமும், ஆட்சித் திறனும், அறிவும், பண்பும் ஒருங்கே அமையப்பெற்ற பழம்பெரும் தேசபக்தர் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள், இந்திய அரசாங்கத்தில் போக்குவரத்து மந்திரியாகப் பதவி ஏற்றுள்ளார்; நாடு முழுதும்-குறிப்பாகத் தமிழ்நாடு முழுதும் புதிய நியமனத்தைப் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை, ஆட்சித்துறையில் சற்றேறக்குறைய அரை நூற்றாண்டு அனுபவம் உள்ளவர் நமது டாக்டர். அவரது குரல்இனி மத்திய அரசவையில் முழங்கும்.

சென்னை மாநில முதன் மந்திரியாக (1926-30) டாக்டர் சுப்பராயன் பதவி வகித்தபோது, ஆற்றிய பணிகள் பலப்பல. பின் மாநிலச் சட்ட மந்திரியாக 1937 முதல் 1939 வரை, அவர் பதவி வகித்த போது, சட்டமும் ஒழுங்கும் சிறந்த முறையில் நிலைநாட்டப்பெற்றது; அன்று அவர் போட்ட அஸ்திவாரமே இன்றுவரை விளங்கி வலுவுடன் வருகிறது.

1949 முதல் 1951 வரை, இந்தோனேஷியாவில் இந்தியத் தூதுவராக அவர் பணியாற்றியபோது, தென்னிந்தியா கைத்தறி துணிகளை இந்தோனேஷியா இறக்குமதி செய்வதற்கு அவர் அரும்பாடுபட்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

1921 முதல் 1936 வரை சென்னை மேல் சட்டசபை உறுப்பினராக இருந்தார். 1936ல் சென்னை சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1954ல் டில்லி ராஜ்ய சபை உறுப்பினராகத் தெரிவு பெற்றார். சென்ற பொதுத் தேர்தலில், திருச்செங்



சென்னை, மயிலை, கபாலீஸ்வர ஆலயத்தில் 6-9-59 அன்று காலை, "தொழில்" ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் அவர்களின் 3வது ஆண் குழந்தைக்கு "தட்சிணமூர்த்தி" என்ற பெயரை ஸ்ரீ எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் வைத்து ஆசீர்வதித்தார்கள்.

கோடு தொகுதியிலிருந்து பெருவாரி வாக்குகள் பெற்று பாராளு மன்றத்தின் லோக சபை உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

டாக்டர் சுப்பராயனுக்கு 70வது வயதாகிறதென்றால் யாரும் நம்பமாட்டார்கள். உழைப்பால், உரம் பெற்றவர் அவர். அரசியல் சிக்கல்களைச் சிறந்த முறையில் தீர்த்து வைக்கும் தனித்திறன் படைத்தவர் டாக்டர் சுப்பராயன். அனைத்திலும் சிறந்த பண்பு; அவர்தாம் ஏறிவந்த ஏணியை எட்டித்தள்ளுபவரல்லர். ஆம்! இன்றும் காங்கிரஸ் ஊழியர்களின் உற்ற நண்பர்களில் ஒருவராக விளங்குபவர் அவரே.

பிரதம மந்திரி ஸ்ரீ நேரு, பண்டித பந்த் போன்றவர்கள் வரிசையில் வைத்துப் போற்றப்படுபவர் நமது டாக்டர். வயதிலும் ஆற்றலிலும் முதிர்ந்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் நாட்டுக்கும் தமிழ்மக்களுக்கும் நல்ல பணியாற்றிக் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசுவார்கள் என்பதில் ஐயமில்லை; அவர் ஆட்சி சிறப்புற்றோங்கத் "தொழில்" தன் மனங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ் நாட்டின் தவப்பயன்!

இந்த மாதம் 4ந் தேதி வெள்ளிக்கிழமை தமிழ் நாட்டுக்கே ஒரு நன்னாள்; பொன்னாள்; புனித நாள்! ஆம்! நிலையான நல்லாட்சி தமிழகத்தில் நடைபெறுவதற்கு

தூண் போல விளங்கும் இரு பெரியார்கள் மறுபிறப்புப் பெற்ற நாள் என்றால், அதைப் பொன்னாள் என்று சொல்வது கூடப் போதாது! ஒரு கம்பனோ, இளங்கோவடிகளோ அல்லது ஔவைப் பிராட்டியோ இருந்தால் எத்தனை எத்தனையோ கவி மாலைகள் புனைந்திருப்பர்; வாழ்த்துப் பாக்கள் பாடி மகிழ்ந்திருப்பர். இது உண்மை; வெறும் உயர்வு நவிற்சியில்லை.

நாட்டின் நல் வாழ்வுக்காக பல திட்டங்கள் வகுக்கும் நாட்டு வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்களும், அற நிலைய அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களும் 4-ந் தேதி இரவு விமானத்தில் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றனர். நள்ளிரவில் நாகபுரி அடைவதற்குமுன்பே பருவ நிலை சீராக இல்லை என்று அறிவிக்கப்பட்டது. நல்லவேளை, தமிழகத்தின் தவப்பயனாக அமைச்சர்கள் இருவரும் மீண்டும் சென்னை திரும்பவேண்டியதாயிற்று. இரவு 2-30 மணிக்கு அமைச்சர் பெருமக்கள் இருவரும் தமிழகத்தின் தலை நகர் திரும்பினர். தலைக்கு வந்த ஆபத்திலிருந்து மீண்டனர் நல்லவர் இருவரும். இந்த நிகழ்ச்சியை நினைக்கத் தமிழர்கள நற்பேறு புரிந்த நன் மக்கள என்ற எண்ணமே சிந்தனையில் மேலோங்குகின்றது.

ஒழுங்கும், அறிவாற்றலும் கூடியதான ஜனநாயகம் உலகிலேயே மிகச் சிறந்ததாகும். துவேஷமும் அறியாமையும் மூட நம்புக்கையும் நிறைந்த ஜனநாயகம் தன்னைத்தானே குழப்பத்தில் ஆழ்த்திக் கொள்வதுடன் அழிவையும் தேடிக் கொள்ளும்.

—காந்தி.

தமிழ் நாட்டின் தவப்பயன் !

திரு. பக்தவத்சலம் தனிச்சிறப்புள்ள ஒரு மாவீரர். முதலில் சென்ற விமானம் பருவ நிலைக் கோளாறு நிமித்தம் சென்னை திரும்ப வேண்டிவந்த போதிலும் கடமையைப் பெரிதெனக் கருதி மறுவிமானத்தில் துணிச்சலுடன் டில்லி சென்றார். இதுவன்றோ தமிழ் வீரம்? முதல் பயணம் தடைப்பட்டதென்பதற்காகப் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் மீண்டும் விமானத்திலேயே டில்லி சென்ற அறநிலைய அமைச்சரின் அஞ்சாமை இன்றைய இளைஞர் உலகுக்கு ஒரு எடுத்துக்காட்டு.

- ஸ்டாண்டர்டு சாவிமார்க் கம்பி மத்தாப்புக்கள்
- ரெட் போர்ட், சாவி மார்க் பட்டாசு ரகங்கள்
- மயில் மார்க் மத்தாப்புக்கள்
- மயில் மார்க் கேப் வெடிகள்
- மயில் மார்க் பல நூதன ரகங்கள்

★

தயாரிப்பவர்கள் :

ஸ்டாண்டர்டு பயர் ஒர்க்ஸ் இண்டஸ்டிரீஸ், சிவகாசி.

சேல்ஸ் டிப்போ

14-B, ஆண்டர்சன் தெரு, மதராஸ்-1.

அரசியலின் வரலாறு

சி.ஜெ.எம்

தேன்மொழிக்கு,

அரசாங்கம் எப்படி உதயமானது? மனிதர்கள் எப்போதுமே, ஒரு அரசியல் நிறுவனத்தின் கீழ்கட்டுப்பட்டு இயங்கினார்களா? அப்படி அரசியல் நிறுவனத்தின் கீழ் கட்டுபட்டு மக்கள் இயங்கி வாழாமல் இருந்திருந்தால், அப்பூர்வீக மக்களை எந்த சக்தி எப்படி, கட்டுபாட்டுடன் ஒரு அரசியல் நிறுவனத்தின் கீழ் கொண்டு வந்தது? என்பவை போன்ற பற்பல அரசியல் கேள்விகளைக் கேட்டுநீ காகிதம் எழுதி இருந்தாய். நான் கூறும் பதில்களை, நீ ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். உன்னுடையக் கேள்விகள், உண்மையிலேயே சிக்கலானவைகள்; மாபெரும் அரசியல் தலைவர்கள், உன்னுடையக் கேள்விக்கு பற்பல கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்; அவர்கள் கூறிச் சென்ற கருத்துக்களை நான் உனக்கு தெரிவிக்கிறேன். முன்னால் உனக்கு நான் எழுதிய காகிதத்தில், "கடவுள் ராஜ்யம்" என்று குறிப்பிட்டது உனக்கு ஞாபகம் இருக்கலாம். அதில் நான் குறிப்பிட்டிருந்தேன் மதம் ஒரு வழியில் பூர்வீக மக்களை ஒரு கட்டுப்பாட்டுடன், அரசியல் நிறுவனத்தின் கீழ் கொண்டு வந்தது என்று.

நீ கேட்ட கேள்விகளுக்கு தகுந்தவாறு, பற்பல, அரசியல் தத்துவங்கள் உருவாகியுள்ளன. அவைகளில் ஒன்று சமூக காண்ட்ரக்ட் தத்துவம் (Social Contract Theory). இந்த தத்துவத்தைப்பற்றி சிறிது பார்ப்போம். சமூக காண்ரக்ட் தத்துவம் கீழ்கண்டவாறு கூறுகிறது. "அரசாங்கம் மக்களுடைய, கூட்டு ஒப்பந்த அறிக்கையின் (Contract) மேல் உதயமானது. உலக மக்களை இரண்டு காலங்களாகப் பிரிக்கலாம்; அரசாங்கம் உதயமாவதற்கு முற்பட்ட காலத்து மனிதர்கள். அரசாங்கம் உதயமானதற்கு பிற்பட்ட காலத்து மக்கள்.

அரசாங்கம் உதயமாவதற்கு முற்பட்டகாலத்து மக்களுக்கு அரசாங்கம் என்று ஒரு அ

சியல் நிறுவனம் கிடையாது. அவர்களுக்கு சட்டங்களைப் பற்றி ஒன்றும் தெரியாது; சட்டதிட்டங்களை வகுக்கும் தனி மனிதனே, அந்த சட்ட திட்டங்களைப்பின்பற்ற மக்களைத் தூண்டக்கூடிய தனி நபரோ, அப்போது கிடையாது. அப்போது வாழ்ந்த மக்கள், இயற்கை அன்னை வகுத்த வழிகளைப் பின்பற்றினார்கள், இயற்கையாக அவர்கள் எவைகளைச்செய்வார்களோ, அவைகளையே, அவர்கள் செய்து வந்தார்கள். காலப்போக்கில், பூர்வீக மக்களும் தங்களுக்கென்று ஒரு அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்று ஆர்வம்கொள்ள ஆரம்பித்தார்கள். ஆகவே; அவர்கள் தங்களுக்குள்ளான சில இயற்கையான உரிமைகளை விட்டுகொடுத்து காண்டாக்ட்முறைபடி அரசாங்கம் எற்படுத்தி அந்த அரசாங்கம் வகுக்கும் சட்டதிட்டங்களைப் பின்பற்ற முன்வந்தார்கள்.

அரசாங்கமே, இல்லாமல், இயற்கை காட்டிய வழிகளைப் பின் பற்றிய அம்மக்கள், எப்படி அரசாங்கம் நிறுவமுன் வந்தார்கள்? ஏன் அவர்கள் அரசாங்கம் நிறுவ ஆசை கொண்டார்கள்? அப்படியானல் அரசாங்கம் நிறுவ மக்கள் காண்ட்ராக்ட் (contact) எழுதி கொடுத்து இருந்திருக்கவேண்டும்; இந்த காண்ட்ரக்ட், யாரால், யாருக்கு எழுதிகொடுக்கப்பட்டது? காண்ட்ராக்டின் ஷரத்துக்கள் எவை? ஆகியவைகள் போன்ற கேள்விகளுக்கு, சிறந்த அரசியல் ஞானிகள் வெவ்வேருன கருத்துக்களை தெரிவிக்கிருர்கள். ஆனல், இந்த சமூக காண்டராக்ட் தத்துவ (Social Contract Theory) த்தை உருவாக்கிய அரசியல் ஞானிகளெல்லோரும், ராஜ்யம், மக்களால் ஏற்படுத்தப்பட்டது. மக்களுடைய காண்ராக்ட் மூலம் தான் ராஜ்யமும், அரசாங்கமும் உருவாகின, என்ற கருத்தை ஒப்புக் கொள்ளுகிருர்கள்.

ராஜ்யம் காண்ட்ராக்ட் மூலம் உருவானது, என்பதற்கு சில அரசியல் தலைவர்கள் கூறிய கருத்துக்களை நான் உனக்குக் கூற ஆசைபடுகிறேன். சந்திரகுப்த மௌரியர் (கி. மு. 321-300) காலத்தில் கௌடில்யா என்று ஒரு மந்திரி இருந்தார்; அவர் ஒரு பழுத்த அரசியல் ஞானி; சிறந்த அறிவாளியும் கூட; "சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்குவது போல, பலமற்ற மனிதனை, பலமுள்ள மனிதன் விழுங்கினன்: ஆகவே, பலமற்ற மனிதன் நசுக்கப்பட்டான். பலமுள்ள மனிதன் வாழ்க்கையில் உயர்த்தப்பட்டான். பூர்வீக மனிதர்கள் இப்படிப்பட்ட ஒரு பயங்கர சூழ்நிலையில் தான் வாழ்ந்தார்கள். மனுவை (Manu) மக்கள் அரசராக, தேர்ந்தெடுத்தார்கள் தானியங்களில் 1/6 பாகத்தையும், வியாபார பொருட்களில் 1|10 பாகத்தையும் மக்கள், வரியாக, அரசாங்கத்துக்கு செலுத்தினர்; அதற்குப்பதிலாக காண்ட்ராக்ட் முறைபடி அரசன், மக்களைப்பாதுகாத்தான். மக்களுக்கு வேண்டிய

உயிர்பாதுகாப்பு கொடுத்தான் என்று கௌடிலயா என்ற அரசியல் ஞானி கூறுகிறார். இதே கருத்துக் களைத்தான், கிரேக்க அரசியல் ஞானியான பிளேட்டோ" (கி. மு. 428—347) வும் கூறுகிறார். ஆகவே, அரசாங்கம், காண்டரக்ட் மூலம்தான் உருவானது, என்பதை "கௌடில் யாவும்", பிளேட்டோவும்" ஒப்புக்கொள்கிறார்கள். இந்த காண்டரக்ட்டின் கூறிய படி மக்கள் எல்லோரும் நடந்தார்கள். விஷம் கொடுக்கப்பட்டு சாக்ரடீஸ் கொல்லப்பட்டார்; சாக்ரடீஸ் நினைத்தால், ஜெயிலில் இருந்து தப்பித்து காட்டிற்கு ஓடி தன்னை காப்பாற்றி இருக்கமுடியும். ஆனால், சாக்ரடீஸ், தன்னை தப்பித்துக் கொள்ள ஆசைபடவில்லை, விஷத்தை மனப்பூர்வமாக, வாங்கி குடித்தார், அம்மகான். காரணம்? "மக்களின் ஒருவனாகிய, நான், மக்கள் எழுதி கொடுத்த, காண்ட்ராக்டிற்கு விரோதமாகச் செல்லக்கூடாது காண்ட்ராக்டின்படி, அரசாங்க உத்தரவை மக்கள் பின்பற்ற வேண்டும். ஆகவே அரசாங்கம் ஆணைபடி நான் விஷம் உட்கொண்டு சாவவேண்டும். நான் சாவுகிறேன்" என்று நினைத்துக்கொண்டு அந்த மகான் விஷம் உட்கொண்டு மரண தேவியை அணைத்துக் கொண்டார்.

இதை ஏன் கூறுகிறேன் என்றால், மக்கள், காண்ட்ராக்டின்படி, அரசாங்கம் உத்தரவைப்பின் பற்றினார்கள் என்பதை தெரிவிக்க; இந்த சமூக காண்ட்ராக்ட் தத்துவம், (Social Contract Theory) ஹோப்ஸ் (1588-1679) லாக், (1632-1704), ரூஸோ (1712-78) ஆகிய அரும்பெரும் அரசியல் ஞானிகளால் உருவாக்கப் பட்டது.

இப்படிப்பட்ட காண்ட்ராக்ட் முறைபடிதான் அரசாங்கம் நிறுவப்பட்டது. பூர்வீக மக்கள் இருந்த பயங்கர நிலை, அம் மக்களை, காண்ட்ராக்ட் மூலம் அரசாங்கத்தை நிறுவி, அவர்களைப்பாதுகாக்க ஏதுவாக இருந்தது. மக்கள் பாவத்தில் மூழ்கி இருந்தார்கள், பாவத்திலிருந்து விடுதலை அடைந்து, சுபிட்சமான வாழ்க்கை நடத்த, மக்கள் இம்முறையை கடைபிடித்தார்கள் என்று ஆங்கிலக் கவி "மில்டன்" கூறுகிறார்.

"மனிதன் சுதந்திரமாகப் பிறந்தான். அவன் காலப்போக்கில், அழிவுப் பாதையை நோக்கி சென்றான்; அழிவுப் பாதைக்கு, "ஆதாம்" செய்த பாவம்வழிகாட்டியது." அழிவுப் பாதையில் இருந்து விடுதலை அடைய, பூர்வீக மக்கள் காண்ட்ராக்ட் முறையை கடைபிடித்தார்கள் என்று," மில்ட்டன் என்ற ஆங்கிலக் கவி, Tenure of Kings and Magistrates (1620) என்ற கவியில் கூறுகிறார். மற்றவை உன் அஞ்சல் பார்த்து.

இப்படிக்கு,

"ஜெமார்"

பொழுது சாய்ந்தது, பிடித்த மீன்களையெல்லாம் வீடு கொண்டு வந்து சேர்த்தாகிவிட்டது. மறு நாள் வேலைக்கு வலையை சீர்படுத்திக் கொண்டிருக்கிறார் இந்த மணிப்பூர் மீனவர்.

"யாருக்குப் பிறந்தவர்"?

"ஒட்டு வீட்டிலே பிறந்தவன், ஊர் பேர் தெரியாத குடும்பத்தில் பிறந்தவன்" என்று ஒரு சில பிற்போக்கு அரசியல் வாதிகளுக்குத் தலைவர் என்ற போர்வையி லுள்ளவரும், அறிஞர் என்று தலைக்குப்பட்டத்தைச் சூட்டிக் கொண்டு அடாத செயல்கள் பல செய்து மக்களை அழிவுப் பாதைக்கு இழுத்துச் செல்லுகிறவருமான ஸ்ரீ அண்ணாத்துரை அவர்கள் அவரையே இப்படி குறிப்பிட்டுள்ளார்.

அவர் உதிர்த்தப் பொன் மொழிகளில் "ஊர் பேர் தெரியாத குடும்பத்தில் பிறந்தவன்" என்று தன்னை குறிப்பிட்டதை இங்கு எடுத்துக் கூறவேண்டியது சாலச் சிறந்ததாகும். "ஊர் பேர் தெரியாத நபர்" ஸ்ரீ. அண்ணாத்துரை என்று நாம் குறிப்பிட்டு விட்டால், அண்ணாத்துரையின் சிஷ்ய கோடிகள் நம்மீது சீறிவிழுவார்கள். ஆனால் இப்படி கூறியவர் வேறு யாருமில்லை; ஸ்ரீ அண்ணாத்துரையேதான்; காஞ்சிபுரத்தில், தி. மு. க. சார்பில் நடந்த ஒ பொதுக்கூட்டத்தில் கூறியுள்ளார். பிரசுரித்த பத்திரிகை, "தனி அரசு". அண்ணாவின் கூடாரத்தில் காமிட்டுக் கொண்டு இருக்கிற, அண்ணாவின் தம்பிகளிலே ஒருவரான ஸ்ரீ ஆசைத்தம்பியின் பத்திரிகையான "தனி அரசு" தான் மேற்கூறிய செய்தியை, 1-9-59 ந்தேதி பிரசுரித்திருக்கிறது.

அண்ணாத்துரைக் கூறியது நூற்றுக்கு நூறு உண்மை: நாம் அவர் கூற்றை மறுக்கப் போவதில்லை. "ஊர், பேர், தெரியாத குடும்பத்தில் அண்ணாத்துரை பிறந்தார்" என்பதை எல்லோரும், ஒருவித ஆட்சேபனையில்லாமல் ஒப்புக் கொள்வார்களென்பது வெட்ட வெளிச்சமான உண்மையாகும்.

ஊர், பேர் தெரியாத நபர் தகப்பனர் பேர் தெரியாத நபர்-திராவிட முரசு கொட்டும் தீரர்—எல்லலாமே ஒரே நபர் அந்த நபர்தான் அண்ணாத்துரை; அவர் ஒரு தனிப்பெருந் தலைவர் என்று சில்லறைத் தேவதைகள் வாய் கிழியக்கூச்சல் போடுகிறார்கள். யாருக்குப் பிறந்தார்? எந்த ஊரில் பிறந்தார்? எப்படி பிறந்தார்? என்று சாதாரண மனிதனுக்குத் தெரியக்கூடிய இந்த உண்மை, கூட திராவிட அறிஞருக்குத் தெரியாமல் போனது விசித்திரத்திலும் விசித்திரமாக இருக்கிறது; சொந்தக் காரர்களும், சூழ்ந்திருப்பவர்களும், அண்ணாத்துரையின் செவியில் "நீங்கள் ஊர் பேர் தெரியாத குடும்பத்தில் பிறந்தவர்கள்"

என்று கூறி இருப்பார்கள். இந்த ஊர், பேர், தெரியாத நபர், திராவிட நாடு பிரித்து, அரியாசனம் ஏறப்போகிறாராம்! ஊர், பேர் தெரியாத நபர், இந்நாட்டின் பிரஜையாக இருப்பதற்கே லாயக்கற்றவர். பிரஜா உரிமையைப் பெறக் கூட வழி இல்லாதவர். யாருக்குப் பிறந்தவர், எந்த ஊரில் பிறந்தவர் என்று கூறமுடியாத, வழியில்லாத அண்ணாத்துரை, திராவிட முரசு கொட்டப் போகிறாராம். இந்த நபரைத்தலைவர் என்று கூறிக்கொண்டு, சில சில்லறைத் தேவதைகள், வாய்கிழிய, வரட்டுக் கூச்சல் போடுகிறார்கள்; ஊர், பேர், தெரியாத நபரை, உதறித் தள்ளி விடுங்கள்; ஊர் பேர் தெரியாத அண்ணாத்துரையிடமிருந்து, நாட்டுப்பற்று, இனப்பற்று எப்படி எதிர் பார்க்கமுடியும்?

முஸ்லிம் லீக் கலைக்கப்படுமா?

இந்திய முஸ்லீம் லீக் தலைவர் ஸ்ரீ. காயி தேமில்லத் ஜனாப் எம். முஹம்மத் இஸ்மாயில் சாஹிப் அவர்கள் திருச்சிக்கு விஜயம் செய்தார்கள். திருச்சி முஸ்லீம் முன்னேற்ற சங்கம் சார்பாக, சங்க ஹாலில், அவருக்கு வரவேற்பும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது. தேநீர் விருந்துக்குப்பிறகு பத்திரிகை நிருபர்கள் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தொழில் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ. கே. பெருமாள் உடையார் அவர்கள் பங்குகொண்டார்கள்

"மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ. உமாயின் கபீர், முஸ்லீம் லீக்கைக்கலைத்துவிட்டு, இந்திய தேசிய காங்கிரஸோடு சேர்ந்து நாட்டுப்பணியில் இறங்குவது நல்லது என்று குறிப்பிட்டுள்ளாரே, அதைப் பற்றி உங்கள் கருத்தென்ன? என்று ஸ்ரீ. கே. பெருமாள் உடையார் கேட்டக் கேள்விக்கு முஸ்லீம் லீக் குறுகிய மனப்பான்மையுடன் இயங்கவில்லை. பரந்த அடிப்படையின் மேல் அது நிறுவப்பட்டது. லீக்கால், தேசிய பற்றுதலுக்கோ, அல்லது ஒற்றுமைக்கோ எவ்வித குந்தகமும் ஏற்படாது. ஆகவே லீக்கைக்கலைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று ஸ்ரீ இஸ்மாயில் சாஹிப் குறிப்பிட்டார்.

முஸ்லீம்கள் சிறுபான்மையோர்கள், ஆகவே அவர்களுக்கு அதிக பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டுமென்று கூறுகிறீர்களே, சென்னை ராஜ்ய முதன்மந்திரி ஸ்ரீ கே. காமராஜ் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினராக முஸ்லீம் பிரமுகரான ஸ்ரீ ஏ. எம். அல்லாப்பிச்சையை நியமிக்கவில்லையா? என்று ஸ்ரீ உடையார் கேட்டக்கேள்விக்கு, ஸ்ரீ அல்லாபிச்சை நியமனத்தை வரவேற்கிறோம்; ஆனால் பிரதிநிதித்துவம் அதிகம் தேவை என்பதைக் கேட்டுக்கொள்கிறோம் என்று ஸ்ரீ. எம். முஹம்மத் இஸ்மாயில் சாஹிப் குறிப்பிட்டார்.

இந்தியாவில் ஆயுர்வேத வைத்திய முறை

இந்தியாவில் சர்க்கார் துறை, தனியார் துறை இரண்டிலும், தற்போது 76 ஆயுர்வேத வைத்திய முறைப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவற்றில் 9 பயிற்சி நிலையங்கள் நவீன வைத்திய முறையும் சேர்த்து போதிக்கப்படுகிறது. இணைந்த ரீதியான பயிற்சி அமைப்பையும், 27 நிலையங்கள் சுத்த ஆயுர்வேத வைத்திய முறை மட்டிலும் அடங்கிய பயிற்சியமைப்பையும் கொண்டனவாக உள்ளன. இவைதவிர, ஆறு சமஸ்கிருதப் பயிற்சிக் கல்லூரிக்கும் ஆயுர்வேத வைத்திய முறையில் பயிற்சி அளித்து வருகின்றன.

இணைந்த முறைப் பயிற்சிக் கல்லூரிகளில் மொத்தம் 7000 மாணவர்கள் வைத்தியத்துறையில் பயிற்சி பெற்று வருகின்றனர். அவற்றிலிருந்து ஆண்டுதோறும் 1,100 பட்டதாரிகள் பயிற்சி பெற்று வெளிவருகின்றனர். சுத்த ஆயுர்வேத வைத்திய பயிற்சி நிலையங்களில் 1,500 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்; அவற்றிலிருந்து ஆண்டுதோறும் 300 பட்டதாரிகள் பயிற்சி பெற்று வெளியேறுகின்றனர்.

பல்வேறு ராஜ்யங்களில் 28 ஸ்தலங்களில் சர்க்கார் நிதி உதவியுடன் ஆயுர்வேத வைத்தியத் துறையில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மத்திய சர்க்கார் 1953-ம் ஆண்டில் ஜாம்நகரில் ஆரம்பித்துவைத்த பயிற்சி நிலையத்தில் உள்நாட்டு வைத்திய முறைகளில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன.

ஆயுர்வேத வைத்தியர்கள் இதுவரை பொதுவாக மருந்துகளைத் தாங்களே தயாரித்து வந்தனர். இந்நாட்டில் மேல்நாட்டு வைத்திய முறைகளும், நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்ததையடுத்து ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கும் மருந்துத் தயாரிப்பு நிலையங்கள் தோன்றலாயின.

தற்போது ஆயுர்வேத மருந்து தயாரிக்கிற நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் பழமையானது பம்பாய் ராஜ்யத்தைச் சேர்ந்த பான்வேலில் 1862-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இந்நாட்டில் பெயர் பதியப்பட்டுள்ள 1,15.000 ஆயுர்வேத வைத்தியர்களும், மற்றும் பெயர் பதிவாகாத 50,000 வைத்தியர்களும் இந்த வைத்திய முறையில் தொழில்



நடத்தி வருகின்றனர். இவர்களில் 25,000 பேர் அதாவது மொத்த எண்ணிக்கையில் 22 சதவிகிதம் பேர் வைத்திய ஸ்தாபனங்களில் பயிற்சி பெற்று வந்தவர்களாகும். பாக்கிப் பேர் பரம்பரை முறையில் பயிற்சிபெற்ற நாட்டு வைத்தியர்களாகும்.

இந்நாட்டில் மக்களில் 2,600 பேருக்கு ஒரு வைத்தியர் வீதமும், 5,000 பேருக்கு ஒரு டாக்டர் வீதமும் இருந்து வருகின்றனர்.

ராஜ்யவாரியாக பஞ்சாப் ராஜ்யத்தில்தான் உச்சபட்ச அளவு பெயர் பதிவாகிய வைத்தியர்கள் உள்ளனர். அங்கு மக்களில் 644 பேருக்கு ஒரு வைத்தியர் வீதம் உள்ளனர். அதற்கடுத்தபடியாக கேரளத்தில் 1334 பேருக்கு ஒரு வைத்தியர் வீதம் தான் இருந்து வருகின்றனர். அஸ்ஸாமில்தான் குறைந்தபட்சமாக அவர்கள் உள்ளனர். அங்கு 10,911 பேருக்கு ஒரு வைத்தியர் வீதம் இருந்து வருகின்றனர்.

பதினன்கு ராஜ்யங்கள், நான்கு மத்திய நிர்வாகப் பிரதேசங்கள் ஆகியவற்றில், 10 ராஜ்யங்களிலும், ஒரு மத்திய நிர்வாகப் பிரதேசத்திலும், நாட்டு வைத்திய முறை தொழில் கட்டுப்பாட்டு தொழில் நடைமுறைக்காக இந்திய வைத்திய முறை போர்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நாட்டில் சுமார் 100 ஆயுர்வேத வைத்தியசாலைகளும், 5372 ஆயுர்வேத மருந்துச்சாலைகளும் உள்ளன.

ராஜ்யங்களிடையே பிரதேச அடிபபடையில் மருந்துசாலைகளின் உச்சபட்ச விகிதாசாரம் விஷயத்தில் கேரளம் முதலிடம் பெற்று நிற்கிறது. மக்கள் தொகை அடிப்படையில் அவற்றில் உச்சபட்ச விகிதாசாரம் விஷயத்தில் ராஜஸ்தான் முதலிடம் பெற்றுவிட்டிருக்கின்றது. கேரளத்தில் 100 சதுர மைல் பிரதேச விஸ்தீர்னத்துக்கு ஒரு மருந்துசாலை வீதமும், ராஜஸ்தானில் 25,759 பேருக்கு ஒரு மருந்துசாலை வீதமும் இருந்து வருகிறது.

இந்நாட்டில் ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுர்வேத மருந்துகள் செலவாவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றின் மொத்த எடை 80 லட்சம் பவுண்டாகும்.

சுமதியின் சபதம்

சி. ஜெ. மார்த்தாண்டம். பி. ஏ.

ஓடிய கதை

நாயக்கர் வீட்டில் தகராறு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து, சுமதி கடத்தப்பட்டாள். "கண்ணப்ப முதலியார் மகள் சுமதி கட்டபொம்மன் சத்திரத்தில் கடத்திவைக்கப்பட்டுள்ளாள்" என்று ஒரு இளம் பெண் போலிஸுக்கு போன் பண்ணினாள். கட்டபொம்மன் சத்திரத்தில், போலிஸ் சென்று பார்த்ததில், சுமதி அங்கு காணப்படவில்லை. கண்ணப்ப முதலியார், கண்கலங்கி நின்றார்.

சுமதி, வீட்டின் கொல்லப்புற வழியாக, வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். முதலியார் உள்ளம் குளிர்ந்தது. "நடந்த விஷயத்தைச் சொல்லம்மா" என்று முதலியார் கேட்க, சுமதி, எல்லா விஷயத்தையும் விளக்கிக் கூறுகிறாள்.

---

13. கள்ளர் குகை!

சுமதி வீட்டிற்குள் வந்ததும் வராததுமாக இருக்கும்போது, தன் மகளைத் தழுவி, உச்சி முகர்ந்த முதலியார். அவளைக் கையில் பிடித்துக்கொண்டு, வீட்டில், ஒரு ஜமக்காளத்தை விரித்து, அதில் அவளைபடுக்க வைத்தார். அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு உன்னிப்பாக, அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தைகளையும் நன்கு கவனித்துக் கொண்டிருந்தார். சுமதி பேச ஆரம்பித்தாள்.

"அப்பா, நீங்கள் அன்று வீட்டை விட்டு வெளியேறிய நேரம், சரியாக 5 மணி இருக்குமென்று நினைக்கிறேன். அன்று எனக்கு மனக்கவலை அதிகமாக இருந்தது; நாயக்கர் வீட்டில் வீசிய புயலை நினைத்தேன்; என் நிலை தடுமாற்றம் கொண்டது. நீங்கள் சென்றதும், வீட்டு வேலைகளை ஒருவாறு செய்து முடித்தேன். தோட்டத்திலுள்ள சூரிய காந்தி செடிக்குத் தண்ணீர் விட்டேன். மனம் அமைதியில்லாததால், 'தேய்ந்த நிலவு,' என்ற நாவலைப் படிக்க ஆரம்பித்தேன். இரவு 9 மணிக்கெல்லாம், நாவலின் பாதிபாகத்தை முடித்துவிட்டேன்; கண் இமைகள், தூக்

கக் சூரியைக்காட்டின. வீட்டை தாளிட்டேன். வாயல் பக்கத்தில் பாயை விரித்துத் தூங்கி விட்டேன். சிறிது நேரம் கழித்ததும், யாரோ, ஒரு ஆள் வெளியிருந்து கதவைத் திறப்பதுபோல் இருந்தது. பொதுவாக சில நேரங்களில், காந்தா இப்படி கதவின் தாளை விரலால் திறப்பது உண்டு. நான் அவள் தான் என்று நினைத்தேன். திரும்பவும் கண்களை மூடிக்கொண்டேன்; வந்தப்பெண் விளக்கை ஏற்றியமாதிரி எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவள் ஏதையோ எழுதிக்கொண்டிருந்தாள். நான் தூக்கத்தில் நன்கு கவனிக்கவில்லை. அது காந்தா என்றுதான் நினைக்கிறேன். பிறகு அயர்ந்து தூங்கி இருக்கவேண்டும்" என்றாள் சுமதி.

"ஆமாம், சுமதி உன் அறையில், செம்பு கந்தக உப்பும், தூக்க மருந்தும் சிதறிக் கிடந்ததே...மேலும் நீ, ஏன் இப்படி லெட்டர் எழுதினாய்...உனக்கு வாழ்க்கையில் என்றுமில்லாத வெறுப்பு ஏன் அன்று ஏற்பட்டது. ஆமாம் நீ எங்கு சென்றாய்" என்று முதலியார் அடுக்கிக் கொண்டு போனார். "என்ன செம்பு கந்தக உப்பா? தூக்க மருந்தா? நான் வாழ்க்கையில் வெறுத்ததாக லெட்டர் எழுதினேனா? என்னப்பா...நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் விளக்கமாகக் கூறுங்கள்" என்றாள் சுமதி பரபரப்புடன்.

உன் அறையில் செம்பு கந்தக உப்பும், தூக்க மருந்தும் சிதறிக் கிடந்தன. வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டதால், சாவத்துணிந்து விட்டதாக நீ எழுதிய லெட்டர் இதோ இருக்கிறது பார்" என்று அவள் அறையில் கிடந்து அன்று அவர் எடுத்த லெட்டரை அவளிடம் காட்டினார்.

"ஐயோ, அப்பா, இந்த லெட்டர் நான் எழுதவில்லை. இது காந்தா எழுத்து; அவள் தான், தற்கொலைசெய்ய நினைத்திருக்கவேண்டும். தற்கொலை செய்வதற்கு அவள் இங்கு ஏன் வரவேண்டும்? நாயக்கர் தாக்குண்ட அன்று நான் அவள் முகத்தை பார்த்தேன். அது பீதிதோய்ந்திருந்தது. அப்போது அவள் தான், செம்பு கந்தக உப்பும், தூக்க மருந்தும் என் அறைக்குக் கொண்டு வந்திருக்கவேண்டும்."

"போ, அம்மா, அவளாவது தற்கொலை செய்து கொள்ள நினைத்ததாவது. நீ பேதைப் பெண். அவள் தான் உனக்கு மயக்க மருந்து கொடுத்து கடத்தி சென்றிருக்கவேண்டும், அவள் மீது நாம் சந்தேகப்படாமல் இருக்க இந்த லெட்டரை அவள் எழுதி, கசக்கி போட்டிருக்கவேண்டும். எப்படியும் நாம் அந்த லெட்டரை பார்ப்போம். பார்த்து அவள் குற்றமற்றவள், வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக சாவத் துணிந்திருக்கிறாள் என்று நாம் நினைக்கும்படி திட்டம் தீட்டி எழுதப்பட்டதாக இருக்கும்; சாவத்துணிந்திருந்தால் அவள் இறந்து போயிருக்கவேண்டுமல்லவா. ஏன் இன்னும் உயிரோடிருக்கிறாள்; லெட்

டரை இப்படி எழுதி, போட்டு விட்டு எவளும் சாவத்துணிவாளா? ஆமாம் எல்லாம் காந்தாவின் சூழ்ச்சிதான்" என்றார் முதலியார்.

"இல்லையப்பா, காந்தா அப்படிப்பட்டவள் அல்ல. நான் நினைக்கிறேன்... அவள் மனதில் ஏதோ தடுமாற்றம் இருந்திருக்கவேண்டும்.

"சரி...சரி...நீ கதையைச் சொல்லு".

'பிறகு எனக்கு ஒன்றும் தெரியாதப்பா, நான் எப்படி வீட்டிலிருந்து கொண்டு போகப்பட்டேன்? யார் எனக்கு மயக்க மருந்து கொடுத்தது? எப்படி கொண்டு போகப்பட்டேன்? இவைகள் எல்லாம் ஒன்றுமே எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஏற்கனவே வேலுவை சந்தேகப்பட்டேன்; அதே நேரத்தில் பாண்டியனையும் சந்தேகப்பட்டேன். பாண்டியன் அடிக்கடி, என்னை பார்ப்பதும் சிரிப்பதும், பல்லை இளிப்பதுமாக, கொஞ்ச நாட்களாக இருந்தான். நான் அவன் முகத்தைக்கூட பார்ப்பது கிடையாது... நான், கட்டப்பொம்மன் சத்திரம் கொண்டு போகப்பட்டிருக்கவேண்டும். சிறு வயதில் கட்டபொம்மன் சத்திரத்தின் பாதாள அறைக்கு சென்றிருக்கிறேன். கட்டபொம்மன் சத்திரத்தில் நான் இருக்கும்போது, சிறிது என் மயக்கம் தெளிந்திருக்கவேண்டும். நான் ஒரு கந்தல் துணியில் கிடத்தப்பட்டிருந்தேன். மயக்கம் சிறிது தெளிந்ததும், என்

2/21, Pilliar Koil Street,

MADBAS-3

2/21, பிள்ளையார் கோயில் தெரு,

சென்னை-3

இமைகள் இலேசாக திறந்தன. என் பக்கத்தில், ஒரு மெழுகு வர்த்தி அரைகுறையாக எரிந்து கொண்டிருந்தது; நான் திரும்பி படுத்தேன். அப்போது என்முன் மூன்றுபேர் நிற்பது, அந்த மங்கிய ஒளியில் தெரிந்தது. கையைத் தூக்கி போட்டேன் நான் போட்டிருந்த வளையல்கள் நொறுங்கின. அந்த மூன்று பேர்களில் ஒருவள், நம்முடைய எக்ஸ்ட்ரா கீதா. அது எனக்கு நன்கு தெரிந்தது; ஒருவன் நல்ல உயரம் அப்பா. பார்க்க அழகாக இருந்தான். தலையில் முண்டாசு கட்டுக்கட்டி இருந்தான். அவன் கையில் பச்சைக் குத்தி இருந்ததை நான் கவனித்தேன். அவனை எங்கும் பார்த்ததாக எனக்குத் தெரியவில்லை. இன்னொருவன் ஒரே நோஞ்சான் மாதிரி இருந்தான். ஆமாம் அப்பா,...காந்தா என்னை கடத்த நினைத்து ஆவன செய்திருந்தால், நிச்சயம் அவள், கட்டபொம்மன் சத்திரத்தில் அப்போது இருந்திருக்க வேண்டும்; ஆனால் அவள் அங்கு இல்லையே. ஆகையால் தான் நான் நினைக்கிறேன் காந்தா இதில் சேர்ந்திருக்க மாட்டாளென்று. இதற்குள், அந்த நோஞ்சான், மெழுகு வர்த்தியை ஊதி அணைந்தான். கீதாதான் என் மூக்கில் எதையோ ஒரு பவுடரை வைத்தமாதிரி ஞாபகம்...ஆமாம் அதற்குப் பிறகு எனக்கு ஒன்றும் தெரியாது.

"ஆமாம் சுமதி, எக்ஸ்ட்ரா கீதா கைக்குட்டை அங்கு கிடப்பதை நாங்கள் கண்டோம்."

"எக்ஸ்ட்ரா கீதா, நிச்சயமாக இந்த சதிதிட்டத்தில் ஒருவள் என்று நான் ஆயிரம் முறை சொல்லமுடியும். ஆனால் மற்றைய இரண்டு பேரும் யர்ர் என்று எனக்குத் தெரியவில்லை. பிறகு ஒன்றுமே எனக்குத் தெரியாது...விடியற்காலம் 4½ மணி இருக்கும். நான் இருந்த இடம் எனக்கு நன்கு தெரியவில்லை. என்னை மயக்கிக் கட்ட பொம்மன் சத்திரத்தில் இருந்து, அவர்கள் வேறொரு இடத்திற்குக் கொண்டு போயிக்கவேண்டும்...அப்பா அந்த இடம், ஒரு மலையில் உள்ளது. சிறிய பங்களா ஒன்று அம்



மலைமீது இருக்கிறது. அந்த பங்களாவில், ஒரு வயதானபெண் இருக்கிறாள். அவளுக்கு சுமார் 45 வயது இருக்கும். இருந்தாலும் கூட சிறு வயது பெண்போல் இருக்கிறாள். பார்க்க அவள் எலுமிச்சம் பழம்போல் அழகாக இருக்கிறாள். இப்போது கூட அவள் உதட்டுக்குச் சாயம் பூசியுள்ளாள், முகத்திற்கு நல்ல பவுடர் பூசியுள்ளாள். நன்றாக பாட்டுப் பாடக்கூடிய திறமை அவளிடம் அமைந்திருக்க வேண்டுமென்று, அவள் வாய் முணுமுணுத்த பாட்டிருந்து நான் தெரியவந்தேன். அந்த பங்களா மலைமேல் இருக்கிறது. அந்தமலையைக் குடைந்து உள் அறை ஒன்று இருக்கிறது. அடித்தளத்தை பார்த்தால், அதன் கீழ், உள்ளறை இருக்குமென்று யாரும். கூறமுடியாது. எதையோ, ஒன்றை அந்தக்கிழவி அழுத்தினாள். அடித்தளம் விரிந்தது. படிகட்டுகள் வழியாக கீழறைக்குச் சென்றோம். உள்ளே, ஈட்டி, கம்பு, வேல்கம்பு, அறுவாள் இன்னும் பற்பல பயங்கர ஆயுதங்கள் இருக்கின்றன. அழகிய பெண்கள் 5 பேர்களை நான் அங்கு பார்த்தேன். எனக்கு ரொம்ப பயமாக இருந்தது. அறையினுள் நான் கொண்டு போகப்பட்டபோது எனக்கு மயக்கம் தெளிந்திருக்க முடியாது;எனக்கு மயக்கம் தெளியும் போது, நான், அந்தக் கிழவி பக்கம்

படுத்துகிடப்பதைத்தான் நான் உணர்ந்தேன். பிறகு பங்களாவின் மேலறைக்கு வந்துவிட்டேன்; கிழவி ஏதோ ஒருபலகார்ரம் செய்துகொண்டிருந்தாள் நான் அந்த விசையை அமுக்கிக் கீழறைக்குத் திரும்பவும் வந்துசேர்ந்தேன். கீழறைக்குத் தனியே வெளி இடத்திலிருந்து ஒரு பாதை உள்ளே வருகிறது; அந்த பாதை ஒரு ஒற்றயடிப்பாதையை சேர்க்கிறது. நான் கீழறையில் இருக்கும்போது, ஒரு மனிதன் அறையினுள் வந்தான். அந்த மனிதன் முகத்தில், அன்பும், பாசமும் வழிந்து ஓடியது, அவனுடையப் பேச்சில் குழுமை இருந்தது; அவன் என்னிடம், அன்பாகப் பேசினனப்பா, அந்த ஆள் யாரென்று தெரியவில்லை. அவன் கன்னம் கிழிக்கப்பட்டுதைக்கப்பட்டிருக்கிறது! வாய் கோணலாகவும் பார்க்க அருவருப்பாக இருக்கிறுன்; தோள் பட்டையிலும், முதுகிலும், அறுவாள் வெட்டின் தழும்புகள் நிறைய இருக்கின்றன.

அம்மா நீங்கள் யார்? என்று எனக்குத் தெரியும். நீங்கள்கட்டப்பொம்மன் சத்திரத்திலே, கெடுக்கப்பட்டிருப்பீர்கள். ஆனுல் நீங்கள் ரொம்ப புண்ணியவதி. நீங்கள் தற்போது, இருப்பது, பிரபல கள்ளர் கோஷ்டிகளின் தலைவரான பூவலூர் பூதலிங்கம் குகை. இவன் ஒரு மாகாணக்கேடி: நானும் கேடிகளில் ஒருவனுகத்தான் அலைகிறேன். கொள்ளையடிப்பதற்கோ, கொலைசெய்யவோ, நான் அவர்கள் கோஷ்டியில் சேரவில்லை; நானும் இந்தக் கேடி கூட்டத்தால் ஒரு காலத்தில் பாதிக்கப்பட்டவன்தான். இவ்வளவுதான். என்னை நம்புங்கள், குகையைவிட்டு வெளியே வாருங்கள். இந்தப் பாதை அந்தரங்கப் பாதை. இது யாருக்கும் தெரியாது" என்ருன் அந்த மனிதன். முதலில் நான சிறிது தயங்கியபோதிலும், பிறகு மனதைத் திடப்படுத்திக்கொண்டு, . அந்த மனிதன் என்னை அழைத்துச் சென்ருன். மலையில், நிறைய, தேயிலை, காபி தோட்டங்கள் இருப்பதைப்பார்த்தேன்.

அந்த ஒற்றையடிப்பாதை, ஒரு ரோட்டைச் சேர்த்தது; ரோடு மலையைச் சுற்றி சுற்றி போகிறது; ரோட்டடியில் ஒரு கார் நின்றது. காரில் இரண்டு பெண்கள் இருந்தார்கள்; அவர்கள் இரண்டு பேரும் தாயும் பிள்ளையும் என்று அவர்கள் பேச்சில் இருந்து தெரிய வந்தேன்; மகளுக்கு என்வயது தான் இருக்கும்; பெயர் ஜெயராமி; அழகாக இருக்கிருள். மிகவும் நல்லவள். அந்தப் பெண்ணின் தாயுக்கு தமிழ் நன்கு பேசத்தெரியவில்லை. அன்பு தோய்ந்த உள்ளத்தோடு அந்த இரண்டு பெண்களும், என்னைக்காரில் ஏறச்செய்தார்கள்; காரும் சென்றது; நான் காரில் செல்லும் போது அவர்கள் பிளாஸ்கிலிருந்த பாலை எனக்கு ஊற்றி கொடுத்தார்கள். நாங்கள் மலையிலிருந்து காரில் புறப்படும்போது மணி 6 இருக்கும் வானம் நன்கு வெளுத்து விட்டது. பிறகு 3 பேரும், காரில்,

திருநெல்வேலி பீமண்ணு ஓட்டலுக்கு வந்து சேர்ந்தோம்.

எவ்வளவோ கேட்டுப்பார்த்தேன்; என்னதெல்லாமோ கேட்டுப்பார்த்தேன்; எப்படியும் அந்தப் பெண்களைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டுமென்றுதான் துளைத்து துளைத்துக்கேட்டேன்; அவர்களை பற்றீ ஒன்றுமே என்னிடம் கூற அவர்கள் கூறவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் அழுத்தம் திருத்தமாகக்கூறினார்கள். "நாங்கள் உங்களுக்கு வேண்டியவர்கள். ஒருவழியில், உன்னிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள்; எல்லாம் எங்களுக்குத் தெரியும்; காலம் வரும்போது எல்லாம் தெரிய வரும். சுமதி தற்போது ஒன்றும் கேட்காதே உன்னைக்காப்பாற்றவே, உன்னுடைய நிலையை, சூட்சமாக அறிந்து, நாங்கள் இங்கு வந்து சேர்ந்தோம். எப்படியோ உனக்கு ஒரு வித குறைபாடும் ஏற்படவிடாமல் உன்னை தப்பிவித்துவிட்டோம். உன்னை குகையிலிருந்து எங்களிடம் அழைத்து வந்த அந்த நல்லமனிதன் உதவியால்தான் எல்லாம் நடந்தது என்று, அந்தத் தாய் கூறினார்கள்.

ஒருவாறு பீமண்ணு ஓட்டலில் காபி குடித்து விட்டு, காரில் ஊரை நோக்கி, நாங்கள் 3 பேரும் வந்து சேர்ந்தோம்; கார் நம்ம ஊர்,ரயில்வே லெவல் கிராஸிங் வரை வந்து என்னை விட்டுத் திருப்பிவிட்டது. "சுமதி திரும்பவும் சந்திப்போம்" என்று அவர்கள் இரண்டுபேரும் கூற, ,கார் திரும்பியது; எப்படியோ, நான் அந்த அரக்கர்கள் பிடியில் இருந்து தப்பித்துக் கொண்டேன்;அந்த இரண்டு பெண்களும், குகையிலிருந்து, என்னை வெளியே அழைத்து வந்த அந்த மனிதனும், சமயத்திற்கு உதவிக்கு வாராமல் போயிருந்தால், உங்கள் மகள் சுமதி, இதற்குள் மண்ணோடு மண்ணாகிபோய் இருப்பாள். ஆமாம் அப்பா, உங்களுக்கு, அறையில் இருந்தவைகள் செம்பு கந்தக உப்பு, தூக்க மருந்து என்று எப்படி தெரியும்? என்றாள் சுமதி.

"என்ன சுமதி இது எனக்குத் தெரியாதா? நம்ம நர்ஸ் நளினி ஒருநாள் தற்கொலை செய்ய எத்தனித்தாள். அப்போது இந்த சாவு மருந்துகள் பெயரும், அவைகளின் நிறமும் எனக்குத் தெரியும். நர்ஸ் நளினி எல்லாவற்றையும், என்னிடம் கூறி இருக்கிருள்; அவள் சாவு மருந்துகளைப் பற்றி கூறும்போது, காந்தா கூட எங்களோடு இருந்தாள்" என்றார் முதலியார்.

14. சி. ஐ. டி. ராஜாங்கம்!

இதற்குள், சி. ஐ. டி. ராஜாங்கம், கையில் "புரட்சி" என்ற தின பத்திரிகையோடு, வீட்டிற்குள் நுழையவும், சுமதியும், முதலியாரும், புன்முறுவல் பூக்க, அவரை வரவேற்றார்கள். வந்ததும் வராததும், சுமதியை ஒன் அன்பு பார்வை பார்த்துவிட்டு, "என்ன முதலியார்? நம் சுமதி கடவுளால் காப்பாற்றப்பட்டு விட்டாள் என்று தெரிகிறது. எல்லாம் நன்

P. H. முகமது நஸீருத்தீன்

★

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G I பைப் & பைப்

பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

★

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

★

குறிப்பு:—

1/157, தஞ்சை ரோடு (அரிய மங்கலம் ஹமீதியா ரைஸ் மில் எதிரில்) சப் டிப்போவிலும் சிமெண்ட் டில்வரி செய்கிறோம்.

மைக்கே" என்று கூறிவிட்டு சாய்வு நாற்காலியில் போய் சாய்ந்தார் சி. ஐ. டி. ராஜாங்கம்.

"சுமதி, நான்யாரென்று உனக்குத் தெரியுமா?" என்ருர் சி. ஐ. டி.

"ஓ...தெரியுமே. பிரபல சி. ஐ. டி. மிஸ்டர் ராஜாங்கம்; கொள்ளையும் கொலையும் அதிகரித்துள்ள இந்த இடத்திற்குத் துப்பறிய ஸ்பெஷலாக சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர். எனக்கு என்ன, தெரியாதென்று நினைத்தீர்களா...ம்... நான் ஒண்ணும் பாப்பா இல்ல" என்று சிரித்தவாறு பதில் கொடுத்தாள் சுமதி.

"நீ பாப்பாவேதான் உன்னை என் மடியில் தூக்கிவைத்து அப்போது விளையாடுவேன். உன் தாத்தா சுதர்சன முதலியார்...ஆமாம்... அந்த புண்ணியவானுல்தான் நான் படித்து இந்த வேலைக்குவந்தேன். உன் அப்பாவும் நானும் அண்ணன் தம்பி மாதிரி; இந்த விஷயம் உனக்குத் தெரியவில்லையே ஆகையால்தான் உன்னை நான் பாப்பா வென்று கூறுகிறேன்'' என்ருர் சி.ஐ.டி,

''ஆமாம் சுமதி...சி. ஐ. டி. சார் நமக்கு ரொம்பவேண்டியவர்; நாம் வேறு, அவர் வேறு அல்ல; எல்லாவற்றையும் சி. ஐ. டி. சாரிடம் கூறிவிடு. அவர் நம்மைக் காப்பாற்றுவார்,' என் முதலியார் கூறவும் ''ஆமாம் சுமதி நான் உன் மாமா, என்னிடம் எல்லாம் கூறிவிடு, நான் பார்த்துக்

கொள்கிறேன்" என்ருர் சி. ஐ. டி.

"சி. ஐ. டி. மாமா. முதலில் காப்பி, பிறகு...கதை...சரிதானே" என்ருள் சுமதி.

"சரி. இல்லை...காபி மட்டும் போதாது, பலகாரமும் வேண்டும்" என்ருர்.

"ஓ எஸ். இதோ மாமாவுக்கு ஒரு நொடியில் கொண்டு வருகிறேன்"

சுமதி, இரண்டு தட்டுகளில் பலகாரங்கள் கொண்டு வந்தாள். பிறகு இரண்டு டம்ளர்களில் காபி ஊற்றி இருவருக்கும் கொடுத்தாள். காபிக்குப் பிறகு

சி. ஐ. டி. பக்கத்தில் சுமதி உட்கார்ந்து கொண்டு நடந்த விஷயத்தை ஒன்று விடாமல் கூறினாள்; சுமதிச் சொல்லச்சொல்ல எல்லா குறிப்புகளையும் எடுத்துக்கொண்டு, பேனாவின் அடிபாகத்தால், சிந்தனைக் கோடுகள் நிரம்பிய அவர், நெற்றியில் அடித்துக்கொண்டு, யோசித்த வண்ணமாக சுமதியிடம் கேள்விமேல் கேள்வி கேட்டுக் கொண்டு இருந்தார்.

"ஆமாம், சுமதி, கட்டபொம்மன் சத்திரத்தில் நீ ஒரு நபரை பார்த்ததாகக் கூறினாய். அவனைப்பற்றி முழுவிபரமும் கொஞ்சம் சொல்லேன்".

"ஆள் தூய சிகப்பு...நல்ல அழகு,...உயரம் கிட்டத்தட்ட 5½ அடி இருக்கும். கையில் பச்சை குத்தி இருந்தது...நல்ல உறுதியான உடல்...சிங்கத்தை ஒத்த குரல் படைத்தவன்" என்றாள் சுமதி.

"பச்சை எந்தக் கையில் குத்தி இருந்தது; ஞாபகப்படுத்தி கூறமுடியுமா?"

"பச்சை...வந்து...ஆமாம்... வலது கையில்தான் குத்தி இருந்தது".

"அவன் கையில் குத்தப்பட்ட பச்சை என்ன உருவம்."

"ஆ...ஞாபகம் இருக்கிறது. ...அறையில் அப்போது, ஒரு அரை குறை மெழுகு வர்த்தி எரிந்துகொண்டிருந்தது. என் கை வளையல்கள் நொறுங்கி என்பக்கத்தில் கிடந்தன. அந்த வளையல்களை, கையினால், எடுக்க அந்த மனிதன் எத்தனிக்கும்போது, குனிந்தான். அவன் கையில் குத்தப்பட்டிருந்த பச்சை, மெழுகு வர்த்தி ஒளியில்தெரிந்தது. "தீப்பந்தத்தை ஒரு பெண் கையில் பிடித்த மாதிரி" பச்சை அவன் கையில் குத்தப்பட்டிருந்தது.

"ஆஹா, அந்த நபர் பூவலூர் பூதலிங்கமே தான் முதலியார். பூவலூர் பூதலிங்கத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். இரண்டு ஆண்டுகளுக்குமுன், கலெக்டர், பெருமாள் பிள்ளை வீட்டில் ஒரு பெரிய கொள்ளை பகிரங்கமாக நடந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். கலெக்டருக்கு முன் கூட்டியே தெரியபடுத்தி விட்டு, துணிச்சலாகக் கொள்ளை செய்தான் அந்தத் துணிகர நெஞ்சம் படைத்தவன்; இவனை எப்படியும் கண்டு பிடிக்கவேண்டும். ஆனால் ஒரு விஷயம்...பூதலிங்கம், எப்போது, எங்கே இருப்பான் என்று யாராலும் கூற முடியாது. சுமதி அவன் குகைக்குத்தான் கடத்திச் செல்லப்பட்டிருந்திருக்கிறாள். குகையிலிருந்து ஒரு மனிதன் சுமதியைக் காப்பாற்றினான் என்று அவள் குறிப்பிட்டாளே, அந்த நபர் யார்? என்று தெரிய வழி இல்லை.

சென்ற ஆண்டு புனலூர் ரயில்வே ஸ்டேசன் பக்கம், ஒரு இளம் பெண், திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் முன் விழுந்து இறந்ததாக ஒரு செய்தி வந்தது; அந்தப்பெண், கஜபதி நாயக்கர் வீட்டில் வேலை செய்த மேஸ்திரி கந்தசாமியின் மகள்

Please Contact Us

For all your Iron & Steel Consumer goods Requirements of

DOOR HINGES, DOOR PEGS, WALL PEGS,
GATE PEGS, AGRICULTURAL IMPLEMENTS,
POTS, DRUMS, THAVAS, BONDS, ETC., ETC., ETC.

R. AMIRDHALINGAM

(Government Approved Fabricator)

Manufacturers and Wholesale suppliers of Consumer Goods.

31, Sattanna Naicken St., Choolai Madras-7

அவள் தற்கொலை செய்தாளா? அல்லது கொலை செய்யப்பட்டு தண்டவாளத்தில் கிடத்தப் பட்டாளா? அவள் கெடுக்கப் பட்டாளா? என்று ஒன்றும் துப்புத் துலங்கவில்லை. பெண்ணின் சாவுக்குப்பிறகு மேஸ்திரி கந்தசாமியைப் பற்றித் தகவல் ஒண்ணும்தெரியவில்லை. அவன் இருக்கிறானா? அல்லது இறந்து விட்டானா? அதைப்பற்றியும் தகவல் ஒன்றும் தெரியவில்லை.

சி. ஐ. டி. மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார். "மேஸ்திரி மகள் சாவுக்கும் கஜபதி நாயக்கருக்கும் தொடர்பு இருக்க வேண்டும்". அதைத்தொடர்ந்து, மேஸ்திரி கந்தசாமியின் மறைவு ஏற்பட்டிருக்கவேண்டுமென்று நான் சந்தேகப்படுகிறேன். ஒருவேளை சுமதியைக் குகையிலிருந்து வெளியே அழைத்து வந்தவன், ஏன் மேஸ்திரி கந்தசாமியாக இருக்கக் கூடாது? அப்படி இருக்க முடியாதே. அவன் இறந்து போய் விட்டதாக வல்லவோ, ஊரில் பேசிக் கொள்கிறார்கள். எப்படியும் மேஸ்திரி கந்தசாமியைப் பற்றித் தகவல் தெரிந்தாகவேண்டும். தெரிந்தால், இதிலடங்கிய மர்மம் தெரியவரும்" என்றார் சி.ஐ.டி. ராஜாங்கம்.

"ஆமாம், காரில் இரண்டு பெண்கள் சுமதியை அழைத்து வந்ததாகக் கூறினார்களே, அவர்கள் யார்? நான் நினைக்கிறேன் முதலியார், அந்த இரண்டு பெண்களும், குகையிலிருந்து சுமதியை வெளியே அழைத்து வந்த அந்த மனிதனும், கஜபதி நாயக்கரால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

சி. ஐ. டி. சார். ஒரு விஷயம், உங்களுக்குத் தெரியுமோ,

அந்நியநாடு செல்லும் இந்தியர் குழு

அமெரிக்க நாடு நெடுகிலும் சுற்றிப் பார்த்து அந் நாட்டுச் சிறு தொழில்களை ஆராய வந்திருக்கும் ஒன்பது பேர் கொண்ட இந்தியக் குழு தன் ஆராய்ச்சியைத் தொடங்கியது. இங்குள்ள சிறு தொழில்களை நடத்துவோருடன் குழுவினர் கலந்து பேசினர்.

இனி இந்தியக் குழுவினர் வாஷிங்டன், டெட்ராய்ட், சிக்காகோ, மென்லோ பார்க், சான் பிரான்சிஸ்கோ முதலிய நகரங்களுக்குச் செல்வர். பின்னர் ஜப்பானுக்குப் புறப்படுவர்.

ஜப்பானிலும் அவர்கள் சிறு தொழில்களை ஆராய்வர்.

இந்தியக் குழுவினர் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் சிறு தொழில்களை ஆராய்வதற்கு ஏற்பாடு செய்திருப்பது அமெரிக்காவின் சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாகம் (ஐ. ஸி. ஏ.) ஆகும். இத்தகைய ஆராய்ச்சிச் சுற்றுப் பயணங்கள் வேறு இரண்டு இதற்கு முன் நடந்ததுண்டு; அவை ஸ்வீடன், மேற்கு ஜெர்மனி ஆகியவற்றில் நடந்தன. அவற்றுக்கும் ஐ. ஸி. ஏ. ஸ்தாபனமே ஏற்பாடு செய்தது.

குழுவின் தலைவர் போஜ்ராஜ் அத்வானி. இவர் அகில இந்திய உற்பத்தி ஸ்தாபனத்து உதவித் தலைவர்; இவர் பம்பாயிலுள்ள வெளிநாட்டு வர்த்தக இந்தியக் கவுன்சிலின் உதவித் தலைவருமாவார். குழுவின் செயலாளர் நாராயணஸ்வாமி வைத்தியநாதன் இந்தியாவின் வர்த்தக, தொழிலியல் இலாகாவின் உதவிக் காரியதரிசி.

குழுவினர் தொழிலியல் நுட்பங்களை ஆராய்வர். அது மட்டுமல்ல. சிறுதொழில்களுக்கு அமெரிக்க அரசாங்கம் எவ்வாறு உதவி செய்தும் ஆலோசனை கூறியும் துணைநிற்கிறது என்பதைப் பற்றியும் அவர்கள் விரிவாக அறிவார்கள். சான் பிரான்சிஸ்கோ நகரில் அவர்கள் பாங்க் ஆவ் அமெரிக்காவின் தலைமையகத்தில் இருக்கும்போது, சிறு தொழில்களுக்குத் தனியார் தொழில் துறை நிதி உதவி வழங்கும் முறையை அவர்கள் காண்பார்கள். செப்டம்பர் 24ல் குழுவினர் புறப்படுகின்றனர்.

என்னவோ...... கோவிந்தசாமி நாயக்கர் மனைவி, லட்சுமி அம்மாள்; அந்த அம்மாவின் தம்பி......பெயர்...நடராஜன்... ஆமாம். அவர்கூட இந்த சொத்துத் தகராறில்தான், "கோவிந்தசாமி நாயக்கர் வீட்டில் இனி காலெடுத்து வைக்கமாட்டேன் என்று கூறி வீட்டைவிட்டு வெளியேறினர். இந்த சம்பவம் நடந்து கிட்டத்தட்ட 18 ஆண்டுகள் கடந்து விட்டன. அப்போது, எனக்குக் கலியாணம் ஆகவில்லை. அன்று வெளியேறிய நடராஜனை, மறுமுறை நான் பார்க்கவில்லை. அவர் இருக்கிறாரா? அல்லது இறந்துவிட்டாரா? வராமல் இருப்பதன்காரணம் என்ன என்பதும் தெரியவில்லை,என்று கூறியதும், தன்னுடைய டைரியில் முதலியார், சொன்னதை ஒன்றுவிடாமல் குறித்துக் கொண்டார். சி. ஐ. டி. ரர்ஜாங்கம். (தொடரும்)



தென் ஆற்காடு ஜில்லா நெய்வேலியில், தொழிலாளர்கள் பெரிய புல்டோசர்களின் உதவியினாலும் அகப்பை போன்ற பெரிய கருவிகளைக் கொண்டும் மண்ணைத் தோண்டி எடுப்பதை இப்படத்தில் காணலாம்.

வள்ளுவரின் தகை அணங்குறுத்தல்!

—கார்வண்ணன்—

அது ஓர் அழகிய பூஞ்சோலை! அச்சோலையிலே ஆரணங்கு ஒருவள், தன்னை அலங்கரித்து அழகு செய்து பதுமைப் போல் வந்து நின்றாள்! கண்டார் உள்ளம் கொள்ளைக்கொள்ளும்படி அவளுடையத் தோற்றம் அமைந்திருந்தது! காளைப் பருவம் அடைந்த கட்டழகன் ஒருவன் அச்சோலையில் நுழைந்தான். கட்டழகு மங்கையைக் கண்டான்; காதல் மிகக்கொண்டான்! பிறகு அவளுடைய அழகை வார்த்தைகளால் வர்ணிக்க ஆரம்பித்தான்.

''காதுகளில் கனத்த குண்டலங்களை அணிந்த இவள் தெய்வ மகளோ? மயில்போலும் சாயலையுடைய தையலோ? அல்லது மருட்சி பொருந்திய கண்களையுடைய மான் தானோ? அன்றி இவள் மானிடப் பெண்ணேயென அறியமுடியாதபடி என் உள்ளம் இவளை நினைத்து, ஐயமுற்று மயங்குகின்றதே என்று கூறலாயினன்.

நான் அவளை நோக்கினேன் அவள் என்னை நோக்குகின்ற பார்வை ஒரு பெரும் படையையே வேல்கொண்டு தாக்குகின்றதுபோல் அல்லவா இருக்கிறது அந்த வேல்விழியாளின் பார்வை! நான் முன்பு இயமன் எப்படிப்பட்டவன் என்று அறியேன்; ஆனால் இப்பொழுது அறிந்துகொண்டேன்! பெண்தன்மையுடன் போர்த்தொழில் செய்கின்ற கருணையற்ற கண்களுடனுமல்லவா காட்சியளிக்கிறது!

பொதுவாக பெண்களுக்கு பேரழகு தருவன அச்சம், மடம் நாணம், பயிர்ப்பு முதலியன. இத்தகைய பேரழகு இவள் மாட்டு யிருந்தும் இவளுடைய கண்களோ இதற்கு மாறாக காண்பவர் உயிரை காந்தம் கவருகின்ற மாதிரி கவருகின்றதே! இவளது விழிகள் நம்மை கொல்லாமல் கொல்லுகின்றதே! ஆகையால் இவள் கூற்றமோ? அல்லது அருள் நோக்குடன் பார்க்கும் அன்பு பார்வையோ? இல்லை! தனித்தனியாக இப்பார்வை யில்லாமல் இணைந்து காணப்படுகின்றதே! வில்போன்ற இவளுடைய புருவங்கள் வளைந்தால் நான் அஞ்சி நடுங்கும்படியான துன்பத்தையல்லவா அளிக்கின்றது என்று இவளுடைய விழிகளைப் பற்றி விளக்கமாக வார்த்தைகளால் வர்ணித்தான்!

பிறகு அவளுடைய உடலழகுக்கு பொருத்தமான உவமைத் தேடினான். மதம் பொருந்திய

ஆண் யானையின் இரண்டு கூர்மையானதும், வலிவானது மான தந்தம் பிறரைக் குத்தி கிழித்துவிடுமோயென அஞ்சி, அது குத்தாமலிருக்க அதன் மீது மூகபடாம் போடுவதுப் போல, இவளுடைய் இரண்டு இள முலைகள் உருண்டு திரண்டு, அழகும் எழிலும்பெற்று ஆடாமல் அசையாமல் நிமிர்ந்து நிற்பதால் அதைக்காணும் ஆடவர் மயங்கி விழுந்து விடுவரேயென்று யெண்ணித்தான் மேலாடை அணிந்துள்ளாள் போலும் இத்துடியிடையாள்!

என்னே! போரில் பகைவரும் அஞ்சும்படியான வலிவான என் தோள்கள் இம்மெலிமையிடம் தோல்வியுறுகின்றதே! ஆண்மை பொருந்திய என் மனம் இப்பெண்மையை அல்லவா நாடுகின்றது! நாணமே இந்நங்கைக்கு நல்லணியாக யிருக்கும் பொழுது. இவள் ஏன் செயற்கையாலான பொன்னணிகளை அணிந்துள்ளாள்? இம்மங்கையின் தோற்றத்தின்முன் கள்ளும் நிச்சியமாக தோற்கும்! எப்படி யெனில் கள்ளுண்டவருக்கு மாத்திரமே உவகை அளிக்கும்; ஆனல் கண்டார்க்கு இன்பம் அளிப்பதில்லை! ஆகையால் கண்டார்க்கும் களிப்பளிக்கும் இக்கள்ளி கள்ளினும் சிறந்தவளே! இதில் எத்துணையும் ஐயமில்லை!''—என்று வியந்து புகழ்ந்துரைத்தான்!

மேலே கண்ட வாக்கியங்கள் வான் புகழ் வள்ளுவர் அவர்களால் இயற்றப்பட்ட தீஞ்சுவை திருக்குறளில் காமத்து பாலிலுள்ள, 'தகை அணங்குறுத்தல்' என்னும் அதிகாரத்திலுள்ள பத்து முத்தான பாடல்களின் சத்தான கருத்தேயாம்! அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட எல்லாப் பாடல்களை படிக்காவிட்டாலும், இவ்வதிகாரத்தின் முதல் பாடலை மட்டுமாவது சுவைப்போம்.

''அணங்குகொல் ஆய்மயில்
கொல்லோ கணங்குழை
மாந்தர்கொல் மாலுமென் நெஞ்சு''—

—●—

இலங்கைக்கு கள்ளத்தனமாக குடியேற்றம்!

இலங்கைக்கு கள்ளத்தனமாக குடியேறுவதைத் தடுக்க விசேஷ போலீசாரும், ஸ்தல போலீசாரும், குடியேற்றக் கட்டுப்பாடு இலாகாவினரும் 1959 மே மாதத்தில் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டனர். 1959 மே மாதத்தில் 22 இடங்களில் சோதனை போடப்பட்டது. கள்ளத்தனமாக குடியேறவிருந்த 25 பேர்களின் முயற்சி தடுக்கப்பட்டது. 14 ஏஜண்ட்டுகளும் 12 படகு சொந்தக்காரர்களும் பிடிபட்டனர். 14 படகுகள் பிடிபட்டன.

கள்ளத்தனமாக குடியேறியவர்கள் என்று கருதப்பட்டு இலங்கை அரசாங்கத்தால் திருப்பி அனுப்பப்பட்ட 252 பேர் தனுஷ்கோடி வந்து சேர்ந்தனர். அவர்களிடமிருந்து கிடைத்த தகவலின் பேரில் 14 தரகர்களும் 12 படகு சொந்தக்காரர்களும் பிடிப்பட்டனர். அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது.

சிமிண்ட்

ஏ. ஸி. ஸி-சார்மினர் பிராண்ட்

கீழ்க்கண்ட எங்கள் டிப்போக்களில் ரெடி ஸ்டாக்குகள் உள்ளன.

* 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
* தி சிமிண்ட் கான்கிரீட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.
* 283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.
* 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.
* 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை.
* "ஜெயா மான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை
* 139/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை.
* 40, காளத்தியப்ப முதலி தெரு, சென்னை.
* 139, சூளை ஹைரோடு, சென்னை.
* 105, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை.
* 395, பிராட்வே, பிராட்வே டாக்கீஸுக்கு அடுத்தது சென்னை

N. B. உங்கள் தேவைகளுக்கு வேலை நடக்கும் இடங்களிலேயே டெலிவரி ஏற்பாடும் செய்யப்படும்.

M. குப்புசாமி நாயக்கர்

இறக்குமதி & ஏற்றுமதியாளர்கள்

15, செம்புதாஸ் தெரு,

சென்னை-1.

தபால் பெட்டி நெ. 1893

போன் : 21368 & 21369

ஸ்டாக்கிஸ்டுகள் : டாடா. S & L ஜி. ஐ பைப்புகள் : எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் ரூபிங் (கூரைகளுக்கான) ஷீட்டுகள் & A. C. பைப்புகள் & பிட்டிங்குகள் முதலியன.

தொழிலைத் துதிபாடிய கவிஞர்

—சுப. கோ. நாராயணசாமி—

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்தபின் வாராதுபோல வந்தவர் தான் மாமணி கவிஞர் பாரதியார். அடிமைப்பட்டுக் கிடந்த மக்களைத் தம் வீர மிக்கப்பாட்டுக்களினால் தட்டி எழுப்பியதுபோலவே நாடு நலம் பெற, முன்னேற தொழில் வளர்ச்சி அவசியம் என்பதை இனிமைத்தமிழில் எடுத்துப் பாடினார்.

''வயிற்றுக்குச் சோறிடவேண்டும் இங்கு
வாழும் மனிதருக்கு எல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.

என்று இந்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்த உலகின் எல்லா மாந்தர்களுக்கும் நல்ல உணவு பெற்று வாழ நினைக்கிறார்.

விடுதலைப் பள்ளு பாடும் பொழுது பாரதியார்

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை
செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை
செய்வோம்''

என்று மக்களிடம் முரசறைகிறார், அடுத்து 'விடுதலை' பாடல் பாடும்பொழுது.

''திறமைகொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும், தேர்ந்த
கல்வி ஞானம் எய்தி வாழ்வோம்
இந்த நாட்டிலே''

என்று முழங்குகிறார். இதோடு மட்டுமல்ல. பாரதநாட்டு மக்கள் பாங்குடன் கற்கவேண்டிய வினைகளைப் பற்றியும் 'பாரத தேசம்' என்ற பாடலில் விரித்துரைக்கிறார்.

''வங்கத்தில் ஓடிவரும் நீரின்
மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்
செய்குவோம்''

என உணவு உற்பத்திக்கு வழி காட்டுகிறார்.

''வெட்டுக் கனிகள் செய்து தங்கம்
முதலாம்
வேறுபல பொருளும் குடைந்
தெடுப்போம்
எட்டுத் திசைகளிலும் சென்றிவை
விற்றே
எண்ணும் பொருளனைத்தும்
கொண்டு வருவோம்''

என வெளிநாட்டு வாணிபத்திற்கு யோசனை கூறுகிறார்.

''பட்டினில் ஆடையும், பஞ்சில் உடையும் பண்ணி மலைகளென குவியுங்கள். ஆயுதம், காயுதம் செய்யுங்கள்; ஆலைகளை

Regd. 141246

WHITE HORSE SOAP

ஒயிட் ஹார்ஸ் சோப் தரத்திலும் குணத்திலும் சிறந்ததென எல்லோராலும் புகழப்பட்டது, தகுந்த விலையில் கிடைக்கக்கூடியது.

எங்கும் கிடைக்கும்:—

NATIONAL INDUSTRIES

MADRAS-21.

உருவாக்குங்கள். ஓயாமல் உழையுங்கள்" என உரைக்கிருர்.

இன்னும்

"குடைகள் செய்வோம் உழு
படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பாணி
கள் செய்வோம்;
நடையும் பறப்புமுளர் வண்டிகள்
செய்வோம்;
நாலம் நடுங்க வரும் கப்பல்கள்
செய்வோம்"

என்று பெரும் தொழில்களைச் செய்யத் தூண்டுகிருர். இத்தோடு தற்கால விஞ்ஞான அறிவையும் நாம் பெற்றுத் தேற வேண்டும் எனப் பெரிதும் கனவு கண்டார்.

வானை யளப்போம் கடல் மீனை
யளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு
தெளிவோம்

என்கிருர். நல்ல காடு வளர்ப்போம்; கொல்லர் உலை வளர்ப்போம் என்கிருர். இறுதியில்

"ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள்
செய்வோம்
உலகத் தொழில் அனைத்தும் உவந்து
செய்வோம்"

எனக்களி கொண்டு பாடுகிருர் கவிஞர்.

யார் மேலோர்? என்ற கேள்விக்குக் கவிஞர் கீழ்க்கண்டவாறு உரைக்கிருர்.

"வையகம் காப்பவரேனும் சிறு
வாழைப்பழக்கடை வைப்பவரேனும்,
பொய்யகலத் தொழில் செய்தே—
பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும்
மேலோர்."

ஆம்: தொழில் செய்பவரே தொல்லுலகில் மேம்பட்டவர்கள் என்பதைக் கவிஞர் கூறுகிருர். இவ்வாறு தொழிலுக்குத் துதி பாடிய அமரகவி பாரதியைப் போற்றி வணங்குதல் தமிழக மக்களின் தலையான கடமையாகும்.

ரேடியோ பாட, வெயில் வழங்கும் விசை

யு. எஸ். சிறுதொழில்கள் கண்காட்சியிலுள்ள சூரிய சக்திப் பிரிவில் பல புதுமைப் பொருட்கள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. வருங்காலத்தில் நமது வீட்டு உபயோகக் கருவிகள் சூரிய சக்தியால் குறைந்த செலவில் வேலை செய்ய முடியும் என்பதை அவை புலப்படுத்துகின்றன.

காட்சி மைதானத்தில் வெயில் நன்கு படும் இடத்தில் சூரிய சக்தித் துறையில் புகழ் பெற்ற விஞ்ஞானி டாக்டர் ஜான் ஒய். எல்லட், சூரிய சக்திப் பிரிவை அமைத்துள்ளார். அரிஜோனு ராஜ்யத்திலுள்ள ஃபானிக்ஸ் நகரைச் சேர்ந்தவர் அவர் இப்பிரிவில் சூரிய சக்தி உலை முதல், சூரிய சக்தி பாட்டரியால் இயங்கும் ரேடியோக்கள் வரைக் காட்சியில் வைத்துள்ளார்.

சூரிய சக்தி ரேடியோ கேட்கும் நிலையம் ஒன்றிருக்கிறது. மின்விசை வசதி இல்லாத இந்தியக் கிராமங்களுக்கு இது போன்ற நிலையங்கள் மிகவும் பயனுள்ளவை. நிலயத்திலுள்ள ரேடியோ, சூரியசக்தியால் இயங்குவது, மேலே விழும் வெளிலிலிருந்து சூரிய சக்தி இடைக்கிறது. எல்லா வானொலி நிலையங்களையும் இங்குள்ள ரேடிவோவில்கேட்க முடியும். பகலில் அடிக்குப் வெயிலிலிருந்து மின்விசையைச் சேகரித்து வைத்துக் கொள்ளக்கூடிய மின்கலங்களும் இங்கு இருப்பதால் ரேடியோ பகலிலும், இரவிலும் வேலை செய்யும்.

கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள சூரிய சக்தி மின்கலங்கள் (பாட்டரிகள்) அமெரிக்காவில் தற்போது செயற்கைக் கோளங்களிலுள்ள ஒலிபரப்பிகளை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. சூரிய சக்தி மின்கலத்தில் வலிமையை அன்மையில் அமெரிக்கா விண்வெளியில் செலுத்தியுள்ள 'வாத்துக்' கால் செயற்கைக் கால் செயற்கைக் கோளம் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளது.

சூரிய அடுப்புக்கள்

சூரியசக்திப் பிரிவில் பொது மக்களைக் கவரக்கூடிய மற்றொரு பொருள், அமெரிக்கப் பெண் விஞ்ஞானி ஒருவர் செய்துள்ள சூரியசக்தி குமுட்டி அடுப்பு. சூரியன் இருக்கும் திசையை நோக்கி இதனைத் திருப்புவதன் மூலம், சமைப்பதற்கு வேண்டிய அளவு வெப்பம் பெற முடியும்.

சூரிய சக்திப்பிரிவில் நகை உலை ஒன்றிருக்கிறது. அதில் சாதாரண பிளாஸ்டிக் பில்லை (லென்ஸ்) ஒன்றைப் பயன்படுத்தி தங்கம் போன்ற உலோகங்களை உருக்க முடியும். அமெரிக்காவில் பொழுது போக்குக்காகச் சிறு நகைகள் செய்யும் ஆண்களும் பெண்களும் இது

பல் வியாதிகளை பறந்தோடச் செய்யும்

டாக்டர் கோட்டீஸ்

முயல் மார்க் பயோரியா பற்பொடி

ரிஜிஸ்டர்ட்

எல்லா கடைகளிலும் கிடைக்கும்



DR.KOTI'S PYORRHEA TOOTH POWDER

டாக்டர் கோட்டீஸ்

இண்டியன் கெமிக்கல் ஒர்க்ஸ், சென்னை-5

போலிகள் ஜாக்கிரதை!

நெம்பர்களைக் கண்டு ஏமாருதீர்கள்.

போன்ற நகை உலைகளைப் படன் படுத்துகின்றனர். எனுமல் தங்கப், பொடி போன்ற உலோகங்களை உருக்கும் அளவு வெப்பம் கிடைக்கிறது.

சூரியசக்திப் பிரிவிலுள்ள மற்றப் பொருட்கள்; சூரியசக்தி உலை, சூரிய சக்தி அடுப்பு, நெருப்புப் பொறி திரட்டும் கருவி. இதன் உதவியால் தொலைவிலுள்ள பொருட்கள் மீது சூரியக் கிரணங்கள்படும் படிச் செய்யலாம். சமையல் அறைக்கும், குளிக்கும் அறைக்கும் வேண்டிய வெந்நீர் தயாரிக்கும் சூரிய சக்தி வெந்நீர்த் தவலை சூரிய சக்தி வாலை, சூரியசக்தி கடிகாரம் முதலியனவும் குறிப்பிடத் தக்கவை.

இந்தியாவிலும் மற்றும் வெப்ப நாடுகளிலும் வேண்டிய அளவு கிடைக்கும் சூரிய சக்தியை எவ்வாறு சமையல், வீட்டு வேலை வர்த்தகக் காரியங்கள் முதலியவற்றிற்குப் பயன்படுத்த முடியும் என்பதை சூரியசக்திப் பிரிவு விளக்குகிறது.

சிதைந்த கனவு!

—சி. ராஜ சுந்தரி—

தென்றல் வீசியது! சுகமாக இருந்தது!! ஆனல் அவள் மனத்துக்கு மிக்க வேதனையாய் இருந்தது. எத்தனையோ கதைகளில் படிக்கும் போது, காதலர்கள் எவ்வளவு உற்சாகமாகக் காணப்படுகிருர்கள். ஆனல் அவளைப்போல் உள்ள அபாக்கிய சாலிகளுக்கு இப் பௌர்ணமியும், தென்றலும் ஏன் வேதனை அளிக்கிறது?

மாலை மணி ஐந்து. ஜானகி பள்ளியை விட்டு வீடு திரும்பினாள். என்றைக்கும்போல் சலனமில்லா மனதுடன் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தவள் பேச்சுக் குரல் கேட்டு 'பிரேக்' போட்ட மாதிரி நின்ருள்.

உள்ளே தன் தந்தை பரமசிவத்திடம் அவள் அத்தை மகன் சுந்தரம் பேசிக் கொண்டிருந்தான். இவர் ஏதற்காக வந்திருக்கிருர்? என்று நினைத்தாள். அப்பொழுது ஒரு சிறுவன் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தவன் ஜானகியை பார்த்தான்.

அவள் தன் அத்தான் சுந்தரத்தின் முகஜாடை மாதிரியே இருந்தது. அவள் சந்தேகத்தை தீர்ப்பதைப்போல் பரமசிவமும், சுந்தரமும் பேசிக் கொண்டுவந்தனர்.

"ஜானகி! நம் சுந்தரம் ஊரிலிருந்து அவன் குழந்தை பாலுவை அழைத்துக் கொண்டு வந்திருக்கிருன். நம் வீட்டில் சர்ப்பாடு, நாங்கள் வெளியே போய் வருவதற்குள் சாப்பாடு தயார் செய்து வை" என்ருர். சுந்தரம் ஒன்றும் பேசவில்லை. ஜானகியும் பேச விரும்பவில்லை.

அச்சிறுவனை அவர்கள் அழைத்துப் போய் விட்டனர், ஜானகி சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டே பழைய சம்பவங்களை நினைத்துப் பார்த்தாள்.

ஜானகி சிறு குழந்தையாய் இருந்தபோது மதுரையில் வசித்து வந்தனர், அவளுடைய குடும்பத்தினர். அவள் அப்பாவான பரமசிவமும் அவருடைய தங்கை மாப்பிள்ளையும் கூட்டு போட்டு வியாபாரம் செய்தனர். சிலவ்ருடங்கழித்து நஷ்டம் ஏற்பட்டு அவரவர் பாகத்தை பிரித்துக் கொண்டனர். பெரியவர்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்து வந்தது. ஆனல் ஜானகியின் அத்தை மகன் சிறுபிள்ளையிலேயே அவளுடன் ஒன்ருய் ஓடி, ஆடியிருந்ததினல் அவனல் இங்கு வராமல் இருக்க முடியவில்லை.

பெரியவர்கள் ஒன்றும் சொல்ல வில்லை. இருவர்களுக்கும் இருவரும் ஒரே செல்லக் குழந்தை ஆதலால் செல்லம் கொடுத்து வந்தனர்.

ஆனாலும் ஜானகி அதிக நாகரீகம் இல்லாமல் அடக்க ஒடுக்கமாக இருந்து வந்தாள். வளர, வளர சுந்தரத்திடம் அதிக பேச்சுக் கொடுக்காமல் சங்கோஜத்துடன் பழகி வந்தாள். நாள் ஆக ஆக பெரியவர்களும் ஒற்றுமையுடன் இருந்தனர். சுந்தரத்தின் அம்மா "என் சுந்தரம் நல்ல நிறம்; மகாராஜாமாதிரி இருக்கிறான். பி. ஏ. படிக்க வைத்து முடித்ததும் பெண் கொடுக்க நான், நீ என்று போட்டியிடுவார்கள்." என்பாள்.

யாராவது "ஏன் உங்கள் அண்ணன் மகள் லட்சுமி மாதிரி இருக்கிறாளே அவளும் சொந்தம் தானே என்று சொன்னால் எங்கு போட்டுக் கட்டியிருக்கிறதோ, அதுபடி நடக்கட்டும்" என்பாள்.

பள்ளியில் இறுதியாண்டு தேர்வில் வெற்றிபெற்றுவிட்டு சுந்தரம் மதுரையிலேயே, கல்லூரியில் சேர்ந்தான். ஜானகி S. S. L. C. படித்து முடித்து விட்டுவீட்டிலேயே இருந்தாள். சுந்தரம் கல்லூரியில் சேர்ந்தது முதல் நாகரீகத்தின் எல்லைக்கே வந்துவிட்டான்.

அவன் ஒரே பிள்ளையாதலால் அவன் இஷ்டப்படி செலவுக்கு பணம் கொடுத்தார் அவனுடைய தந்தை நமசிவாயம். ஆனாலும் அவனது தாயாருக்கு சிறிது மனத்தாங்கல் இருந்து வந்தது.

ஏழையானாலும், பணக்காரரானாலும் அவர்களுக்கு தங்கள் பிள்ளைகள் தங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு ஒழுங்குடன் இருப்பதுதானே உலக இயல்பு?

நன்றாக படித்துவந்தாலும் அவன் மேனாட்டு நாகரீக முறையில் பெண்களுடன் சகஜமாக பழக ஆரம்பித்தான். அவர்களுடன் பிக்னிக் முதலிய உல்லாச இடங்களுக்குச் செல்வது அவனுக்கு விளையாட்டு மாதிரி இருந்தது.

இப்படியிருக்கையில் அவனுக்கு கல்லூரியில் முதலாண்டு படிக்கும் வனஜாவுடன் அதிக சகவாஸம் வைத்திருந்தான். அவள் ஏழையோ, பணக்காரியோ அவனுக்குத் தெரியாது.

அவள் தினமும் ஒருஸாரியும் அதற்கேற்ப எடுப்பாகத் தோன்ற சோளியும் அணிந்து நாசூக்காக நடந்து வருவது அவனுக்கு கண் கொள்ளா காட்சியாகத் தோன்றும்.

சில சமயங்களில் ஜானகியுடன், வனஜாவை ஒப்பிட்டுப் பார்க்கும் அவனுடைய மனம். ஜானகி மா நிறமானாலும் நல்ல எடுப்பான நாசி கருவண்டையொத்த கண்கள், சுருள் சுருளான கேசமும் அடர்ந்துநீண்டு தொங்கும் இடையே ஒருதனி அலாதியான அழகு அவளுக்கு; இவ்வளவும் சேர்ந்து

பொடிகளில் சிறந்தது எது?

கிரிஜா நெ. 1. பட்டணம் பொடி

நேதாஜி நெ. 1. பட்டணம் பொடி

சவரன் மார்க் பவுன் கலர் பொடி

ஸ்ரீ ஆண்டாள் ஆபீஸர்

ஸ்பெஷல்,,நெய் பொடியும் எமது தயாரிப்பே.

ராதா
பவுன்கலர் & ஆபீஸர்
பொடி

RADHA SNUFF

MANUFACTURERS: RADHA & CO., 12.T.H. ROAD. MADRAS-21.

அவள் முகத்தில் ஒரு தனியான தேஸதை ஜொலிக்கும்; எப்பொழுதும் சிரித்த முகம்; அவள் தான் பேசும் பத்து வார்த்தைகளுக்கு ஒரு தரம் பதில் சொல்லுவதில் எவ்வளவோ இன்பம்கண்டான். அவன் இப்பொழுது வனஜாவுடன் மணிக்கணக்காக பேசுவதில் இன்பம் அடைந்தான்.

கல்லூரியில் சேர்ந்த புதிதில் வாரம் ஒருமுறை தன் மாமா வீட்டிற்கு சென்றவன் இரண்டு வருடங்களுக்குப்பின் அடியோடு மாறிவிட்டான். அவன் தாய் பார்வதம் "ஏண்டா! சுந்தரம் மாமாவீட்டுக்கு ஒருதரம் போய்விட்டு வாயேன் மாமா வரவில்லை என்கிறார்" என்றாலும் "என்னம்மா! செய்வது பாடங்களைப்படிப்பதற்கே நேரம் போதவில்லை; என்றைக்காவது ஒரு நாள் போகிறேன்" என்று பதிலுரைப்பான்.

வனஜாவுடன் அதிக நெருங்கிப்பழகி அவர்களுடைய நட்பு முற்றி கல்யாணப் பேச்சில் வந்து நின்றது. வனஜாவுக்கு ஒரு சகோதரியும், தாயாரும்தான் இருப்பது தெரிந்தது சுந்தரத்திற்கு. அச்சகோதரியும் திருமணமாகி ஏதோ வெளியூரிலிருக்கிறாள் என்று சொன்னாள். தன் அப்பாவிடம் தன் கல்யாண விஷயத்தை தெரிவித்து விடுவது என்ற முடிவுடன் வீட்டிற்கு வந்தான்.

உள்ளே தன் தாயாருடன். தந்தை சம்பாஷித்துக்கொண்டு இருந்த சப்தத்தைக் கேட்டு வெளியே நின்றான்.

தந்தை:—"உம்! பயல் இந்த வருஷத்தோட படிப்பை முடிச்சிடுவான்; கால்கட்டு போட வேண்டியதுதான் சீக்கிரத்தில், அவன் ஒரு பொண்ணோட ஊர் சுத்துராணும். வதந்தி பரவுகிறது; அதனால் அவனுக்கு யாரும் பெண் கொடுக்கச் சம்மதிக்க மாட்டாங்க; நம் வீட்டுக்கு ஏற்றவள் ஜானகிதான். சித்திரையிலேயே முடிச்சுடணும் தெரிகிறதா".

தாயார்:—"என்னென்னமோ உளர்றீங்க என் மகனைப்பார்த்தா யார் ஊதாரின்னு சொல்வாங்க? அவனைப்பாருங்க! ராஜாவாட்டம் இருக்கிறான், அவனைப்போய் தத்தாரின்னு பேசுனீங்களோ பாருங்க! எனக்கு கெட்ட கோபம் வரும்.

தந்தை:—"ஆமா! ஆமா! உனக்கு பொல்லாக் கோபம் வரும் பாரு உள்ளதைச் சொன்ன சுறீர்கிறதோ. இன்னைக்கு இப்படிச் செய்வான். நாளைக்கு அப்பெண்ணை கூட்டிண்டு போய் அவனே கல்யாணம் கெஞ்சுவான். அப்புறம் ஊர் தலைகாட்ட முடியாமே மானம் கப்பலேறும் அப்ப தெரியும் உனக்கு சேதி',

என்று சொல்லி முடிப்பதற்குள் உள்ளே பாய்ந்தான் சுந்தரம் "நிறுத்துங்கள் அப்பா! நான் அந்த அநாகரீகத்தை கட்டமாட்டேன்" என்றலறினான்.

"யாரடா அநாகரீகம் நீயா! அவளா ஒரே பிள்ளை என்று செல்லம் கொடுத்து வளர்த்தினால் இப்படிப்பேசுகிறாய். அவளுக்கென்ன குறைச்சல். நம் வீட்டு மருமகளாய் வருவதற்கு எல்லா தகுதியும் இருக்கிறதடா" என்றார்.

"நான் எங்கள் காலேஜ் படிக்கும் வனஜா என்பவளைத்தான் விரும்புகிறேன். நீங்கள் அனுமதி தராவிட்டாலும் நான் ரிஜிஸ்தர் முன்னிலையில் மணம் முடித்துவிடுகிறேன் என்றான் படபடப்புடன்.

"பார்த்தியா நீ! இவ்வளவு தூரம் வந்துட்டான் பயல். நீ பரீட்சை முடிவு தெரிந்ததும் ஜானகியைத்தான் கட்டிக்கிட வேண்டும்" என்று அழுத்தந் திருத்தமாய் சொன்னார் நமசிவாயம்.

பர்வதம் திகைத்தாள்; தன் மகன் காலப்போக்கில் இப்படி மாறுவான் என்று எதிர்பார்க்கவில்லை அவள்.

மறுநாள் சாயந்தரம் தன் அண்ணன் பரமசிவத்தின் வீட்டுக்குச் சென்று பேச்சுவாக்கில் கல்யாணப் பேச்சை எடுத்தாள்; தன் அண்ணியிடம் ,'என்ன அண்ணி நம் ஜானகியை சுந்தரத்துக்கு சித்திரை மாதம் கல்யாணம் பண்ணிவிடணும். ஒன்றுக்கொன்று ஒற்றுமையாய் இருந்தால் அதுவே நமக்கு கடைசிகாலத்தில் புண்

ணியம் ஏற்பட்டமாதிரி" என்ருள்.

ஜானகியின் அம்மாவான பாக்கியமும் "சரி நான் நினைத்தேன் உன்னிடம் சொல்வதற்கு நீயே கேட்டுவிட்டாய் உன் அண்ணவும் சொல்லிக்கொண்டிருந்தார்." என்ருள்.

இதையெல்லாம் கேட்ட ஜானகியின் மனம் துள்ளியது. தானும், தன் அத்தானும் சேர்ந்து மகிழ்ந்து விளையாடுவதுபோல் நினைத்தது அவளுடைய பேதை மனம். கண்டாள் கனவு; கொண்டாள் இன்பம்; ஆனல் அக்கனவு சிதைந்துவிடும் என்றெண்ணினளா என்ன? அடிக்கொருதரம் கண்ணுடியின் முன் நின்று அழகுபார்த்தாள்.

ரிஸல்ட் தெரிந்த மறுநாள் சுந்தரம் காணமல் போய்விட்டான் வனஜாவுடன். நாம் ஒரு பிள்ளைதானே நம் பெற்ருேர்களுக்கு ரிஜிஸ்டர் முறையில் திருமணம் முடிந்தபின் அவர்களே நம்மை அழைத்துக்கொள்வார்கள் என்று இறுமாய்த்துக்கொண்டான்.

இந்த சேதியைக் கேட்டவுடன் ஜானகி இடிவிழுந்தது போலானள். வாழ்க்கை என்னும் கடலில் முதலடி எடுத்துவைத்ததுமே இப்படி அதிர்ச்சி; இனி நாம் திருமணம் பண்ணக்கூடாது. S. S. L. C. படித்திருக்கின்ருேம்; இரண்டு வருடம் ட்ரெயினிங் படித்து ஆசிரியை வேலைக்கமரவேண்டும். தள்ளாத காலத்தில் பெற்ருேர்களுக்கு யார் பொறுப்புடன் கவனிப்பர்?'

தான் திருமணம் செய்துகொண்டால் நிச்சயம் தொல்லைதான். கணவன் வீட்டில்உள்ளவர்கள் சொன்னபடி நடத்தல்வேண்டும். பெற்ருேர் வீட்டுக்கு வருவதுநின்றுவிடும் அவர்களுக்கு யார் இருக்கின்றனர். தான் ஒரேபிள்ளையாதலால் அவர்களுக்கு மிக்க மனவேதனை அளிக்கும். ஆதலால் நாம் திருமணம் என்பதையே மனதால் நினைக்கக் கூடாது என நினைத்தாள்.

தன் மகன் இப்படிச் செய்வான் என்று எதிர்பார்கவில்லை நமசிவாயம். படுத்த படுக்கையானுர். எதுவும் சாப்பிடாமல் மிக்க மனக்கவலைகொண்டார். அவரைப் பார்க்க வந்த பரமசிவம் "என்ன மாப்பிள்ளை! இப்படி எலும்பும் தோலுமாக இருக்கின்றீர்; நாம் என்ன செய்வது? நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது; அதுவும் இக்காலத்துப் பிள்ளைங்களுக்கு சொல்லவேண்டியதே இல்லை; அவன் மனது போல் நீங்கள் செய்து முடித்திருக்கலாம்; பரவாயில்லை; அதற்காக மனதை அலட்டிக் கொள்ளாதே. என்ருவது திரும்பி வந்து விடுவான்" என்று நெஞ்சடைக்கக் கூறினுர்.

ஆனல் விதி இவ்வாறு சதி செய்து விடும் என்று எதிர்பார்த்தனரா? மறுநாளே தூக்குக் கயிற்றில் தொங்கினுர் நமசிவாயம். பர்வதம் புரண்டழு

தாள்; சேதி தெரிந்ததும் சுந்தரமும், வனஜாவுடன் வந்து கதறினன். ஆனல் யார் வந்தாலென்ன போனவர் திரும்புவாரோ? ஈமச்சடங்குகளை முடித்துக் கொண்டு நிலபுலன்களை விற்று வனஜாவுடன் பட்டணம் போய்விட்டான் சுந்தரம்.

ஜானகியின் விருப்பப்படி அவள் படித்து பூங்குளம் கிராமத்தில் வேலைக்கமர்ந்தாள். தாயும் இரண்டு ஆண்டுகளில் இறந்து விட்டாள். தான் பேரன், பேத்திகளை கண்டு களிக்கலாம் என்ற எண்ணம் நிறைவேறவில்லையே என்ற ஏக்கத்துடன்.

ஐந்து வருடங்களுக்குள் என்னென்ன விசித்திரங்கள் நடந்து விட்டது என்று எண்ணினள். சமையல் வேலை முடிந்து சிந்தனையும் முடிந்துவிட்டது. ஏன் இவர் இங்கு வந்திருக்கிருர்? என்று எண்ணினள்.

மணி எட்டானதும் வீட்டுக்குள் நுழைந்தனர். சுந்தரமும், பரமசிவமும். சமையலைபரிமாறினள் ஜானகி.

மறுநாள் சுந்தரம் வெளியே போனவுடன் "என்ன அப்பா! நம் அத்தான் எதற்காக இங்கு வந்துள்ளார்?" என்ருள்.

இங்கிருந்து அவன் பட்டணம் போனவுடன் ஏதோ ஒரு கம்பார்மன்டில் வேலையிலமர்தானும். அவள் கொஞ்சம் டாம்பீகமாக செலவு செய்தாளாம். மற்ற ஆண்களுடன் பழகவும் அவர்களை வீட்டிற்கு கூட்டுவந்து டிபன் சாப்பிடச் சொல்லுவதும் இவனுக்கு கட்டோடு பிடிக்கவில்லை. ஆனல் சொல்லுவதற்கு கொஞ்சம் பயப்பட்டான். ஆனல் நாளாக நாளாக முற்றிக்கொண்டே போவதைப்பார்த்து கண்டித்தானும். ஆனல் அவள் சிறிதும் பயப்பட்டதாகவே தெரியவில்லையாம்.

சிறிது நாட்கள் கழிந்தவுடன் இச்சிறுவனைப் பெற்ருளாம். இரண்டு வருடங்களும் சண்டையும், சச்சரவுமாகத்தான் இருந்ததைப் பார்த்த அவனுக்கு மன அமைதியே இல்லை என்பதை தெரிந்தவுடன் நம்ம பர்வதத்தை அழைக்க ஏற்பாடு செய்தானும். அவள் வந்தால் தான் தன் தாயுடன் சென்றுவிடுவதாக அவள் மனைவி கூறியதும் இருதலைக் கொள்ளி யென தவித்தான்.

இதற்கு முடிவு எற்படுவது போல் இரண்டாவது குழந்தை பிறக்கும் பொழுது மிகவும் கஷ்டப்பட்டு இறந்து போனளாம். நம்மை பார்க்கவேண்டும் போல் இருந்ததால் அவன் அம்மாவிடம் போய் விலாசத்தை தெரிந்து கொண்டு இங்கு வந்துள்ளான்; மகள் இறந்தவுடன் மூத்த மகன் போய்விட்டாளாம் இவன் மாமியார். இந்த பையன் சதா அம்மா! அம்மா என்கிருனம்.

ஆதலால் மறுமணம் புரிந்து கொள்ளவேண்டும் என்று சொன்னன் என்ருர்.

அன்று இரவு அவ்வுடைய தந்தை குறட்டைவிட்டு உறங்

ஒனர் அவளுக்கு சிறிது வேலை இருந்தது.

நாளை நடக்கவேண்டிய பாடப் புத்தகங்களை குறித்துவிட்டு, நித்திரை செய்யச் சென்ருள். ஆனல் நித்திரை தேவி அவளை அணுக்கவில்லை. என்றும் சீக்கிரம் தூக்கம் வந்துவிடும் அவளுக்கு தூக்கம் வராது என்னமோ மாதிரி இருந்தது.

பழையசம்பவங்கள் அடிக்கடி மனதை துன்புறுத்தியது. புரண்டாள். தண்ணீர் குடித்து விட்டு படுப்போம் எனஎண்ணி சமையலறைக்குள் சென்று தண்ணீர் குடித்துவிட்டு கொல்லைப்பக்கம் போனுள்.

அன்று பௌணர்மி. நிலா வெளிச்சம் கொல்லையில் பரிபூரணமாக விழுந்திருந்தது. அவளுக்கு மிகவும் பிடித்த பூ மல்லிகை; அம்மல்லிகைச் செடியை மிக்க கவனத்துடன் பாதுகாத்து வந்தாள்.

தென்றல் வீசியது. சுகமாக இருந்தது. ஆனல் அவள் மனத்துக்கு மிக்க வேதனையாய் இருந்தது. எத்தனையோ கதைகளில் படிக்கும்பொழுது காதலர்களை எவ்வளவு அழகா சித்தரிக்கின்ருர் கதாசிரியர். ஆனல் என்னைப்போல் உள்ள அபாக்கியசாலிகளுக்கு இப்பௌர்ணமியும், தென்றலும் வேதனையளிக்கிறதல்லவே என்று நினைத்தாள்.

மல்லிகையின் மணம் பரவி சுகந்தமாய் இருந்தது. அப்பொழுது யாரோ பின்னல்

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor.

(Regd. No. 5.)

A·C,C CEMENT STOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமானவேலைத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்துகொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

வரும் ஓசையைக் கேட்டு திரும் பினாள். துணுக்குற்றாள். அவன் அத்தான் சுந்தரம் தான் அது.

அவள் அத்தானா? அது! முன்னால் எவ்வளவு அழகாக இருப்பார். இப்போது கவலை யும், மன அமைதியும் இன்றி முகம் வாடி வதங்கி இருக்கின் றது? சீ! என்ன மனம்? அவள் யார்? அதைப்பற்றி அக்கறை பட அக்கறை கொள்ளவேண் டியவர்கள் போய்விட்டனர். இன்னும் சில மாதங்களில் இன்னொருத்தி வந்துவிடுவாள்

"ஜானகி!" என்றான் சுந்தரம்.
"ஹூம்" என்று பதிலுரைத் தாள்.

உன்னுடன் பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று ஏங்கி னேன். இந்நேரத்தில் தான் கிடைத்திருக்கிறது. உனக்கு என்னுடன் பேச விருப்பமில்லை என்றாலும் எனக்கு சந்தர்ப் பத்தை பார்க்குமளவில் உன் னுடன் பேச வேண்டியதிருக்கி றது. நான் பேசுமுன் என்னை நீ மன்னித்துக் கொள். நீ என்னை யன்றி யாரையும், மனதில் நினைத்துக்கொள்ள வில்லை; நீ உன் மனதில் இப்போது என் னைப் பார்க்குமளவில் என்ன எண்ணுகிறாய்? என்றான்.

அவள் "எனக்கு ஒன்றும் உலகில் விருப்பமில்லை. தொடர்ந்து பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்று வதே எனது தொழில். வேறு ஒன்றிலும் நாட்டமில்லை. மேலும் உங்கள் மகன் மீது அன்பு காட்டும் ஜீவன் ஒன்று உண்டு. அதுதான் தாயில்லாப் பிள்ளையை வளர்க்க மிக்க கஷ் டம் தான். அவனுடைய மனம் கோணாமல் நன்றாக சிறப்புடன் வளர்க்க கூடிய சீக்கிரத்தில் ஒரு அம்மா வரவேண்டும் என கடவுளை பிரார்த்திக்கிறேன்" என்றாள்.

"உன்னைவிட வேறு யார் நல்ல குணத்துடன் கிடைக்கப் போகிறார்கள் இவனுக்கு?" என் றான் சுந்தரம்.

"ஹூம்" எனக்கு சிறிதும் தகுதில்லை. மேலும் நான் தங் களைப்பற்றி எண்ணி கனவு எல்லாம் சிதைந்துவிட்டது" என்றாள்.

"நீ மனம் வைத்தால் எல் லாம் முடியும் ஜானகி! எனக் காக நீ இசையவேண்டாம். அவனுக்கு தாயன்பு காட்ட உன்னைவிட சிறந்தவள் கிடைப் பாளா என்ற சந்தேகந்தான். சரி என்று சொல்லு; உன் அப் பாவிடம் சொல்லி சித்திரை யிலே மணம் முடித்து விடு வோம்" என்றார்.

"அத்தான்! நீங்க என் சிதைந்த கனவை நீங்கள் சரி யாக்கமுடியாது. வாழ்க்கை என்பது ஒரு கரடு முரடான பாதை; கல்லும்முள்ளும் இருக் கும். அதையெல்லாம் பொ றுக்கி தூர எறிந்து விட்டு மேலே செல்லுவதே அதன் சிறப்பு, வாழ்க்கையில் எல்லாம் இருக்கும். கஷ்டமும், சந்தோ ஷமுமே வாழ்க்கையில் தோன் றும். அதற்கெல்லாம் மனதை

M. KANNAN

Government Approved
Fabricator and Contractor
(Regd. 10)

30, Wall Tax Road, Madras-3

Please Contact Us For

COLLAPSIBLE GATES, MAIN GATES,
WINDOW GRILLS, VENTILATORS &
ALL OTHER BUILDING MATERIALS

Steel Trusses and erection works undertaken

Specialist in Arc and Gas Welding
Stainless Steel Aluminium Gas Cutting
Works are also undertaken.

OUR MOTTO IS TO SATISFY OUR CUSTOMERS

திடபடுத்த வேண்டும். தங்களுக்கு இது ஒரு திருப்பம். இனி குறுக்கு வழிகளில் மனதை செலுத்தாமல் நேர் பாதையில் செல்லவிடுங்கள். என்று கூறிவிட்டு படுக்கைக்கு சென்றுவிட்டாள்.

மறுநாள் காலை ஊருக்குப் புறப்பட்டான் மனநிறைவுடன் சுந்தரம். நாம் வாழ்க்கையில் வழுக்கிவிட்டோம். யாரும் சரிவரக்கவனியாமல் நம் மகன் பாலுவையாவது நன்கு சீர்படுத்தி என்னைப்போல் கட்டுங்கடங்காமல் வளர்க்கக்கூடாது. நாமும் இனி ஒருத்தியை மனைவி ஸ்தானத்தில் நிறுத்தி வைப்பது மிக பாவம். நம் தாயாரையும் அழைத்துக் கொண்டு வேலையிலமர்ந்து மனநிறைவுடன் வாழ்க்கை என்னும் கடலில் அமைதிஎன்னும் படகில் செல்லவேண்டும். அது தான் சிறப்பு என்று எண்ணினான்" வாழு, வாழவிடு" என்ற பாடத்தை ஜானகி, அவனுக்குக் கற்றுக்கொடுத்து விட்டாள்.

—*—

ஒருவரிடத்திலும் பகைமை கொள்ளாமல், யாவரிடத்தும் அன்பு பூண்டொழுகுதல் வேண்டும். —லிங்கன்.

டாக்டர் தமாஷ்!

—சரோஜா குஞ்சிதபாதம்—

நோயாளியின் மனைவி ஒரு பிரபல டாக்டரை தன் கணவனின் உடல்நிலையைப் பரிசோதிக்க அழைத்துக் கொண்டு வந்தாள். டாக்டர் நோயாளியை தீவிரமாக சோதித்து "இனி பயனில்லை அம்மா" உயிர்போய் விட்டது," என்றார்.

"ஐய்யய்யோ, நான் உயிருடன் இருக்கிறேனே" என்று ப்திில் வந்தது நோயாளியிடமிருந்து.

"உஷ் சும்மா இருங்கள்.... டாக்டருக்குத் தெரியாதது உங்களுக்கு என்ன தெரியும்" என்று கூறி கணவனை அடக்கினாள் மனைவி.

* * *

அவசர புத்தியுள்ள ஒரு டாக்டர் விடுவிடென நோயாளியின் வீட்டில் நுழைந்தார். நோயாளி இருக்கும் அறையில் சென்று நோயாளியை அங்கு காணாமல், வியப்படைந்தார்.

அங்கு இருந்த ஒருவரிடம் 'நோயாளி எங்கே? என்றார். 'நோயாளியா என்று வியப்புடன் கேட்ட அவர் அது தான் காலையிலேயே தகனமாகிவிட்டதே என்றாரே பார்க்கலாம்.

* * *

ராமுவின் தாத்தாவிற்கு உடம்பு சரியாகவில்லை. படுத்த படுக்கையாகிவிட்டார். டாக்டர்கள் பார்த்து கைவிட்டு விட்டனர். இருந்தாலும் ராமுவிற்கு ஒருசமயம். இன்னும் பெரிய டாக்டரை அழைத்துக் காண்பிக்க வேண்டும் என்று எண்ணியவனாய் டாக்டருக்கு பீஸ் என்று காலணா கூடகொடுக்கவிரும்பவில்லை.

பிரபல டாக்டர் ஒருவரிடம் சென்றான். அவரிடம்," சார், நீங்கள் என்னுடைய தாத்தாவை உங்களுடைய திறமையால் குணப்படுத்தினாலும் குணப்படுத்தாவிட்டாலும், நீங்கள் கேட்கும் பணத்தைக் கொடுத்து விடுகிறேன் என்றான். டாக்டர் சம்மதித்தார். அவனுடைய தாத்தாவை சோதித்து மனமில்லாமல் ஏதோ மருந்து கொடுத்தார்.

வீரம் ஒன்று சென்றது. அவன் தாத்தா இறந்தே விட்டார். ராமு இப்போது அவன் தாத்தா இறந்து போன வருத்தத்தில் இருப்பான்; இன்னும் கொஞ்ச நாட்கள் கழித்து சேரவேண்டிய பீஸை வாங்கிக்கொள்ளலாம், என்று நினைத்தார், டாக்டர்.

இரண்டு மாதங்கள் கடந்தது.

எதிர்பாராதவிதமாக ராமுவை சந்தித்தார், டாக்டர்.

"என்னராமு எனக்கு சேரவேண்டிய பீஸ் வரவில்லையே" என்றார், டாக்டர்.

"பீஸா! எதற்கு என்று ஒன்றும் அறியாதவனைப் போல் அவன் சொன்னதைக் கண்டு திடுக்கிட்டார்! டாக்டர்!

"ஏனப்பா! உன் தாத்தா பிழைத்தாலும், பிழைக்காவிட்டாலும் கேட்ட பணத்தைக் கொடுப்பதாகச் சொன்னாயே, மறந்துவிட்டாயா? என்றார், டாக்டர்.

"ஆம் சொன்னேன்! உங்கள் மருந்தால் என் தாத்தா பிழைத்தாரா? என்றான், ராமு நிதானக் குரலில்.

"இல்லை! அவர் இறந்துவிட்டார், என்றார், டாக்டர்.

"சரி, டாக்டர்! அப்படியானால் உங்கள் மருந்தால்தான் அவர் இறந்தாரா?

"என்ன என் மருந்தால் இறந்தார் என்று எப்படி சொல்ல முடியும், வியாதியின் கடுமையால்தான் இறந்துவிட்டார்," என்று கோபமாகச் சொன்னார், டாக்டர்.

"அப்படியானால் நீங்களே ஒப்புக்கொள்கிறீர்கள். உங்கள் மருந்தால் அவர் பிழைக்கவுமில்லை. இறக்கவுமில்லையென்று பின் ஏன் தங்களுக்கு பீஸ் கொடுக்கவேண்டும் நீங்களே சொல்லுங்களேன் என்று ஓட்டநடைப் போட்டான், குறும்புக்கார ராமு.

—•—

பொது இன்ஷ்யூரன்ஸ் தொழில் நிலவரம்

இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் 1957-ம் ஆண்டில் பிரீமியம் வருமான வகையில் இந்தியாவில் மொத்தம் 10·93 கோடி ரூபாய் பெற்றன. வெளிநாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்கு 1957-ல் பிரிமியம் வருமான வகையில் மொத்தம் 7·16 கோடி ரூபாய் கிடைத்தது. இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்கு இந்தியாவுக்கு வெளியே உள்ள இடங்களில் கிடைத்த பிரீமியம் வருமானம் 11·59 கோடி ரூபாய்.

"புண்ணியம்மாள்" இரவு பாடசாலை விழா!

புண்ணியம்மாள் இரவு பாடசாலையின் சார்பாக நுங்கம்பாக்கம் ஜெயலட்சுமிபுரத்தில், சுதந்திர தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு ஸ்ரீ. ஆர் ஜனர்த்தன நாயுடு, B.A.L.T. D.E (oxon); D.L.S (Lon); F.L.A. (Lon) அவர்கள் தலைமை தாங்கினர்கள்; குமாரி பிலோமினு, தேசியக் கீதம் பாடினர். தேசியக் கொடியை ஸ்ரீமதி. சகுந்தலா சண்முகம் ஏற்றிவைத்து, உணர்ச்சிததும்ப ஒரு சொற்பொழிவு நிக்ழ்த்தினர். பிறகு ஸ்ரீ. மான்கள் பாபுதேவ், சாம்ஸன் ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

தலைவர் ஸ்ரீ. ஜனர்த்தன நாயுடு அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"புண்ணியம்மாள்" இரவு பாடசாலையை நிறுவனம் செய்த ஸ்ரீமதி. புண்ணியம்மாளை நன்கு பாராட்டினர். ஸ்ரீமதி புண்ணியம்மாளுடைய, தளராத முயற்சியினல், இந்த ஸ்தாபனம் மாபெரும் தொண்டு செய்து கொண்டிருக்கிறது என்பதையும் அவர் குறிப்பிட்டார். பிறகு" சுதந்திரம்" என்பதைப்பற்றி சுவையான ஒரு உரை நிகழ்த்தினர்.

துள்ளும் தமிழில் உணர்ச்சிததும்ப, சுதந்திரம் வாங்கித்தந்த வீரர்களின் வரலாற்றை குமாரி பிலோமினு எடுத்துக் கூறினர். "புண்ணியம்மாள்" இரவு பாடசாலை நன்கு இயங்க, சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கருத்தை, பேசிய அத்தனை பேரும் தெரிவித்தார்கள். ஸ்ரீ. சாம்ஸ்ன் அவர்கள் நன்றி கூறகூட்டம் இனிது முடிந்தது. குழந்தைகளுக்கு இனிப்புப்பண்டங்களும் பாலும் பழமும் வழங்கப்பட்டன. யு. எஸ். ஸால் வழங்கப்பட்டப் பால் குழந்தைகளுக்குக் விநியோகிக்கப்பட்டது.

புண்ணியம்மாள் இரவு பாடசாலை நன்கு இயங்க, சர்க்கார், நிவாரணம் கொடுப்பது மிகவும் அவசியமாகும். கிட்டத்தட்ட 70 மாணவ மாணவிகள் படித்து வருகிறார்கள். மாணவ, மாணவிகளுக்கு விளையாடுவதற்கென்று, ஒரு விளையாட்டு அரங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள், நாடகத்துறையில் முன்னேற்றமடைய, நாடக பயிற்சி ஒன்று நடைபெறுகிறது. நாடகம், சங்கீதம், முதலிய துறைகளில் முன்னேற்றமடைந்துள்ள குமாரி பிலோமினு, நாடக பயிற்சியை நல்ல முறையில் நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பைத்தியம்!

—'ஷேரலி'—

உனக்காக, நம் திருமணம் நடக்க வேண்டும் என்பதற்காக சித்தியின் வைர நெக்லஸையும் உன் மாங்கா மாலையையும் உன்னை தேர்தலில் எதிர்த்த ராமலிங்கனுருக்குக் கொடுத்து வாபஸ் வாங்கச் சொன்னேன். டிக்கட் பரிசோதகரிடம் உதைபட்டேன். நீ கடைசியில் ''என்னை லூஸ்'' என்றும், ஆகவே திருமணம் செய்யமாட்டேன் என்றும் கூறி விட்டாய் நீ வாழ்க! என்கிறுர் ஒரு அப்பாவி.

கண்ணே பிரீதி.

உன் கடிதம் கண்டேன்; கரை காணுத களிப்பு கொண்டேன். 'லூஸ் அத்தானுக்கு' என்று எழுதி இருந்தாய். அதைக்கண்ட மாத்திரத்திலே என் 'மைண்ட்' நீ சொன்னது போல் லூஸ் இல்லை என்று கண்டு கொண்டேன். எப்படி தெரியுமா? லூஸ் என்ற வார்த்தையைப் பார்த்த உடனே என் மனம் உப் என்று பலூன் மாதிரி உப்பிக்கொண்டதடி பைங்கிளியே! அது லூஸாக இருந்தால் உப்பிக் கொள்ளுமா? சொல்!

அன்புள்ளவளே—பிரீதி என்பதற்கு தமிழில் அன்புள்ளவள் தானே—நீ 'தேர்தலில் ஜெயித்து விட்டால்கல்யாணம் செய்துகொள்கிறேன்' என்று எழுதி இருந்தாய்! மகிழ்ச்சி! மகிழ்ச்சி கண்ணே!

நான் ஆஸ்பத்திரி விட்டு எப்படியாவது இன்றே தப்பி வருகிறேன். தேர்தலில் உனக்காக—என் அன்புக்காக வேலை செய்வது அதுவும் தீவிரமாக என்று தீர்மானித்து விட்டேன்

உன் அன்பு அத்தான் என்ற
எதிர்கால மாப்பிள்ளை
தர்மன்.

எழுத மறந்தவை:—

சத்தியமாகச் சொல்கிறேன் பிரீதி, எனக்குப் பைத்தியம் இல்லை; அதனுல் வைத்தியம் தேவை இல்லை! சித்தி எனக்குக் கட்டிய பட்டம் தான் அது என்றும் அதை நீ நம்பமாட்டாய் என்றும் நான் நன்ருக நம்பினேன். ஆனுல் பிரீதி, நீ லூஸ் அத்தானுக்கு என்று எழுதியபோது எனக்குப் பகீரென்றது. ஏன் தெரியுமா? நீ கூட என்னை லூஸ் என்கிருயே என்றுதான். ஆனுல் கொஞ்ச நேரத்துக்கப்புறம் நீ வெறும் வேடிக்கைக்காக எழுதினுய் என்று கண்டு கொண்டேன். அதனுல் உன்மேல் கொஞ்சம் கூட கோபம் இல்லை.

* * *

சுயேச்சை அபேட்சகர் இராம லிங்கனுருக்கு, உங்களை எதிர்த்துப் போட்டியிடும் அபேட்சகி சர்வகட்சி ஆதரவுபெற்ற சேவகி பிரீதி எழுதியது:

ஐயா இராமலிங்கனுரே'

ஏதோ நகரசபைக்கு போட்டி இடுகிருேமே வீட்டை சுத்தமாக வைக்கவேண்டுமே என்ற காரணத்திற்காக வீட்டை டபுள் கோட் சுண்ணும்பு அடித்து வைத்திருக்க உங்கள் ஆட்கள் வந்து என் வீட்டுச்சுவற்றில் 'எங்கள் ஓட் குடை சின்னத்திற்கே, 'இராமலிங்கனுருக்கே ஓட் செய்யுங்கள்' என்றெல்லாம் எழுதிச் சென்றிருக்கிருர்கள். இது மட்டுமில்லை, என் போர்டில் என் பெயரையும் சின்னத்தையும் ஒரு சிட்டால் மறைத்து விட்டு உங்கள் பெயரையும் சின்னத்தையும் பொறித்துச் சென்றிருக்கிருர்கள். இது சரியா?

நீங்கள்—இப்பொழுதே—இக்கடிதம் கிடைத்த 24 மணி நேரத்திற்குள்—ட்ரிபிள் கோட் சுண்ணும்பும், போர்டிற்கொரு வெள்ளைத்தாளும் ஒட்டித் தருகிறீர்களா? இல்லை போலீஸில் கம்ப்ளைண்ட் கொடுக்கவா?

உடன்பதில் நாடும்,
பிரதீஸ்வரி! (பிரீதி)

* * *

சர்வகட்சி ஆதரவுபெற்ற சேவகி,
அபேட்சகி திருமதி பிரதீஸ்வரி தேவியாருக்கு,

ந. இராமலிங்கம் எழுதியது.

அம்மணி.

உங்கள் காரசாரமான கடிதம் இடைக்கப்பெற்றேன். நேற்றைக்கு முன்தினம் பெருமாள் கோவிலுக்கு முன்பாக கட்டி இருந்த என் போர்டில் உங்கள் ஆட்கள் என் பெயரையும் சின்னத்தையும் மறைத்து விட்டு உங்கள் பெயரையும் உங்கள் சின்னத்தையும் பொறித்துச் சென்றிருக்கிருர்கள். உங்கள் அத்தை மகன் 'தர்மன், தான் அந்தப் பக்கம் சுற்றித்திரிவதாக கேள்விபட்டேன். பாவம், மூளைக்கோளாறு; அவர் செயலுக்கு வருத்தப்பட்டு என் செய்ய என்று சும்மா இருந்து விட்டேன். நானும் இப்படி ஏதாவது அரட்டி மிரட்டி இருக்கவேண்டும் இல்லையா?

எதிர்பாராத அதிர்வேட்டு தரும் சுயேச்சை அபேட்சகர்
ந. ராமலிங்கம்.

* * *

அன்பே பிரீதி,

ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்து பத்தேநாள் கூட மதுரையில் இருக்கமுடியவில்லை. சித்தி செய்தி அனுப்பி என்னை திரும்ப அனுப்ப ஏற்பாடு செய்து விட்டாள். அன்பே நான் போகிறேன். நீ வெற்றி பெறுவது நிச்சயம். அதற்காக மகத்தான சாதனை போதனை எல்லாம் செய்திருக்கேன். உன் வெற்றி நிச்சயம்.

நீ மட்டும் என்னை மணக்க மாட்டேன் என்று சொன்னுல்

என் உயிரை மாய்த்துக்கொள்வேன். இது நிச்சயம். நீ எப்படியும் என்னை திருமணம் செய்வாய் என்று நம்புகிறேன்.

உன் கணவன் ஆகப்போகும்
தர்மன்.

முக்கியமாக கவனிக்க:—

இக்கடிதம் கொண்டு வந்த—அதாவது என் நெஞ்சக் குவியலை தூதாகக்கொண்டு வரும் பையனுக்கு ஓரணா அல்லது ஆறு நயே பைசே கொடுக்கவும்.
தர்மன்.
மதுரை,
20-12-58

திரு இராமலிங்கனுருக்கு.

உங்கள் பெருந்தன்மையை பாராட்டுகிறேன். தங்கள் உதார குணத்திற்கு என் மனமார்ந்த நன்றி. இன்று 4 மணிக்கு 'மெள்ளானு' பார்க்கிற்கு வரவும். தங்களை எதிர் பார்த்து காத்திருப்பேன்.

—பீரீதி.

பின்குறிப்பு:—

ஆட்சேபனை இருந்தால் சீட்டு கொண்டுவரும் பையனிடம் சொல்லவும்.

* * *

பிரதீஸ்வரி தேவியாருக்கு,

நீங்கள் பார்க்கில் சொன்ன பிரகாரம் சிந்தித்தேன். செயலாற்றத்துணிந்து விட்டேன், நிச்சயம் நம் இருவருக்கும் கிடைக்கும் ஓட்டின் எண்ணிக்கையை விட அதிகம் நம்மை எதிர்த்து நிற்கும் அபேட்சகர் எடுக்க முடியாது. விளம்பரத்திற்கு இஞ்சின் மார்க் குடை நூறுக்கு செலவளித்த தொகை நீங்கள் தருவதாக சொன்னீர்கள். உடன் அனுப்பவும். என் ஆதரவாளர்களின் ஓட்டுக்கள் உங்களுக்கே!

—ந. இராமலிங்கம்.

* * *

மதுரை,
21-12-58.

அம்மணி,

பணம் இடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி! 'வித்ரா' மனு முனிஸிபல் ஆபீஸுக்கு அனுப்பி விட்டேன்.

—ந. ராமு.

* * *

தந்திகள்:

திருமதி பிரதீஸ்வரி தேவியே,

உங்கள் வெற்றி மக்கள் வெற்றி! வாழ்க! வளர்க! நும் தொண்டு!

சென்னை. —எஸ். ஏ. ரஸாக்
29-12-59 சர்வகட்சி கூட்டணி
தலைவர்.

* * *

உங்கள் வெற்றிக்கு மகிழ்ச்சி!
—ந. ராமலிங்கம்
மாஜி அபேட்சகர்.

* * *

தமிழ்நாடு ... காப்பக ... சென்னை-600 008

தொழில்

மாதமிருமுறை

55, எடப்பாளையம் தெரு, மதருஸ்:3.

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

பிரதி! பிரிதி! பிரீதி!

உன் வெற்றி கண்டு மகிழ்ச்சி! ராமலிங்கம் என்னும் அபேட்சகர் வாபஸ் வாங்கிய போது தினத்தாளில் உனக்காக வாபஸ் வாங்குவதாக அறிக்கை கொடுத்திருப்பதைக் கண்டு திகைத்திருப்பாய்! நம் பூசலுக்கு பயந்து வாபஸ் வாங்கி விட்டாரோ என்று நினைத்திருப்பாய். பிரீதி! உங்கள் இருவருக்கிடையே பூசல் உண்டு பண்ணியது நான் தான். உன் போர்டில் அவர் பெயரும் அவர் போர்டில் உன் பெயரும் எழுதியதெல்லாம் இந்த ஆம்புளே சிங்கத்தின் வேலையே.

ஐயையோ! இதெல்லாம் முதலிரவு சொல்லவேண்டுமென்று எண்ணி இருந்தேன். பிரீதி...நம் மணம் எப்போது?

உனக்காக பாடுபட்ட
தர்மன்.

துரோகி பிரீதிக்கு,

சென்னை, 1-1-59.

ஏமாந்த சோணகிரி அத்தான் எழுதியது.

உனக்காக நம்மணம் நடக்க வேண்டும் என்பதற்காக சித்தியின் வைர நெக்லஸ்-ம் உன் மாங்கா மாலையும் ராமலிங்கனுக்கு கொடுத்து வாபஸ் வாங்கச் சொன்னேன். உனக்காக பாடுபட சென்னை விட்டு வரும் போது டிக்கட் பரிசோதகரிடம் அடி உதைபட்டேன். இவ்வாறெல்லாம் உனக்காக கஷ்டப்பட நீ லூஸ், உன்னையார் கல்யாணம் செய்வார்கள் என்று எழுதி இருந்தாய்.

சரி, பரவாயில்லை. யாரை எய்த்தாவது நீ சுகமாக இரு. தேர்தலில் வெற்றிபெற்ற உனக்குநிம்மதி 'சந்தோஷம்' ம(ர)ணம் என்னும் தேறுதலில் எனக்கு இனி சந்தோஷம் நிம்மதி!

இக்கடிதம் உனக்கு கிடைக்கும்போது பேப்பரில் என்னைப் பற்றி படிப்பாய்.

ம(ர)ணம் நாடிய,
தர்மன்.

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் எண்ணிக்கை

1958 டிசம்பர் 31-ந் தேதியன்று 184 இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் பொது இன்ஷ்யூரன்ஸ் தொழில் நடத்திவந்தன. அவற்றில் 91 கம்பெனிகள இந்திய கம்பெனிகளும், 93 கம்பெனிகள் வெளிநாட்டுக் கம்பெனிகளும் ஆகும்.

"காதலிலே" ......

—T. K. T. தெட்சிணமூர்த்தி—

காதல் கடிதம் இப்படியா எழுதுவது? உங்கள் மண்டையில் கொஞ்ச மாவது " இது " இருக்கிறதா " இது " ? இல்லாவிடில் கொஞ்சம் ஒசியாவது வாங்கிக் கொள்ளுங்களேன்

இப்படிக்கு,

காதலி.

கண்ணே கமலி !

கண்டேன் உன் கடிதம். களிப்பு மிகு கொண்டேன். ஆகா! என்ன சொல்வேன். அதில் நீ என்னை வர்ணித்திருக்கும் அழகை உன் கற்பனைசக்திக்கு ஈடேது இல்லை இணை தான் ஏது. வாழ்க. அது இன்னமும் வளர்க. நானும் உன்னை வர்ணித்து இதைப் போல் எழுத வேண்டும்-என்றுதானே நீ உன் திறமையைக் காட்டியிருக்கிருய். கண்ணே!......இதோ பார் நானும் உன்னை வர்ணிக்க ஆரம்பித்து விட்டேன்.

"செக்கர் வானத்து செந்திப் பிழம்பு போல் வந்து பிறந்திட்ட என் அமுதவல்லியே ஆசை இல்லியே. ஆகா! என் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்ட தங்கப்பதுமை, உன்னைக் காண வேண்டும் என்று என் கண்கள் இரண்டும் துடிக்கின்றன. இன்னமும் துடித்துக் கொண்டே இருக்கின்றன. அன்பே என் ஆருயிரே!—என் ஆருயிரே !—என் நெஞ்சில் அழியா இடம் பெற்ற ஓவியமே...இன்பக்காவியமே-உன்னை ஒரு நாளைக்கு ஒரு முறையாவது பார்க்க வில்லையென்ருல் என்நெஞ்சு படும்பாட்டை என்னவென்று சொல்வேன். உன் அழகிய வதனம் என் கண்முன் ஊசலாடிக்கொண்டேயிருக்கிறது. உன் கன்னம் இருக்கிறதே கன்னம் ஆகா அது ஆப்பிள்கள்;உன்னுடைய கண்கள் காந்தத்தைக் கூட உன்னுடைய கண்களைப் பார்த்த பிறகுதான் கண்டு பிடித்திருப்பார்களோ என்று எனக்கொரு சந்தேகம். உன்னுடைய மூக்கு ஸ்பென்ஸர் கம்பெனியின் கேக்கூட அவ்வளவு அழகாக இருக்காதே;உன்னுடைய வாய் இதைப்பார்த்துத்தான் நான்கூட ஹேண்ட் பேக் (கைப்பை) கம்பெனியில் வாயமைப்பு எப்படி இருக்கவேண்டும் என்று சொல்லி 5க்கு ஆர்டரும் கொடுத்துள்ளேன். (இவை அனைத்தும் உனக்காகத்தான் ஹி...ஹி...உன் பற்கள் முத்துக்கள் அத்தனையும் ரத்தினங்கள். அலை அலையாய்

சுருண்டு படிந்திருக்கும் உன் கேசம் ஆகாஎஸ்தர் வில்லியம் கூட நிமிர்ந்துபார்க்கவேண்டும். முழுமதியே மறை முகமே முள்ளில் ரோஜாவே (இப்போ தைக்கு இதுபோதும் என்று நினைக்கிறேன்) அன்பே நாளை நாம் எங்கு சந்திக்கலாம்.

இங்ஙனம்,

உன் உண்மைக்காதலன்,

கண்ணன்.

பின் குறிப்பு காதலர்கள் எழுதும் கடிதத்தை காதலியர்கள் குறைந்தது நூறு தடவையாவது திருப்பித் படிப்பார்களாம், ஆகவே இதைநீ...நீ...ஒரு இருநூறு தடவை யாவது படிப்பாய் என்று நம்புகிறேன்).

அன்பரே!

கடிதம் இப்படித்தானு எழுதுவது உங்கள் மண்டையில் கொஞ்சமாவது 'இது' இருக்கிறதா 'இது' இல்லையென்ருல் கொஞ்சம் ஒகியாவது வாங்கிக் கொள்ளுங்களேன். தங்கள் கடிதத்தைப்பார்த்து அழுவதா இல்லை சிரிப்பதா என்றே எனக்குத் தெரியவில்லை; இப்பொழுதெல்லாம் 10 வயது சிறுவன் கூட அழகாக வர்ணிப்பதற்கு தெரிந்து வைத்திருக்கிருன். நீங்கள் என்ன டாவென்ருல் பி. ஏ., படித்தி க்கிறீர்கள். கொஞ்சம் கூட புண்ணியமில்லையே; இனிமேல் வர்ணிக்கிறேன் என்று சொல்லி கன்னு பின்னு வென்று ஏதாவது இறுக்கினீர்கள் அப்புறம் எனக்கு............நாளைக்கு சரியாக 5 மணிக்கெல்லாப் நான் மெரீனுவுக்கு வந்துவிடுகிறேன்.

இப்படிக்கு,

உங்களையே நினைத்து
ஏங்கும் உங்கள்கா...

கமலி.

பின்குறிப்பு:

உங்கள் உத்திரவுப்படி கடிதத்தை இருநூறு தடவை சரியாக எண்ணித்தான் படித்தேன்; ஆமாம்...நாளைக்கு நான் எந்த உடையில்.

கண்ணே கமலீ

கடற்கரைக்கு குறித்த நேரத்தில் நான் வரவில்லையே என்று கோபித்தாய் என்ன செய்வது. என்று மில்லாமல் இன்றுபோய் அதைச்செய் இதைச்செய் என்று பாழாய் போன அவர் (வேறுயாருமில்லை செல்கள் ஆபீஸ்டைரக்டர் தான்) என் உயிரை வாங்கிவிட்டார். அவருக்குத் தெரியுமா காதலின் சக்தியை அவசரமான வேலை ஒன்று இருக்கிறது என்று; சொல்லவும் கூட அந்தப் பாழாய்ப் போன டைரக்டர் (வேறு எப்படி வைவது என்று எனக்குத் தெரியவில்லை) என்னை விடவில்லையே ஆமாம். இப்படியே எவ்வளவு நாளைக்குத்தான நாம் இருக்க டியும் உடனே இதற்கு ஒரு வழி செய்யவேண்டுமே.

இங்ஙனம்,

உனக்கு மட்டும் சொந்தமான...
உன்... கண்ணன்,

பி.கு: நேற்று உன் அலங்காரம், அபாரம், அற்புதம் அமோகம் ஆகா... ஆகா...

அன்பரே

ஒரு மகிழ்ச்சி கரமான செய்தி தாங்கள் எழுதிய கடிதம் தவறி என் தந்தையிடம் சிக்கிவிட்டது. என்ன ஆகுமோ என்று பயந்தபடி இருந்தேன். நல்லவேளை ஒன்றும் என்னை சொல்ல வில்லை; எல்லாவற்றையும் கேட்டார். நானும் துணிந்து எல்லா விபரங்களை சொல்லி விட்டேன். என்னிஷ்டப்படியே செய்வதாக அப்பாவும் சொல்லி விட்டார். உங்களைக்கூட பார்க்க வேண்டும் என்று சொன்னார். நீங்கள் இங்கு வருகிறீர்களா. இல்லை நானும் அப்பாவும் அங்கு வர வேண்டுமா.

இப்படிக்கு,

உங்கள் எதிர்கால ம.........

"கமலி"

பி. கு:—

நீங்கள் எழுதிய கடிதத்தை அப்பா என்னிடம் காட்டவே இல்லை அதில் நீங்கள் என்ன என்ன எழுதி யிருந்தீர்கள்.

அன்பரே!

நேற்று வீட்டுக்கு வந்த நீங்கள் - அப்பாவைப் பார்த்ததும் ஏன் அப்படி விழுந்தடித்துக் கொண்டு ஓடினீர்கள். எத்தனை தடவை கூப்பிட்டும் திரும்பிக் கூடப் பார்க்காமல் ஓடுகிறீர்களே! என் அப்பா என்ன கரடியா இல்லை புலியா.

இப்படிக்கு
உங்கள்
"கமலி"

பி. கு:—

அப்பா கூடகேட்டார் மாப்பிள்ளை ஏன் இப்படி ஓடுகிறார் என்று.

கண்ணே கமலி!

ஐயோ, கரடி புலியாயிருந்தால் கூட கவலையில்லையே. அவற்றோடு நேருக்கு நேர் நின்று போர் புரியலாமே. ஆமாம், நீயாவது என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா-உங்களுடைய ஆபிஸ் டைரக்டர் என்னுடைய அப்பா தான் என்று. ஐயையோ அவரைப் பற்றி அந்தக் கடிதத்தில் தாறுமாறாக எழுதிவிட்டேனே. நாளைக்கு என்ன ஆகுமோ. ஆபிஸில் என்ன நடக்குமோ... கமலி, நீதான் இந்த நேரத்தில் என்னைக்காப்பாற்ற வேண்டும். உன் தந்தையிடம் சொல். கடிதத்தில் ஏதேதோ தெரியாமல் எழுதிவிட்டேன். அதற்காக என்னை மன்னித்து விடும்படியும் சொல். அங்குள்ள நிலைமையையும் உடனே எனக்கு தெரிவிக்கவும்.

இங்ஙனம்
உன்னையே நம்பியிருக்கும்
கண்ணன்.

பி. கு:—

உண்மையில் உன் அப்பா என்னை மாப்பிள்ளை ஏன் இப்

போன் : 31738. தந்தி : மெரிகோல்ட்

தொழில்

(INDUSTRY)

(தமிழ் மாத மிருமுறை)

55, எடப்பாளையம், தெரு, சென்னை-3.

விளம்பர விகிதம்

கடைசி மேல் அட்டை 3 கலர்	...	175	0	0
,, 2 கலர்	...	125	0	0
,, கலர் இல்லாமல்	...	100	0	0
,, உள் பக்கம்	...	75	0	0
உள் பக்கம் 1 பக்கம்	...	50	0	0
,, ½ பக்கம்	...	30	0	0
,, ¼ பக்கம்	...	20	0	0

குறிப்பு:—ஆறு மாதத்துக்கு மேல் காண்ட்ராக்ட் விளம்பரம் தருபவர்களுக்கு கட்டணச் சலுகைகள் உண்டு.

படி ஓடுகிறார் என்று கேட்டாரா?

அத்தான்!

எல்லாம் சுபமாக முடிந்தது. எப்படி உங்களை தன் மருமகனாக ஆக்க என் அப்பா சம்மதித்தார் என்று கேட்டிருக்கிறீர்களே இது தெரியாதா உங்களுக்கு. உங்களால் அவருக்கு பல வகையில் லாபம் இருக்கிறது. ஒன்று மாப்பிள்ளைகள் கிடைக்காத இந்த நேரத்தில் எல்லாவகையிலும் சிறந்த நீங்கள் கிடைத்தது அவர் செய்த பாக்கியம் தானே. இரண்டாவது மாப்பிள்ளை தேடப்புறப்பட்டால் வீண் சிரமும் அலைச்சலும் பணமும் செலவாகும், இப்பொழுது அந்தத் தொல்லையே இல்லையல்லவா. மூன்றாவது, தனிக்கட்டையான நீங்கள் இன்னும் கொஞ்ச நாளில் வீட்டுமாப்பிள்ளையாகி விடுவீர்கள்; நான்காவது இது தான் அவருடைய பிரச்னைகளில் மிக மிக முக்கியமானது வேறொன்றுமில்லை வரதட்சணை வாங்காமல் என்னைத் திருமணம் செய்துகொள்வதாக சொன்னீர்களல்லவா; இது ஒன்றுபோதும அவர் சம்மதம் வர; சரி அத்தான் முடித்துக் கொள்கிறேன். விஷயம் வேறொன்றுமில்லை.

இப்படிக்கு,
உங்களுடைய
''கமலி''

பி. கு: திருமணத்திற்கு நாள் குறித்தாகி விட்டது என்று அப்பா சொன்னார். என்று அத்தான் நம் திருமணம்.

கைதி 9732

டாக்டர் பீ.எஸ். சின்னசாமி B.Sc., M.B.B.S

மனக் கவலையாலும் 7 வருட சிறை வாசஸ்தினாலும் நொந்தும், நைந்தும், என் மனமும், உடலும் மிகவும் சோர்ந்து விட்டன. இனி நான் பிழைப்பேன் என்ற நம்பிக்கை இல்லை. தன்நலமற்ற ஓர் தியாகி போன்ற உங்களிடம் என் சோக வரலாற்றைக் கூறி நான் குற்றவாளியா? என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்று ஒரு பெண் கைதி டாக்டரிடம் கூறுகிறாள்.

அன்று திங்கட்கிழமை. அது ஓர் பெரிய சிறை. அதில் இரண்டாயிரம் கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர். அன்று ஒரே பரபரப்பு. காரணம் அன்று அணிவகுப்பு தினம். மேலும் அன்றுதான் புது டாக்டர், டாக்டர் ஸுவர்ணா, எம். டி. டி. டி. எம். அந்தச் சிறைக்கு வைத்தியத் தலைவராகப் பதவி ஏற்றுக்கொள்ளுகிறார். கைதிகளின் நல்வாழ்வுக்கு சிறை டாக்டர்களே ஜீவநாடி. தனி ஒரு மனிதனுக்கு ஒரு டாக்டர் செய்யும் வைத்தியம் பிடிக்கவில்லை அல்லது பலிக்கவில்லை என்றால் அவன் வேறு டாக்டரிடம் செல்லலாம். ஆனால் சிறையின் கைதிகளுக்கு அப்படி செய்ய முடியுமா? அவர்கள் நல்வாழ்வு அவர்களைக் கவனித்துக் கொள்ள சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஓரிரு டாக்டர்கள் கையில்தான். அதனால் பழைய டாக்டர் போய் புது டாக்டர் வருகிறார் என்றால் ஓர் பரபரப்பு ஏற்பட்டதில் வியப்பு ஏதுமில்லை. சிறைவாயிலில் வழக்கமாக ஒரு வார்டர்தான் துப்பாக்கியைக் கையில் பிடித்துக்கொண்டு நிறுத்தப்படுவது. அன்று நாலு வார்டர்களை நிறுத்தியிருந்தனர். சிறைவாசலில் தொங்கும் இரும்பு தண்டவாளத்தின் மேல் ஒரு வார்டர் ஒரு இரும்புக் கம்பியால் அடித்தான். ஏழுமுறைகள் "கணீர்" "கணீர்" என்ற அந்த ஒலி சிறைச்சாலையில் உள்ள எல்லா அறைகளுக்குள்ளும் புகுந்து எதிரொலியை யெழுப்பியது.

அங்கங்கே நின்று வம்புகள் பேசுக் கொண்டிருந்த வார்டர்கள் தங்கள் தங்கள் குல்லாய்களை எடுத்து தலையில் பொருத்திக் கொண்டனர். சாரி சாரியாக தங்கள் பிளாக்குகளிலிருந்து தங்கள் படுக்கைகளையும் நீர் குவளைகளையும், அலுமொனி



யத் தட்டுகளையும் எடுத்துக் கொண்டு அணிவகுப்பு மைதானத்தை யடைந்தனர். குவளைகளையும் படுக்கைகளையும் தங்கள் முன்னே பூமியில் வைத்துவிட்டு வரிசை வரிசையாக நின்றனர். படுக்கைகளும் உபயோகிக்கும் பாத்திரங்களும் சுத்தமாய் வைத்துக்கொள்ளப் படவேண்டும். ஒவ்வொரு சிறைவாசிக்கும் படுக்கையும் பாத்திரமும் தனியே இருக்க வேண்டும். இதைக்கண்காணிக்கவே இந்த ஏற்பாடு. கைதிகள் செய்யும் விளையாட்டு விஷமங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர் வார்டர்கள்.

ஒவ்வொரு சிறைச்சாலையிலும் வருகிற அணிவகுப்பு தினம் ஒரு முக்கியமான தினம்; அன்று எல்லாச்சிறைவாசிகளுக்கும், சலவை செய்யப் பட்ட உடைகள் கொடுக்கப் படும். குளிக்க எண்ணெ சீயக்காய், துணிகளுக்கு வாஷிங் சோடா, தலைகசக்க புங்கங் கொட்டை, அளிப்பார்கள்; இந்த அணி வகுப்புதினத்தை "File Day" "பைல்" என்றும் கூறுவர். தங்கள் குறைகளை, விண்ணப்பங்களை அதிகாரிகளிடம் கைதிகள் அன்று தாராளமாய்க் கூறலாம். அன்றே ஒட்டடையடைந்த, மூட்டைப் பூச்சிகள் நிறைந்த, இருளடைந்த கைதிகளை இரவில் அடைக்கப்படும் அறைகள், பெருக்கப்பெற்று அலம்பப் பெற்று, ஒட்டை அடிக்கப்

பெற்று, சிகரெட் துண்டுகள் நீக்கப்பெற்று, டி. டி. டி. அடிக்கப்பெற்று, பினயில், தெளிக்கப்பெற்று சுத்தமாய்த் துலங்கும். கக்கூசுகள், ஓடாத சாக்கடைகள் எல்லாம் சுத்தம் செய்யப்படும்.

ஏழாவது மணி அடிக்கப்பட்டு அந்த ஓசை அடங்குமுன், தனது புத்தம் புதிய கறுப்பு நிற "வான்கார்ட்" காரில் டாக்டர் ஸுவர்ணுசிறைவாயிலில் வந்திறங்கினர். அவர் இடது கையில் ,'ஸ்டெதெஸ்கோப்" ஊஞ்சல் ஆடியது. தயாராக நின்றிருந்த வார்டர்கள் தங்கள் கால்களை ஒன்று சேர்த்து துப்பாக்கியைத் தூக்கி நிறுத்தி வந்தனம் செய்தனர். டாக்டர் ஸுவர்ணு ஏற்கென்வே சாரணர் வகுப்பில் தொண்டு புரிந்து பழக்கப் பட்டவராதலால், போலீஸ் மரியாதைகளுக்குப் புதியவரல்லர். புது டாக்டரின் கம்பீரத்தையும், அவர் போலீஸ் மரியாதைகளுக்குப் புதியவரல்லர் என்பதையும் அங்கு வேடிக்கை பார்க்கக்கூடியிருந்த "ஆப் ட்யூடி" "Off Duty" வார்டர்கள் ஒரு வினுடியில் கண்டு கொண்டனர். கம்பீமாக நடந்து டாக்டர் சிறைவாயிலை அடைவதற்கும் சிறைக்கதவு திறப்பதற்கும் சரியாக இருந்தது. கோயில்களில் உள்ளது போல் சிறைக்கு இரண்டு பெரிய கதவுகள் உண்டு. ஒரு கதவில் ஒரு ஆள் நுழையக்கூடிய அளவில் ஒரு சிறுகதவு உண்டு. சாதாரணமாக எதற்கும் சிறுகதவைத் தான் திறப்பார்கள். இன்று பெரிய டாக்டர் வருவதால் இரண்டு கதவுகளையும் திறந்தனர். உள்ளே தயாராய் இருந்த ஜெயில் ஸுபரிண்டெண்டென்ட் "கான் ரான் ஸ்மித், டாக்டர் ஸுவர்ணுவை அன்புடன் வரவேற்று, தன் கீழ் உள்ள சிறை அதிகாரிகளுக்கு அறிமுகப் படுத்தினர்.

'டாக்டர் இன்று திங்கட்கிழமையாதலால் எல்லாக் கைதிகளையும், பிளாக்குகளையும் பார்வையிடவேண்டும். வாருங்கள்," என்று டாக்டரை அழைத்துக் கொண்டு சூப்பிரண்டெண்டென்ட் புறப்பட்டார். அவர் அணிவகுப்பைப் பார்வையிட ஆரம்பித்து விட்ட தன் அடையாளமாக ஒரு வார்டர் "ப்யூகிள்" (Bugle)என்னும் ஒரு வாத்தியத்தை மும்முறை ஊதினுன். அந்த ஒலி அலைகள் சிறைச்சாலை பூராவும் பரந்தன. முதல்வரிசையில் டாக்டர் ஸுவர்ணுவும் சூபிரெண்ட் டெண்டெண்ட் ஸ்மித்; அடுத்த வரிசையில் ஜெயிலர் ஸ்ரீ துளசிங்கம் நாயுடு, டெபுடி ஜெயிலர், உதவி டாக்டர்கள் - பின்னல் ஜெயில் சிப்பந்திகள், அவர்களுக்குப் பின்னல் பாதுகாப்பிற்காக 14 வார்டர்கள் கொண்ட இந்தப் பார்வையிடும் கூட்டம் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருந்தது. போகும் வழியெல்லாம் கைதிகள் இவர்களை தங்கள் கையை நீட்டி நிறுத்தித்தங்களுக்கு உள்ள குறைகளைக் கூறிக்கொண்டனர். "தங்களுக்குக் கொடுக்கப்படும் அளவுச் சாப்பாடு போதவில்லை கடுமையான வேலை செய்கி

ருேம்," என்று பல கைதிகள் கூறினர்கள். சர்க்கார் நியமித்திருக்கிற அளவை நாங்கள் மீறக்கூடாது என்று பதிலளித்தார் மிஸ்டர் ஸிமித். கைதிகள் என்ருல் கையில் விலங்கணிந்து கோடிட்ட சட்டையணிந்து ஓர் இருட்டறையில் சினிமாக்களில் காண்பிக்கப்படுவது போல் இருப்பார்கள் என்று எண்ணிய டாக்டர் ஸுவர்ணவுக்கு அவர்களது பிரகாசமான முகத்தையும் சுத்தமான உடைகளையும் கண்டு வியப்புண்டாயிற்று.

கைதிகள் வேலை செய்யும் இடங்களைப்பார்த்த பொழுது அவர்கள் ஒரு தொழிற்சாலையில் சிப்பந்திகள் உழைப்பது போல் உழைப்பதையும் சவுக்கை கையிலேந்திய வார்டர்கள் யாரும் அவர்களை மேய்க்க அங்கு இல்லாததையும் கண்டார் டாக்டர்; தெரியாத கைதிகளுக்கு அனுபவம் நிறைந்த பழைய கைதிகள் வேலை நுணுக்கங்களை சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார்கள். எங்கு சென்ருலும் அவர்கள் குறை ஒன்ருகவே இருந்தது. அவர்களுக்கு கொடுக்கப்படும் உணவு உழைப்பாளிகளான அவர்களுக்குப் போதவில்லை என்பதாகவே இருந்தது. டாக்டர் ஸுவர்ண இதுவிஷயமாக தம்மால் ஆன உதவியை மேலதிகாரிகளுக்கு எழுதி, செய்வதாகக் கூறிக்கொண்டே நகர்ந்தார். எட்டு (8) பிளாக்குகள் பார்வையிட்டு முடிந்தது. தனியான ஒரு கதவைக்கடந்து பெண் கைதிகள் இருக்கும் பகுதியை அடைந்தார். ஸ்திரி வார்டர் மேரி' அதிகாரிகளை உள்ளே அழைத்துச் சென்ருள். "அப்பப்பா! இவ்வளவு பெண்குற்றவாளிகளா இருக்கிருர்கள் இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? என்று கேட்டார்" டாக்டர் தன் அருகில் வரும் சூப்பிரண்டெண்டை பார்த்து. "பெரும்பான்மையோர் கள்ளச்சாராயம் காய்ச்சும் தம் கணவன்மார்களுடன் ஒத்துழைத்தவர்கள்; குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக சிறு திருட்டுத்தொழில்கள் புரிந்தவர் பலர்; சிலரே பெரும் குற்றம் புரிந்தவர்கள்." என்று பதிலளித்தார். அதிகாரிகள் பெண்கள் வரிசையின் கடைசியை அடைந்தார்கள். கடைசியாக நின்றுகொண்டிருந்த கைதி திடீரெனச் சாயவும் டாக்டர் ஸுவர்ண அவளைத் தாங்கிப் பிடிக்கவும் சரியாக இருந்தது.

காளிபோல் கூவிக்கொண்டே வந்தாள் வார்டர் மேரி, "என்னடி, வேஷம் போடாதே. உங்களுக்கெல்லாம் ஜெயில் சாம்பார் சாப்பிட்டு உடம்பு கொழித்துவிட்டதடி", என்று முரட்டுத்தனமாக டாக்டர் பிடியினின் அவளை இழுத்து நிறுத்தினுள் "அடே! இது 9372 ன்ஞ. ஏண்டி "திரி" உனக்கு அடுத்த வாரம் ரிலீஸ்ஸே. என்னக்கேடு வந்தது உனக்கு இந்தக் கடைசியில் என்று குலுக்கினுள். "வார்டர் அவளைக் கீழே படுக்வை"; என்று கர்ஜித்தார் டாக்டர், ஒரு நொடியில், கீழே படுக்கப்போட்ட அவளைப்பரிசோதித்தார். இரண்டு மார்புகளிலும் சளி கட்டிக்கொண்டு,

Telegrams : MARIGOLD Phone : 31738

K. PERUMAL UDAYAR

Importer, Exporter &
Manufacturers' Representative

Iron and teel Approved Fabricator
and Approved crap dea ler

Undertakes to Impor! goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்,

55, எடப்பாளையம் தெரு,

சென்னை-3.

கடும் சுரம் அடிப்பதை உணர்ந்தார் டாக்டர் "உடனே இவளை ஆஸ்பத்திரிக்கு, ஸ்ட்ரெட்ச்சரில் தூக்கிச் செல்லுங்கள்', என்றார் டாக்டர். ஜெயிலர் துளசிங்கம் நாயுடு ஓரடிமுன் வந்து, ஆங்கிலத்தில் "இந்த மாதிரி கேசுகளை யெல்லாம் நடத்தி அழைத்துச்செல்வதுதான் வழக்கம். இதெற்கெல்லாம் இவ்வளவு செய்தால் ஜெயில் நிர்வாகம் கஷ்டமாகிவிடும்", என்றார்.

டாக்டர் ஸுவர்ணா சிரித்துக்கொண்டு, கைதிகளை நடத்தும் விதத்தில் உங்களுக்கு நான் எதுவும் கூறவேண்டியதில்லை. ஆனால் கைதிகள் நோயாளிகளாகிவிட்டால் அவர்களை என்னிஷ்டப்படி நடத்த எனக்கு பூரண அதிகாரம் உண்டு; ஆகவே இக்கைதியைக் காலதாமதம் செய்யாமல் ஜெயில் ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கள்", எனக் கூறினார். விறு விறு என்று ஸ்ரெட்ச்சர் வந்தது. கைதியை அதில்மெல்ல தூக்கி வைத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர். டாக்டரும் அணிவகுப்புப் பார்வையை விட்டுவிட்டு அவளைக் கவனிக்கச் சென்றார். அந்தச் சிறையில் நோயுற்ற பெண் கைதிகளுக்காக ஒதுக்கப்பட்ட ஓர் சிறு அறையில் அவளைக் கிடத்தினர்கள்.

டாக்டர் ஸுவர்ணா தனது உதவி டாக்டர்கள் பின்தொடர அந்த அறைக்குள் நுழைந்தார்; மயக்கமுற்று இருந்த அந்தக் கைதிக்கு சுமார் 25 வயது இரு

க்கும். அவளுக்கு கொடுக்கப்பட்ட எண்ணெய் அவளது அடர்ந்த சுருட்டைக் கூந்தலுக்குப் போதாவிடினும் அதன் கருமை கண்ணைப் பறித்தது. கழுத்து, காது, கை எல்லாம் மூளி. பருவத்தின் பூரிப்பால் செழித்திருந்த அவளது அங்கங்களின் வனப்பை, சிறையில் கொடுக்கப்படும் சிவப்புச் சுங்குடிச் சேலையால் மறைக்க முடியவில்லை. அவளது சிவந்த உடல் அந்தச் சிவப்புப் புடவையின் நிறத்திலும், ஜன்னல் வழியே உள்ளே வந்த காலைக் கதிரவனின் சிகப்புக் கிரணங்களின் ஒளியாலும் மிகுந்த வனப்புடன் விளங்கியது. அவளை ஓர் அழகி என்றே கூறலாம்.

தன் உத்யோக அனுபவத்தில் எவ்வளவோ அழகு மிகுந்த பெண்களைச் சோதித்திருந்தபோதிலும் இந்தக் கைதியின் அழகு டாக்டரின் மனதில் ஓர் சிறு புயலை ஏற்படுத்தியது. அவளுக்குச் செய்ய வேண்டிய வைத்தியத்தை தனது உதவி டாக்டரிடம் கூறி, "இரவு எந்த நேரத்திலும் அவளது உடல் நிலை மோசமடையக் கூடும். அப்பொழுது உடனே என்னை டெலிபோன் மூலம் கூப்பிடத் தயங்க வேண்டாம்" என்று உத்தரவிட்டு வெளியேறினார், டாக்டர் ஸுவர்ண - தனது இதயத்தைப் பறிகொடுத்து விட்டு.

டாக்டர் ஸுவர்ண ஓர் தனிக்கட்டை. சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து விட்ட அவர் பணம் படைத்த பாட்டி ஒருத்தியின் உதவியால் பட்டமும், பதவியும் பெற்று வைத்திய உலகிற்கே ஓர் அணிகலனாகத் திகழ்ந்தவர். தனது திரண்ட சொத்துக்களை அவருக்கே எழுதிவிட்டு இறந்து விட்டாள் அந்த மூதாட்டியும். அவரது வீட்டில் அவரை வரவேற்க மூவர்தான் உண்டு. அவர்கள் முறையே, நாய், தோட்டக்காரன், சமையற்காரன்.

வழக்கமாக குதுகலத்துடன் விளங்கும் அவர், அன்று நடந்து கொண்ட விதம் எல்லோரையும் நடுங்கச் செய்தது. அவர் மனநிலையை தெரிந்ததுபோல் அந்த நாய் கூட அறையின் ஓர் மூலையில் அடக்கமாய் உட்கார்ந்து கொண்டு தன் வாலை நக்கிக் கொண்டிருந்தது. வானொலியின் இரவு செய்திக்கதிர் ஆரம்பமாயிற்று.

அறையின் மூலையிலுள்ள டெலிபோன் மணி அடித்தது. டாக்டர் போனைக் கையில் எடுத்தார். சிறையிலிருந்து தான் காலையில் பார்த்த அந்தக் கைதி மிகவும் அபாய நிலையில் இருப்பதாகத் தெரிவித்தார் அவரது உதவி டாக்டர்; "இதோ புறப்படுகிறேன்" என்று பதிலளித்தார் டாக்டர் ஸுவர்ண.

டாக்டரது பங்களாவிலிருந்து சிறைச் சாலை 7 மைல்கள்; டெலிபோன் வந்த மறு நிமிடமே டாக்டரின் 'வான கார்டு' சிறைச்சாலையை நோக்கி காற்றைக் கிழித்துக் கொண்டு சென்றது. போலிஸார் கார்கள் செல்ல வேண்டிய வேகக் கட்டுப்பாட்டு விதிகளைக் குறிக்கும் சிவப்பு அறிவிப்பு பலகைகள்

அந்த காருக்கு வெறும் சுவ ரொட்டிகளாயின. அந்தக் காரின் வேகநிலையை நிர்மா ணித்த விஞ்ஞானிகளுக்கு வந்த னம் செலுத்தியது அவர்மனம். ரஸ்தாவின் நடுவில் தூங்கிக் கொண்டுருந்த நாய்கள் அந் தச் சக்கரங்களின் அடியில் நசுங்குண்டு மாளாமல் இருந் தது விந்தையே; கால் மணி நேரத்தில் கடக்கவேண்டிய தூரம் 5 நிமிடத்தில் பறந்தோ டிவது.

தூங்கி வழிந்து கொண்டி ருந்த சிறை "கேட் கீப்பர்" பெரிய டாக்டரைக் கண்டு சாவிக்கொத்திலிருந்து ஜெயில் பூட்டைத்திறக்கும சாவியைக் கண்டுபிடிக்கத் திண்டாடினன். "நீ கதவைத் திறப்பதற்குள் உயிர் போனுலும் போய்விடும். சீக்கிரம்" என்று கோபித்துக் கொண்டார்.

அவள் ஜுர வேகத்தில் பிதற்றிக்கொண்டிருந்தாள்; படுக்கையில் இங்கும் அங்கும் உருளுவதால் கீழே விழாம லிருக்க அழுத்திப்பிடித்துக் கொண்டிருந்தார்கள் பெண் வார்டர்கள். அவர்கள்பிடிப்பை உதறித்தள்ளுவதில் அவள் மேல் ஆடைகள் சரிந்து கிடந் தது; டாக்டர் ஸுவர்ணு அவ ளைப் பரிசோதித்து விட்டு, தனது கைப்பையிலிருந்து ஒரு ஊசி மருந்தை எடுத்து தனது உதவி டாக்டரை குத்துமாறு செய்தார். மருந்துதன் வேலை யை சில விநாடிகளில் செய்ய ஆரம்பித்தது. வரவர கட்டுக் கடங்காமல் இருந்த அவளது ஜன்னி வேகம் குறைந்தது. உடல் நிலையில் ஓரளவு குணம் ஏற்பட்டபோதிலும் அபாயகர மான நிலைமாறவில்லை. ஆக வே டாக்டரும், உதவி டாக்டர் களும் ஜெயிலருக்குச் சொல்லி யனுப்பி அவள் கட்டிலருகே உட்கார்ந்து கொண்டனர். ஜெயிலர் துளசிங்கம் நாயுடுவும் முணுமுணுத்துக்கொண்டே வந்து உட்கார்ந்து கொண்டார்; குளுகோஸ் சர்க்கரையும் உப் பும் கலந்து ரத்தத்திற்குள் செலுத்தக்கூடிய மருந்து நீரை ரத்தக் குழாய்க்குள் ஊசியின் மூலமாகச்சொட்டு சொட்டாகச் செலுத்த ஆரம்பித்தனர்; முழங்கைகக்கு நடுவில் ரத்தக் குழாய்க்குள் நுழைக்கப்பட்டி ருந்த ஊசி நோயாளி புரளுவ தால் வெளியே வந்துவிடாமல் பிடித்துக்கொண்டிருந்தார் டாக்டர். கைதியின் நிலைமை மோசமாக இருப்பதாக மேலதி காரிகளுக்கும் சர்க்காருக்கும் டெலிபோன் மூலம் தெரிவிக் கப்பட்டது. இரவு ஒருமணிக்கு ஜுரவேகம் குறைந்தது; டாக் டர் ஸுவர்ணுவின் கைராசி அந்தக் கைதி பிழைத்து விடு வாள் என்ற நம்பிக்கை எல் லோர் மனதிலும் ஏற்பட்டது.

ஊசலாடிக்கொண்டிருந்த ஓர் நோயாளியின் உயிரைக்காப் பாற்றிய வெற்றிப் பெருமிதத் துடன் புறப்படத்தயாரானர், டாக்டர். அந்தச் சமயத்தில் அந்தப்பெண் தன் கண்களைத் திறந்து, "டாக்டர் நான் அபாயநிலைமைத் தாண்டி விட் டதை நீங்கள் உங்கள் உதவி டாக்டரிடம் கூறியதை அறி வேன். இந்த ஒரு நிசியில் ஓர் மகாபாபியான கைதியை காப்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் வருமானமும் செலவுகளும்

இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்கு கிடைத்த மொத்த வருமானம் 23·13 கோடி ரூபாய். பட்டுவாடா செய்யவேண்டிய தொகைப் பொறுப்புக்கள் 10·69 கோடி ரூபாய், கமிஷன் தொகை 3·31 கோடி ரூபாய், செலவுகள் 6.16 கோடி ரூபாய், பல வகை செலவினங்கள 0.31 கோடி ரூபாய் ஆகியவை வகையில் அவற்றுக்கு மொத்தம் 20.47 கோடி ரூபாய் செலவாகியது. 1.63 கோடி ரூபாய் ரிசெர்வ் நிதிக்கும், 1.03 கோடி ரூபாய் லாபக் கணக்குக்கும் சேர்க்கப்பட்டன.

—●—

இன்ஷ்யூரன்ஸ் ஆஸ்திகள்

1957 டிசம்பர் 31-ந் தேதியிருந்த நிலவரப்படி இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் ஆஸ்திகளின் மொத்த மதிப்பு 49·02 கோடி ரூபாயாகும்.

வெளிநாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளுக்கு பிரஸ்தாப தேதியில் இந்தியாவில் இருந்த ஆஸ்திகளின் மொத்த மதிப்பு 11-91 கோடி ரூபாய் ஆகும்.

இந்தியாவில் பொது இன்ஷ்யூரன்ஸ் தொழில் வளர்ச்சி வேக விகிதம் பின்னும் குறைந்துவிட்டதாக இந்த வருஷ ஆண்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1958-ம் ஆண்டில் இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகளுக்கு மொத்தம் 66,052 லைசென்சுகள் வழங்கப்பட்டன.

பாற்ற இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டதற்கு என்னால் ஒருவித நன்றியும் செய்வதற்கில்லை. மனக்கவலையாலும் 7 வருட சிறைவாசத்தினாலும் நொந்தும், நைந்தும், என் மனமும் உடலும், மிகவும் சோர்ந்து விட்டன. இனி நான் பிழைப்பேன் என்ற நம்பிக்கையில்லை. தன்னலமற்ற ஓர் தியாகி போன்ற உங்களிடம் என் சோக வரலாற்றைக் கூறி நான் குற்றவாளியா என்பதை அறிந்து கொள்ளவேண்டும். மரணத்தருவாயிலிருக்கும் இந்த என்வேண்டுகோளைத் தயவு செய்து தட்டாதீர்கள் டாக்டர் என்றாள். (தொடரும்)

பொன்மொழி

—●—

கடவுள் இருக்கிறார் என்பதும், அவர் அநீதியையும் அடிமைத் தனத்தையும் வெறுப்பவர் என்பதுவும் எனக்குத் தெரியும். புயல் நெருங்கக் காண்கிறேன். அதுவும் அவரது திருவுளமாயின், அதற்கு நான் தயார் என்று நான் கருதுகிறேன். எனக்கு அவர் ஒரு வேலை குறித்திருக்கிறார். என்பதே என் எண்ணம். நான் ஒன்றும் இல்லை; சத்தியமே எல்லாம்.

—லிங்கன்.

சென்னை ராஜ்ய அயர்ன் & ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ்

திருச்சியில் சங்க நிர்வாகக் கமிட்டி கூட்டம்

தீர்மானங்கள்:

சங்க தலைவர் ஸ்ரீ எம். கண்ணன் அவர்களின் ராஜினாமாக் கடிதம் வாசிக்கப்பட்டது. இவ்வாண்டுவரை தொடர்ந்து தலைவராக ஸ்ரீ எம். கண்ணன் அவர்களே இருக்கவேண்டுமென கேட்டுக்கொள்வதெனசென்னை ஸ்ரீ கே. பெருமாள் உடையார் பிரேரேபிக்க, சென்னை ஸ்ரீ ஏகாம்பரம் செட்டியார் அவர்கள் ஆமோதிக்க, ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகவே, தொடர்ந்து தலைவராக இருக்க இக்கூட்டம் ஸ்ரீ எம். கண்ணன் அவர்களை கேட்டுக் கொள்கிறது.

மாநாடு தீர்மானங்களில் சில சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கும் அதிகாரிகளுக்கும் அனுப்புவதற்கென அச்சிட்ட தீர்மானங்கள் வாசிக்கப்பட்டது. மாநாட்டின் தீர்மானத்தை ஒட்டி சங்க அலுவலகத்தை சென்னைக்கு மாற்றுவதென உள்ள தீர்மானம் பரிசீலிக்கப்பட்டது. இவ்வருஷ டிசம்பர் மாத (ஜெனரல்பாடி நடத்தும் சமயம்.) புது நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கும் சமயம் சென்னைக்கு மாற்றுவது என்று தீர்மானிக்கிறது.

"கூட்டுறவு சங்கம்" அமைப்பது சம்பந்தமான மாநாட்டின் தீர்மானம் கவனிக்கப்பட்டது. 'சென்னை ராஜ்ய அயர்ன் & ஸ்டீல் (மிகச் சிறிய) பேப்பரிகேட்டர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைட்டி லிமிடெட்" என்ற பெயரால் ஆரம்பிப்பது என்றும் ராஜ்யத்தில் உள்ள அப்ரூவ்டு பேப்ரிகேட்டர்கள் இதில் பங்கு பெறவும் வசதி செய்தும், கோவாபரேடிவ் சொஸைட்டியில் ஷேர் எடுப்பவர்கள், சங்கத்தில் அங்கத்தினராக சேர்ந்துக்கொள்ளவேண்டுமெனவும் ஷேர் 1-க்கு ரூ. 50/ வீதம் நிர்ணயிப்பது என்றும்; நபர் ஒருவர் 10 ஷேர் வரையில் எடுத்துக்கொள்ள அனுமதிக்கலாமென்றும், ஒரு நபருக்கு பிரவேசக் கட்டணம் ரூ. 5/- வீதம் என்றும் தீர்மானிக்கிறது.

இது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்க தலைவர் ஸ்ரீ எம். கண்ணன்; உதவிக் காரியதரிசி சென்னை ஸ்ரீ கே. ராதா கிருஷ்ணன் அவர்களையும் கன்வீனர்களாகவும் நியமிக்கிறது. இவர்கள் உடனடியாக ஆவன செய்து, ஷேர் தொகைகளை மேற்படி இருவர்களும் வசூல் செய்து, Bylaw க்களையும் Draft செய்து, சங்கத்திற்கு 1959 அக்டோபர் இறுதிக்குள் ரிப்போர்ட் சமர்ப்பிக்கும்படியும் மேற்படி இரு கன்வீனர்களையும் கேட்டுக்கொள்கிறது.

பல கடிதங்கள் எழுதியும் மாநாட்டு கணக்கு விபரம் இதுவரை கிடைக்காதது குறித்து வருந்துவதுடன் மாநாட்டு கணக்கு விபரம் அனுப்பிவைக்க மாநாடு வரவேற்பு கமிட்டி செயலாளர் சென்னை ஸ்ரீ கே. வி,

மதுரை ஜில்லா ஸ்டீல் பேப்ரிகேடர்ஸ் அஸோஸியேஷன்

மதுரை ஜில்லா ரெஜிஸ்டர்டு அயர்ன் அண்டு ஸ்டீல் பேப்ரிகேடர்ஸ் அஸோஸியேஷன் மீட்டிங், அஸோஸியேஷன் காரியதரிசி, திரு. கே. பி. இருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் நடந்தது ஷை மீட்டிங்கில் கீழ்கண்ட விஷயங்கள் தீர்மானமாயின.

1. சென்னை அரசாங்கத்தின் மூலமாக, மெம்பர்களுக்குத் தேவைப்படுகின்ற ஸ்கிராப்களை மொத்த அளவில் தரவழைக்கவேண்டும் (Wagon Load).

2. 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறுதொழில் உற்பத்தியாளர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் செய்து தரவேண்டும்.

i. தகடு முதலியவைகளை மாட்டும் இயந்திரங்கள் (Pressing Machine)

ii, தகடுமுதலியவைகளை வெட்டும் இயந்திரங்கள் (Shearlng Machine)

iii. ஸ்பிரே பெயிண்டிங் (Spray Painting)

iv. ஸ்டவ், (Stove Painting)

3. அஸிஸ்டன்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ், அவர்களைத் தலைமையாகக்கொண்டு நமது சங்க வருடாந்திரப் பொதுக் கூட்டம் விமரிசையாக நடத்த வேண்டும்.

4. தொழில்களுக்கு மெஷின்கள் முதலியனவற்றின் மீது கடன் வாங்குவதில் தற்பொழுது மிகவும் கஷ்டம் இருக்கிறது. ஆகையால் ஷை கடன் வசதிகளை, சுலபமாகப் பெறுவதற்காக சிறுதொழில் டைரக்டருக்கு (Director of Small Scale Industries) எழுதி ஆவன செய்யவேண்டும்.

5. மதுரை ஜில்லா கோவாப்ரேடிவ் ஸ்டாக் ஹோல்டர்ஸ் அஸோஸியேஷன் ஏற்படுத்துவதில் ஷை சொஸைடியின் ஷரத்துக்களை (Articles fo Association) தயாரிப்பதற்காக கீழ்கண்ட இரண்டு மெம்பர்களை அமைக்கவேண்டும்.

1. ஸ்ரீ.கே. முத்துச்சாமி 2. ஸ்ரீ ராகவன் அவர்கள் (மதுரை இரும்புத் தொழிற்சாலை, மதுரை).

ஆழ்வார் ஐயங்கார் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

சென்னை Asst. I & S. Controller க்கு Importers யிடம் வாங்கிக்கொள்ள கொடுக்கும் பர்மிட்களுக்கு Importer கள் சரக்கு கொடுக்க மறுக்கிறுர்கள். ஆகவே, Importer களிடம் சரியான அளவுக்கு (சரக்கு கிடைக்கும் படியாக) பர்மிட் அளிக்கவும் பேப்ரிகேட்டர்களுக்கு சரக்கு கிடைக்கவும் உதவி செய்யும்படி Asst. I & S Contioller க்கு உத்திரவிடுமாறு கல்கத்தா I & S. Controller (Sri A.S. Bam I.C.S.) அவர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

சென்னை ராஜ்யத்திலுள்ள Iron & Steel Industries 'craps களை நேரிடையாக இறக்குமதி செய்யும் Direct Importers லிஸ்டு ஒன்று நம் சங்கத்திற்கு ஒவ்வொரு முறையும் கொடுக்க வேணுமாய் அயர்ன் அண்டு ஸ்டீல் கண்ட்ரோலரை இக் கமிட்டி கேட்டுக்கொள்கிறது.

பட விமர்சனம்:

“ விநாயக சதுர்த்தி ” !

தயாரிப்பு: ஸ்ரீ கலாநிதி பிலிம்ஸ்

டைரக்ஷன்: சமுத்ராலா

வசனம்: எஸ். ஏ. சுப்பராமன்

முக்கிய நடிகர்கள்: ராமாராவ், ஜமுனா, கும்மடி, கிருஷ்ண குமாரி.

குழந்தைச் செல்வம் இல்லையே என்று ஏங்கும் தம்பதிகள் எத்தனையோ பேர் நம்மத்தியில் இருக்கிறார்கள்; இந்த ஏக்கம் மனிதவர்க்கத்தை மட்டும் தான் வாட்டுகிறது என்று நினைத்து விடாதீர்கள். பரமசிவன்-பார்வதிக்குக் கூட இந்த ஏக்கம் இருந்து கொண்டுதானிருக்கிறதாம். உலகையெல்லாம் படைத்த பரமசிவனின் மனைவி பார்வதி தேவி ஒரு குழந்தை தனக்கு இல்லையே என்று வருந்துகிறாள். தோழிகள் யோசனையின் படி, பிரமனை வேண்டுகிறாள். பிரமன் என்ன சாதாரண நபரா! கையை நீட்டினார். என்ன ஆச்சரியம்! 10 வயது குழந்தை பார்வதி முன் நிற்கிறது.

ஒருநாள் விநாயகன்நடன ஆட ஆரம்பித்துவிட்டார்! விநாயகன் நடனம் ஆடினால் யாராவது சிரிக்காமல் இருக்கமுடியுமா? சந்திரன் கிண்டலாக, விநாயகரை நக்கல் செய்ய ஆரம்பித்துவிட்டான். விநாயகருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது; ஆத்திரமடைந்தவிநாயகர், தான் பிறந்த நாளில் யார் உன்னைப்பார்க்கிறார்களோ, அவர்கள் கஷ்டம் அனுபவிப்பார் என்று சாபமிட, கிருஷ்ண பரமாத்மா, விநாயகர் சதுர்த்தியன்று பால்கிண்ணத்

தில் சந்திரனைபார்த்து விடவே அவர் கஷ்டப்படுகிறார். அப்பாவி கிருஷ்ணனும் கஷ்டப்படுகிறார்: இதுதான் கதை. பெயர் விநாயக சதுர்த்தி; ஆனால் படத்தின் பெரும்பகுதி கிருஷ்ணனைப்பற்றியே உள்ளது.

இந்திரஜித்து மன்னனிடம் சமந்தகமாலையைக்கண்டு பிடித்து கொடுப்பதற்கு கிருஷ்ணன் பல சிரமங்கள் அடைகிறார். அதற்காக ஜாம்பவானிடம் பலநாள் மல்யுத்தம் செய்கிறார். இறுதியில் ஏரோப்பிளான் ஆற்றில் ஜாம்பவனை வெற்றி பெறுகிறார்; வெற்றிபெற்ற கிருஷ்ணன், ஜாம்பவன் மகளைத் திருமணம் செய்கிறார். முடிவில் பாமாவையும் மணந்து கொள்கிறார்.

நடிப்பு

கிருஷ்ணனாக ராமாராவும், பாமாவாக ஜமுனாவும், ருக்மணியாக கிருஷ்ண குமாரியும் நடித்துள்ளார்கள். சூர்யகலா பார்வதியாக சுமாராக நடித்துள்ளார். ஜமுனா, கிருஷ்ணகுமாரி ஆகியோர்கள் நடிப்பு பரவாயில்லை. அருமையாக செட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புற காட்சிகள் நன்கு அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில், இந்த படம் காலத்திற்கேற்ற படமன்று. "விநாயக சதுர்த்தி" என்றும் படம் எடுக்க வேண்டுமா? படம் பார்க்கும் போது ஒரே தலைவலி. சமுதாயத்திற்கேற்றபடி நல்ல கருத்துக்கள் நிறைந்த படத்தை பட முதலாளி தயாரித்தால், எல்லோரும் ஆதரவு கொடுப்பார்கள். அதற்கு மாறாக இப்படிப்பட்ட படம் எடுக்கப் பட்டால், நிச்சயமாக போணியாகாது. தலைவலி மருந்து இருந்தால் வாங்கி வைத்துக்கொண்டு இந்த படத்தை பார்க்கச் செல்லலாம்.

—●—

மாலினியின் திருமணம்!

"சுபாஷ் மீனா" புகழ்மாலின் தன் திருமணத்தை ஜூலை மாதம் 23ந் தேதியன்று இரகசியமாக முடித்துக்கொண்டார். யாருக்கும் தெரியாமல், ஒருவர் மேல் காதல் கொண்டார். இரகசியமாக திருமணம் நடக்கும் அளவுக்கு காதல் கொண்டு போய்விட்டுவிட்டது. ஆர். எ. பிக்சர்சைச் சேர்ந்த திருராகவன் மாப்பிள்ளையானார். இத் திருமணம் திருப்பதியில் நடந்ததாம். இதையொட்டி ஆகஸ்டு மாதம் 23ந்தேதி மாலினி வீட்டில் ஒரு விருந்து நடைபெற்றது. விருந்து நடைபெற்ற பொழுதுதான், மாலினி, திருமணம் செய்துகொண்ட உண்மை வெட்டவெளிச்சமாக எல்லோருக்கும் தெரியவந்தது. இவ்விருந்தில், படமுதலாளிகள், நடிக நடிகைகள் பங்கு கொண்டார்கள். தற்போது குமாரி மாலினி, ஸ்ரீமதி.மாலினி ராகவன் ஆகிவிட்டார்.

எமலோகத்தில் தங்கவேலு!

பார்கவி பிக்சர்ஸார் தயாரித்துவரும் முழு நீள நகைச் சுவை படத்திற்காகஏராளமான

செலவில் மேலோகம் செட் வாஹினியில் போடப்பட்டது. தங்கவேலு எமலோகத்தில் சிலகட்டங்களில் நடிக்கிறார். இந்த படத்திற்குக் கதாநாயகனும் தங்கவேலுதான் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் ரங்கராவ் சௌகார் ஜானகி, சுந்தரிபாய், சாயிராம், சி. எஸ். பாண்டியன். கொட்டாப்புளி ஜெயராமன், முதலியோர் இப்படத்தில் நடித்துள்ளார்கள். கே. எஸ். கோபால் கிருஷ்ணன் கதைவசனம் எழுதியுள்ள இப்படத்தை சி. புல்லையா டைரக்ட் செய்துள்ளார்.

"எங்கள் குல தேவி!"

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பான எங்கள் குல தேவி என்ற சமூகப்படத்தில் பாலாஜி பண்டரிபாய், மைனாவதி, சூரியகலா, ஜாவர் சீதாராமன், வி. ஆர். ராஜகோபால், ஏ. கருணாநிதி, எம். சரோஜா, எஸ். எஸ். லட்சுமி, வி. எம். ஏழுமலை, பி. எஸ். ஞானம், வெங்கட்ராமன் முதலியோர் நடித்து வருகிறார்கள். "எங்கள் வீட்டு மகாலட்சுமி", "மஞ்சள் மகிமை" முதலிய படங்களுக்கு டைரக்ட் செய்த சுப்பாராவ்தான் இப்படத்தையும் டைரக்ட் செய்கிறார். படம் பத்தாயிரத்துக்குமேல் வளர்ந்து விட்டது. உள்ளத்தை உருக்கும் காட்சிகள் பல இடம் பெறுகின்றன. கதைப்போக்கு முற்றிலும் புதிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. நகைச்சுவை நிகழ்ச்சிகள் நிறைய இடம் பெறுகின்றன. மியூசிக் டைரக்டர். கே. வி. மகாதேவன் இசை அமைத்திருக்கிறார்.

எப்படி இருக்கிறேன்? அழகாயில்லையா? என்கிறார் நடிகை ராஜசுலோசனா.

"வைஜயந்திமாலா"

ராஜாவும், சுசிலாவும் பாடிய பாட்டான் "கண்ணாலே நான் கண்ட "கணமே" என்ற இனிமையான பாட்டு கொல்டன் ஸ்டுடியோவிலிருந்து காற்றில் மிதந்துகொண்டிருந்தது.

இந்த குயிலிசைக்குத் தகுந்தவாறு, நடனம் ஆடிக்கொண்டிருந்தார் வைஜயந்திமாலா; ஜூபிலி பிக்சர்ஸாரின் தயாரிப்பான பார்த்திபன் கனவுக்காக இக்கனவு காட்சி, கோல்டன் ஸ்டுடியோவில் சுடப்பட்டது; குந்தவி காதலன்

விக்ரமனுடன் இருப்பதாக கனவுகாணும் காட்சியாகும் இது; இதில் விக்ரமனுக ஜெமினி கணேசன் நடித்து வருகிருர். மற்றும் ரங்காராவ், பாலையா, வீரப்பா, சுப்பையா, அசோகன் ராகினி, மாலினி, ஜாவர் சீதாராமன், முதலியோர் நடித்து வரும் இப்படத்தை யோகானந்த டைரக்ட் செய்து வருகிருர்; வேதா இசை பொறுப்பை ஏற்றுள்ளார். செல்வராஜன் ஒளிப்பதிவை ஏற்றுள்ளார். இதன் தயாரிப்பாளர்கோவிந்தராஜனுவார். இப்படம் 15,000 அடிகள் வளர்ந்துள்ளது.

"சரோஜாதேவி"

தென்னிந்தியா பிரபல நடிகை பி. சரோஜாதேவி மீண்டும் இந்திபடத்தில் நடிக்கிருர். "தேவரிஷி நாரதர்" என்ற இப் புராணபடத்தில் பிஞசந்த், ஜீவன் முதலியோரும் நடிக்கின்றனர். ஏற்கனவே பி. ஆர். பந்துலு தயாரித்த ஸ்கூல் மாஸ்டர் இந்த படத்திலும் சரோஜாதேவி நடித்துள்ளார்.

"ராக் அண்டு ரோல்" நடனம்!

தமிழ் சினிமாக்களில் காட்டப்படும்" ராக் அண்டு ரோல்" நடனக் காட்சிகளுக்கு தடை விதிக்கும் யோசனை சர்க்காருக்குக் கிடையாது எனறு உள்நாட்டு மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் சட்டசபையில் கூறினர்.

"ராக் அண்டு ரோல்" என்ற நடனம் ஆணும், பெண்ணும் சேர்ந்து உராய்ந்து கொண்டு ஆபாசமாக ஆடும் ஒரு நடனமாகும். இந்த நடனத்திற்கு நல்ல கிராக்கி தமிழ்ப் படங்களில் இருக்கிறது. ராக் அண்ட் ரோல் தமிழ் படங்களில் புகுத்தப்படுவதால் நல்ல வசூலாகிறது என்று தெரிய வருகிறது. மேல் நாட்டைச்சேர்ந்த இந்த நடனம், தமிழ் படங்களில் புகுத்தப்படும்போது, படமுதலாளிகள் சிறிது கவனம் செலுத்துவது சாலச் சிறந்ததாகும்.

வ. உ. சி. வரலாறு படமாகிறது

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனுரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக வெளி வரும். சிதம்பரனுராக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்பார். கட்டபொம்மன் திரைப்படம் வெளிவர, ம.பொ. சிவஞானம் ஏற்பாடு செய்து வருகிருர். தமிழ்நாட்டு வீரர்களில் தலைசிறந்த வ. உ. சி. யின் வரலாற்றைப் படமாக்கி, நாட்டுப்பற்றை மக்கள் மத்தியில் பரப்புவது ஒரு அரும் பெரும் பணி என்பது குறிப்பிடத்தக்கது.

"குறவஞ்சி"யில் காமவெறியன்!

சிற்றரசன் முகாரியும், அதன் தளபதியும், அந்நாட்டு அழகியப் பெண்களை கற்பழிக்கும் வேட்டையில் இறங்கினர்கள்; அழகுள்ள பெண்களுக்கு அங்கு ஆபத்து எதிர் நோக்கிக் கொண்டிருந்தது; மருண்ட பார்வையுடையப் பெண்களை மார்போடுத் தழுவத் துடிதுடித்தான் சிற்றரசன். கயல் விழிகளையுடைய நங்கையர்களை கற்

பழிக்க, கடும் பிரயத்தனம் எடுத்த சிற்றரசன் பிடியிலிருந்து தப்ப, அழகிய நங்கைகள், தலைமறைவு வாழ்க்கை நடத்தும் நிலை ஏற்பட்டது. இதைக் கேள்வியுற்ற அச்சாம்ராஜ்யத்தின் அரசன் மகள் குமரி தன் தகப்பனுர், ஆட்சியின் கீழுள்ள சிற்றரசன் முகாரி செய்யும் அட்டூழியங்களைக் காண யாத்திரை செல்லும் மாறு வேடத்தில் அங்கு வந்தாள்; வந்த இடத்தில் ஒரு செம்படவரையும் அவர் மகள் பொன்னியையும் கண்டாள். அந்த செம்படவன் தன் மகளை மிகவும் கவனமாக, பத்திரிமாக வைத்திருப்பதைக்கண்ட இளவரசி அந்நாட்டில் பெண்கள் வேட்டையாடப்படும் இழிநிலையைக் கேள்விபட்டு கொதிப்படைந்தாள். "நீ மூக்கு முழியுமா, அழகா இருக்கே இந்த நாட்டில் நீ ஜாக்கிரதையாக இருக்கணும்" என்று இளவரசிக்கு எச்சரிக்கை விட்டான் அந்த செம்படவன்; இச்சமயம் யாரோ வரும் சந்தடி கேட்க, இளவரசியை இழுத்துக்கொண்டு தன் குடிசைக்குள் அழைந்தான் அந்த செம்படவன்; வேலியே பயிரை பேயும் நிலை, தன் நாட்டில் நிலவுவதைக்கண்டாள் இளவரசி..

இக்காட்சியில் இளவரசியாக சாவித்திரியும், பொன்னியாக மைனாவதியும், நடித்தனர். காசிலிங்கம் இப்படத்திற்கு டைரக் செய்கிருர். கருணாநிதி கதை வசனம் எழுதியுள்ள இந்தக் காட்சியை குறவஞ்சியில் நீங்கள் பார்க்கலாம்.

"கிருஷ்ணன்-மதுரம்"

குற்றாலம் பிக்சர்ஸ் தங்கள் முதல் தயாரிப்பான "கிருஷ்ணன்-மதுரம்" என்ற படத தயாரிப்பில் வேகமாக முனைந்துள்ளனர். இப்படத்திற்காக இரண்டு பாடல்கள் கோல்டன் ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டன "என்ன சுகம், ஆஹா என்ன சுகம்" என்ற கண்ணதாசனின் பாடலும் "கிட்டக் கிட்ட நெருங்கி வந்து" என்ற சுப்பு ஆறுமுகத்தின் பாடலும் பதிவு செய்யப்பட்ட பாடல்களாகும். இதில் கதாநாயகிக்கான பாடல்கள் அத்தனையும் டி. வி. ரத்தினம் பாடுகிருர். இப்படம் ஒரு முழுநீள நகைச்சுவை படமாகும்.

சுப்பு ஆறுமுகம் கதை வசனம் எழுதியுள்ளார். இது வரையில் என். எஸ். கே. மதுரம், வி. ஆர். ராஜகோபால், புளிமூட்டை ராமசாமி முதலியோர் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றனர். மற்றுமுள்ள நடிகர் தேர்வு விரைவில் நடைபெறும். டைரக்ஷன் கே. வேம்பு; இசை அமைக்கும் பொறுப்பை தட்சிணு மூர்த்தி ஏற்றுள்ளரார். இது ஒரு கற்பனைத் திரமாக இருக்குமென்று தெரிய வருகிறது.

"காதல் கலியாணம்"

ரங்கூன் பிலிம் சார்ரின் காதல் கலியாணத்தை விரைவில் முடித்து டிசம்பரிலேயே வெளியிட முடிவு செய்துள்ளனர். பிரேம் நஸீர், ராஜசுலோசனா, டி. ஆர். ராஜகு

ஜெயலக்ஷுமி பிக்சர்ஸாரின் "நடமாடும் தெய்வத்தில்" ஒரு பரபரப்பானகாட்சி!

தமிழ்நாடு ... 208364 ...

மாரி, பாலையா, நாகையா, முத லியோர் நடிக்கும் இப்படத்திற் கதை வசனத்தைத் துறையூர் மூர்த்தி எழுதியுள்ளார். இசை பொறுப்பை தட்சிணாமூர்த்தி யும், டைரக்ஷன் பொறுப்பை ராமண்ணாவும் கவனித்து வரு கின்றனர் இதன் தயாரிப்பாளர் ரங்கநாதனாகும்.

ராஜா-ஜிக்கி நன்கொடை

பிரபல பின்னணி கலைஞர் தம்பதிகளான ராஜாவும்-ஜிக்கி யும் வேலூர் கல்லூரிக்கு ரூபாய் 13,000 நன்கொடை அளித் துள்ளனர். முன்பு ராஜா படி த்த அக்கல்லூரிக்காக ராஜா வும் ஜிக்கியும் கடந்த 2-ந் தேதி இசை விருந்து நடத்தி அதன் மூலம் வசூலான தொகையை நன்கொடையாக அளித்தனர்.

புதுமனை புகு விழா!

திரைப்பட ஒப்பனைக் கலை ஞர் திரு. தனக்கோட்டி தியாக ராயநகர் புதிய போக் ரோடில் கட்டியுள்ள தனது புது மனை யின் புகுவிழாவைச் சிறப்பாக நடத்தினர். பத்மினி, ராகினி, முதலியோர் அனைவரையும் வரவேற்றனர், கலைஞர்களும், நண்பர்களும் வந்து விழாவைச் சிறப்பித்தனர். விழாவையொ ட்டி விருந்தும் ஏ. கே. சி. நட ராஜன் கிளார்னெட் இசையும் குசலகுமாரி குழுவினர் நடன மும் நடைபெற்றது.

Edited & Published by K. Perumal Udayar,
EdapalayamStreet, Madras-3. Asst. Editor: C. J. Marthandam.B.A.
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.

தனிப்பட படித்து "உட்கல்"
பல்கலைக்கழகம் மூலம் பட்டம் பெற இதுவே கடைசி வாய்ப்பு!
தனிப்பட படித்து தேர்வு பெற பல்கலைக்கழகம்
அனுமதியளித்துள்ளது.

பயிற்சிக்கும் வெற்றிக்கும் உத்திரவாதம்

தபால் மூலம்

இலவசக் கல்வி போதனை

(ஸ்தாபிதம் 21-3-52.)

தமிழ் அறிவுபெற்ற ஆண்-பெண் இருபாலரும் பள்ளியில் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேர்வில் தேறியவர்களும், தவறியவர்களும் கீழ்க்கண்ட 59-60ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு மாதம் மும்முறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். தேர்வின் வெற்றிக்கும், பாடங்கள் அனுப்பிப் பயிற்சியளிப்பதற்கும் உறுதிப் பத்திரம் வழங்குகிறோம். மாணவர்களின் கஷ்ட-நஷ்டங்களுக்கு எமது உத்திரவாதப்பத்திரம் பொறுப்பேற்றுக்கொள்கிறது.

(1) உத்கல்; B. A.; (2) B. Com.; (3) I. Com; (4) Inter; (5) Madras Metriculation; (6) Pre-University; (7) தமிழ் வித்வான் வகுப்புகள்; (8) சர்வீஸ் கமிஷன். (9) (S. S. L. C. (Oct. 59 & March 60); (10) E. S. L. C. (11) கைத்தறி நெசவு; (12) விவசாயம்; (13) Accountancy; (14) Overseer; (15) Postal-clerk; (16) Postman; (17) கிராமமணியம் & கர்ணம்; (18) ஹிந்தி வகுப்புகள் (பிப்ரவரி 60); (19) ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்); (20) கிராம வைத்தியம்; (21) பேசிக் ஆங்கிலம்.

1949-ம் ஆண்டு முதல் சொந்த அச்சகத்துடன் பல கிளை நிலையங்கள் நிறுவி ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலவசக் கல்வி பயிற்சியளித்து வருகிறது நமது கல்வி ஸ்தாபனம். வகுப்புகளின் முழு விபரங்களுக்கு 15 n p. ஸ்டாம்புடன் விண்ணப்பித்து நமது வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று பயன் அடைய அன்புடன் அழைக்கிறோம்.

கிளைகள்:- சென்னை, சிலோன், மலேயா & தென் ஆப்ரிக்கா.

தமிழ் நாட்டின் தனிப்பெறும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம்

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிட்யூட்

ரிஷிவந்தியம் S.O. தென் ஆற்காடு Dt.
கிளைகள்: சென்னை, மலேயா, சிலோன் & தென்னாப்ரிகா.

For Fresh Drinks! Better Drinks!! Delicious Drinks!!!

ALWAYS INSIST ON

"BABY BRAND"

Aerated Waters & Crushes

(Trade Mark Registered)

MANUFACTURERS

BABY AERATED WATER WORKS

15, Singara Garden 7th Lane,

Washermanpet : : Madras - 21.

Phone: 5304

Available all over Madras.

Wrapper printed at Sampath Press, 42, Elephant Gate Street, Madras-1.